www.tamilarangam.net

# நண்பன்

42404016

மலர் 10 பிரான்சின் தமிழ் இதழ் ஜூலை 87

விண்வெளியில் முதலில் மனிதனைப் பறக்கச்செய்த அமெரிக்காவுக்குப் போட்டியாக விமானப் படைகளை வைத்துள்ள சோவியத் ரஷியாவின் தலைநகரம் மாஸ்கோவில் - ஜனாதிபதியின் கிரெம்ளின் மாளிகை அருகிலேயே விளையாட்டு விமானம் ஒன்றை மேற்கு ஜெர்மனி இளைஞர் ஒருவர் இறக்கினார்

ரஸ்ட் என்ற பெயருடைய அந்த இளைஞர் மாஸ்கோவில் விமானத்தை இறக்க நீண்ட நாட்களாகவே திட்டமிட்டார் இதற்காக ரஷிய வரைபடங்களை எல்லாம் வாங்கித்தள்ளினார்

அந்த விமானத்துக்கு விளம்பரம் தேடுவதற்காகவே, அந்த விமானக்கம்பெனி இப்படி ஒரு 'ஸ்டண்ட்' வேலையைச் செய்திருக்குமோ என்று ரஷிய பாதுகாப்புத்துறை கருதுகிறது



பக்கம்... 53

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# எங்கள் நல்வாழ்த்துக்கள்!

மலிவு விலையில் தரமான பொருள்கள்

- சகலவிதமான மளிகை சாமான்கள்
- புதிய டிசைன்களில் ஜப்பான், அமெரிக்கன்,
- இந்திய புடவைகள்
- புதன்கிழமை தோறும் பச்சை காய்கறிகள்,

☆ வெண்டைக்காய், தேங்காய்,
☆ பச்சை மிளகாய், இஞ்சி,
☆ ஆகியவற்றிற்குத் தாங்கள் வருகை தரும்படி
☆ அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். ☆

வியாபாரிகளுக்கு தனிச்சலுகை

# JAWEED
# INTERNATIONAL
# BAZAAR

201, rue du Faubourg Saint-Denis
75010 PARIS Téléph. 42 09 43 70
Métro : La Chapelle et Gare du Nord

வருகைதாருங்கள்!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# QĀSRE SHIREEN

## PATISSERIE FRAICHE ET SALON DE THE

*இந்திய ஈழ பாகிஸ்தானிய இனிப்பு
கார உணவு பலகார வகைகள் எம்மிடம்

*தரமான முறையில்

*குறைந்த விலையில்

தயாரித்து விற்கப்படுகின்றன. பிரான்சில்
உள்ள ஒரே இந்திய ஸ்வீட் ஸ்டால்
இது மட்டுமே. வாடிக்கையாளர்களுக்கு
மொத்த விலையாக விலையையே தருகிறோம்
என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*வகைவகையான பலகாரங்களை
ருசிக்க இன்றே விஜயம் செய்க. ஓர்டர்
தருபவர்கள் ௨ தினங்களுக்கு முன்பாக
கொடுக்க வேண்டும். * * * * *

**172, RUE DU FAUBOURG ST. DENIS - 75010 PARIS**
**TÉL. 42.49.19.30 Métro : GARE du NORD**

SARL AMBALA

QASRE SHIREEN

*RASSE MALAY
*MOTI CHOUR
*GOLABE JAMANE
*AMRATIE
*PATISSA
*SOHNE HALWA KARACHI etc

(GATEAUX ET BISCUITS)

*SAMOSSA
*NAMAK PARE
*MOEGRE
*DALLEENS etc

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடவுளை நம்பாதவருக்கு வாரியார் அறிவுரை என்ன?



**கே**ள்வி: 'வாரியார்' என்று தங்களை எல்லாரும் அழைக்கிறார்களே? அந்தப் பெயர் யாரால் இடப்பட்டது?

வாரியார்: என் தந்தையார் மல்லையதாசர், சமானமில்லாத பெரிய தமிழ்ப்புலவர். 1906ல் ஆவணியில் சுவாதி நட்சத்திரத்தில் நான் பிறந்ததால், பெயர் ரு, ரூ, ரே, ரோவில் வர வேண்டும். தமிழில் முதலில் இவை வராது. அதனால் 'கிருபானந்த வாரி' என்று நாமகரணம் செய்தார். 'மகம்' நட்சத்திரத்திலே பிறந்த என் தமையனார் பெயர் மதுசூதனன். கூப்பிடும்போது, ரெட்டியார், செட்டியார் போல என்னை மரியாதையாய் 'வாரியார்' என்று அழைக்கிறார்கள். வாரி என்றால் கடல் அல்லது செல்வம் என்று பொருள்படும். லௌகீகச் செல்வம் அல்ல; கிருபானந்த செல்வம், கடல்.

கேள்வி: தங்கள் இள வயது, இத்துறையில் வளர்ந்த விதம் பற்றிக் கூறுங்களேன்...

வாரியார்: என் தகப்பனார் என்னைப் பள்ளிக்கூடமே அனுப்பாமல் மூணு, மூணரை வயதிலேயே பக்கத்தில் வைத்துக் கொண்டு, இலக்கணம், இலக்கியம், சமஸ்கிருதம், சித்தாந்தம் எல்லாம் கற்றுக் கொடுத்தார். படிப்பைவிட, பண்பாடே முக்கியம் என்று அவர் சொல்லிக் கொடுத்தார். ஏழெட்டு வயதிலேயே எனக்கு கவிபாடும் ஆற்றல் இருந்தது. பனிரெண்டு, பதிமூணு வயதில் சுமார் 10,000 பாடல்களை மனப்பாடம் பண்ணிவிட்டேன். பதினேழு, பதினெட்டு வயதில் பிரபலமாய் சொற்பொழிவு செய்யத் தொடங்கிவிட்டேன்.

கேள்வி: தங்களின் துணைவியாரைப் பற்றிக் கூறலாமே!

வாரியார்: என் தாய் மாமா மகளையே கல்யாணம் பண்ணிக் கொண்டேன். அமிர்தலக்ஷ்மி என்று பெயர். குடும்பத்திலே ஈடுபட்டே னெனொழிய, இளமையிலேயே தினம் ஓர் ஊராய்ப் போனதால், பேருக்குத்தான் குடும்பம் என்று இருந்தது. இறைவன் திருப்பணி, தொண்டு இதிலேயே ஈடுபட்டதால், குடும்பம், பாசம், நேசம் இதெல்லாம் மற்றவர்கள் மாதிரி எனக்கில்லை. வாழ்க்கை தொண்டு செய்வதிலேயே கழிந்தது.

கேள்வி: நீங்கள் இரவில் கஞ்சி மட்டுமே பருகுவதாய்க் கேள்விப்பட்டோமே?

வாரியார்: இரவில் விரைவில் செரிக்கக் கூடிய உணவு கஞ்சி. நான் இருபது வருடங்களாய் இரவில் கொஞ்சம் பால் சேர்த்த கோதுமைக் கஞ்சிமட்டுமே பருகிவருகிறேன். அது எளிதில் ஜீரணமாகி, உடல் நலத்தைப் பாதுகாக்கிறது.

கேள்வி: கடவுள் மேல்நம்பிக்கை இல்லாதவனுக்கு உங்கள் அறிவுரை என்ன?

வாரியார்: நோயாளி, வைத்தியனிடத்தில் நம்பிக்கை இல்லை என்பது எத்தனை வருந்தத் தக்கதோ, அத்தனை வருந்தத்தக்கது இதுவும். உலகில் நம்பிக்கை இல்லாமல் ஒருகணம் கூட வாழ முடியாது. முன்பின் தெரியாத டாக்சி டிரைவரை நம்பிப் பயணம் செய்கிறான்; முன்பின் தெரியாத கம்பவுண்டர் தருகிற மருந்தைச் சாப்பிடுகிறான். ஒரு கைகாட்டி மரத்தை நம்பி வழி நடக்கிறான். எனவே நம்பிக்கைதான் மனிதனை உயர்த்தும்.

கேள்வி: பெண்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?

வாரியார்: பெண்களுக்கு பக்தி அதிகம். தம் குழந்தைகளுக்குக் குழந்தைப் பருவத்திலேயே ஞானியாய்ப் போன துருவன், பிரகலாதன், போன்றவர்கள் கதைகளைச் சொல்லி, அவர்களைப் பக்தியில் ஈடுபட வைக்க வேண்டும். பிஞ்சுப் பருவத்திலேயே அவர்களுக்கு நல்லொழுக்கங்கள் பற்றிய உணர்வுகளை உண்டாக்க வேண்டும்.

ஆதாரம்:

**வாழ்க்கையில் முன்னேற வாரியார் பதில்கள்**

(வெளியீடு: குமரி பதிப்பகம், நாகப்பட்டினம். விலை ரூ 7.50)

தொகுப்பு: **மௌஷ்மி**

www.tamilarangam.net


எம்மிடம்

புதிய, பழைய ORIGINAL,
விடியோ கஸெட்டுகள்
சிறந்தமுறையில்
ஒலிப்பதிவு செய்யப்பட்ட
பாடல்கஸெட்டுகள்
மற்றும் ORIGINAL
THOMSUN, PYRAMID.
கஸெட்டுக்களையும்
உங்கள் திருப்திக்கமை
மைய பெறுக்கொள்
ளலாம்.

✱ ஜ·ஸ·ஜ-வீடியோகிளப் ✱

7, RUE JULES VERNE, PARIS - 75011.

☎ 47.00.48.45.

✱ உங்கள் திருப்தியே எங்கள் சேவை ✱


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# எங்கள் நல்வாழ்த்துக்கள்!

இலங்கை, இந்திய, பிரான்ஸ் மளிகைப்பொருட்கள் மங்கைய
மனம் கவரும் நவீன டிசைன்களில் ஆபரணங்கள் * வண்ணப்
புடைவைகள்
திருமண வைபவங்களுக்குரிய சிற்றுண்டி வகைகள் மற்றும் உணவு
வகைகள் பட்டய அலங்கார பொருட்கள், மணமக்களின்
அலங்காரப் பொருட்கள் யாவையும் பூர்த்தி செய்ய
இன்றே நாடுங்கள் காந்தி மாசே
அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

## ☆ GARNDHI MARCHE ☆

6, RUE DES QUATRE CHEMINS
93300 AUBERVILLIERS
FRANCE.

M° : (7) AUBERVILLIERS 4 CHEMIN
AUTOBUS : 130-150-170-18

TÉL. 48.39.39.22

Pereferic : Porte la Villette

www.tamilarangam.net

# நண்பன் பரிசுத்திட்டம் - 1

I பரிசு : நீமெகுயின் சேலை [மதிப்பு 150 F]

வழங்குபவர் : **JAWEED** INTERNATIONAL

II பரிசு : 100 F மதிப்புள்ள சேலை

வழங்குபவர் : **J.S.J.V.** CLUB, BELLEVILLE

III பரிசு : 50 F மதிப்புள்ள இனிப்பு, காரம்

வழங்குபவர் : BHAI BHAI SWEETS, GARE DU NORD

<u>நிபந்தனை</u> : கீழ்க்கண்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து மேற்கண்ட கடைகளில் கொடுத்தால் போதுமானது.

## நண்பன் பரிசுக் கூப்பன்

பெயர் :

முகவரி :

டெலிபோன் :

26 ஜூலை ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும் குலுக்கலில் கலந்து கொள்ளும் நேயர்களுக்கு 3 பரிசுகள் முறையே அளிக்கப்படும். பரிசு பெற்றவர்களுக்கு தகவல் தபாலில் அல்லது தொலைபேசியில் தெரிவிக்கப்படும்.

சந்தா செலுத்துபவர் MADAME LALITA என்ற பெயரில் 100F செக்கை மேற்படி கடைகளில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்து இலவசமாக மலரைப் பெறலாம்.

அல்லது NANBAN, 4 Bis Rue A. Thomas, 94500 champigny S/M முகவரிக்கு ரு கை அனுப்பினால் மலர் இலவசமாக அனுப்பப்படும்.

இக்கூப்பனை மேற்கண்ட கடைகளில் கொடுப்பவர் நண்பன் விசேட மலர் - உ 88 பிராங் விலையில் பெறலாம். மற்றவர்களுக்கு பிராங்.

ஒரு வருட சந்தாதாரர்களுக்கு இம்மலர் இலவசம். மற்ற கடைகளில் இம்மலரை பெற முடியாது.

சந்தா விபரம்

12 இதழ்கள் 100 பிராங்

இதற்கிடையில் வரும் விசேட மலர்கள் இலவசம்.



# பைசா நகரக் கோபுரத்தின் கதி என்ன?

சாய்ந்து கொண்டிருக்கும் பைசா நகர கோபுரத்தின் கதி என்ன? அதிகம் போனால் 80 ஆண்டுகள் கெடு வைத்திருக்கிறார்கள் கட்டிடக்கலை வல்லுனர்கள். 1911ம் ஆண்டிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 19ம் தேதி காலை 5 மணிக்கு அறிவியல் வல்லுனர்கள், ஆயுதங்களோடு இங்கு சுற்றுப் பயணம் செய்து, எத்தனை இன்ச் சாய்ந்துள்ளது என கணக்கிடுகிறார்கள். இதுவரை 14 அடி 10 இன்ச் அது சாய்ந்துள்ளதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். 12ம் நூற்றாண்டில் பொனுனோ எனும் வல்லுனரால் துவக்கி வைக்கப்பட்ட இக்கோபுரம், நான்கு நபர் கைமாறி கடைசியாய் 1350ல் முடிக்கப்பட்டது. 29 டன் எடையுள்ள 7 ராட்சத மணிகள் இதன் உச்சியில் இருக்கின்றனவாம். இந்த மணிகளின் சப்தம் விஞ்ஞானிகளின் காதுகளில் பட, இந்த ஒலி அதிர்வினால் சாயும் விகிதம் அதிகரிக்கக் கூடுமென்ற பயத்தில், மணியோசைக்குத் தடை விதித்திருக்கிறார்கள். ஒலிச் சீர்கேடு (Noise Pollution) கூடுமானவரை தவிர்க்கப்படுகிறது.

பலர் பலவிதமான ஐடியாக்கள் அளித்தாலும், பெரும்பான்மையான முறைகளால் சாய்வு விகிதத்தைக் குறைக்க முடியவில்லை. சில ஐடியாக்கள் ரொம்பவும் வேடிக்கையானவை: கோபுரத்தைச் சுற்றி இரும்பால் கவசம் ஏற்படுத்தி, வலு பொருந்திய காந்தத்தைக் கவசத்திற்கு அருகில் பொருத்துவது என்பது அவற்றில் ஒன்று.

அமெரிக்க புரொபஸர் யாவோ டீலியர் சகா புரொபஸர் கொலோ நெட்டி போன்ற அறிஞர்கள் கூறிய நடவடிக்கைகளை எடுக்க இத்தாலி நாட்டு பொதுப் பணித்துறை தயங்கி வருகிறது. காரணம் சுற்றுலாப் பயணிகளால் வரும் அந்நியச் செலாவணியை இழக்க வேண்டி வருமோ என்ற பயம்தான். ஆண்டுதோறும் வரும் 4,00,000 சுற்றுலாப் பயணிகளை இழக்க, இத்தாலிய அரசு தயாராக இல்லை.

இதே நிலை தொடர்ந்தால் இத்தாலி பைசா நகர கோபுரத்தையே இழக்க வேண்டி வருமோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முதல்வரின் பொறுப்புகள் பண்ருட்டிக்கு மாற்றம்

## கொள்கை முடிவுகளை எம்.ஜி.ஆர். எடுப்பார்



சென்னை, ஜூன் 1-

முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர் வகித்து வந்த பல முக்கியமான நிர்வாக பொறுப்புகள் உணவு அமைச்சர் பண்ருட்டிராமச் சந்திரனுக்கு மாற்றப்பட்டு விட்டது. இனிமேல் துறைகள் சம்பந்தப்பட்ட கோப்புகள் அனைத்தும் 'முதல்வரின் ஒப்புதலுக்கும் செல்லாமல் உணவு அமைச்சர் மட்டத்திலேயே முடிவு எடுக்கப்படும். இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவு மூலம் தல்வரின் பொறுப்புச்சுமை ் குறைவதோடு பிரச்னை ் மீது விரைந்து முடிவு ஒக்க வகை செய்யும்.

துணைச் செயலாளர்கள், டுதல் செயலாளர்கள் அந்ஸ்து வரையில் பதவி யர்வு, மத்தியஅரசுபணிக்கு ாற்றம், ஒழுங்கு நடடிக்கை மீது முடிவு எடுத்ல் ஆகிய நிர்வாக பொறுப்களை இனிமேல் பண்ருட்டி ாமச்சந்திரன் கவனித்து ருவார். முதல்வர் ர்பாக அவரே முடிவு டுப்பார் என்று உத்தரவு றுகிறது.

மாவட்ட போலீஸ் ப்பிரண்டெண்ட் பதவி அந்தஸ்து வரையில் நிர்வகம் சம்பந்தப்பட்டவிவகாரங்களையும் உணவு அமைசரே கவனித்து வருவார்.

குறிப்பிட்ட தொகைக்கு மேல் முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஏதேனும் ஒரு காரியத்துக்கு அளிப்பது என்றால் இதுவரை முதல் அமைச்சரே அளித்து வந்தார். இனிமேல் இந்த உதவித் தொகை வழங்கும் அதிகாரம் தற்போது பண்ருட்டி ராமச்சந்திரனுக்கு மாற்றப்பட்டுள்ளது.

அறநிலையத்துறையில் துணை ஆணையர் அந்தஸ்திலுள்ளதிருக்கோயில்களுக்கு தக்கார் நியமனத்தைப் பொறுத்த வரையில் அறநிலையத்துறை அமைச்சரின்

பரிந்துரையை பரிசீலித்து இதுவரை முதல்வரே முடிவு எடுத்தார். இந்தப் பொறுப்பும் பண்ருட்டி ராமச்சந்திரனுக்கு மாற்றப்பட்டுள்ளது.

(டி.ஐ.ஜி.ஐ.ஜி. ஆணையர் மற்றும் செயலர். பதவி உயர்வு மாற்றம் தவிர) துணைச்செயலர்கள். இணை செயலர் அந்தஸ்து வரையில் பொறுப்புகளை பண்ருட்டி ராமச்சந்திரனே கவனித்துக் கொள்வார்.

மேலே கூறப்பட்ட துறைகள் சம்பந்தப்பட்ட கேள்விகள் அனைத்தும் முதல்வரின் ஒப்புதலுக்குச் செல்வதற்குப் பதிலாக உணத்துறை அமைச்சர் மட்டத்திலேயே முடிவு செய்யப்படும் என்பது புதிய உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

### கொள்கை முடிவு

முக்கியமான கொள்கை பிரச்சினைகள் குறித்த முடிவுகளை முதல்வர் எம். ஜி. ஆ. எடுப்பார்.

பொருள் நல்ல பாம்புக்குச் சமமானது, அதில் நஞ்சும் இருக்கிறது. நல்லதொரு சஞ்சீவியும் இருக்கிறது. நஞ்சை நாம் பிரித்து அறியாத வரையில் அதைப்பற்றிய அறிவும், மர்மமும் வெளியாகா.

(ரம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**CROWN HAIR DRESSINGS**
**VIDEO, AUDIO CLUB**

# கிறவுண் சலூன்

**&**

விடியோ ஓடியோ கிளப்

எங்களால் பரிஸ் 11ல் நிறு
வப்பட்டுள்ள கிறவுண் சலூனில் ஆகிய
ஐரோப்பிய நவீன முறையிலான சிகை அலங்
காரங்களும் சிகை வர்ண அலங்காரங்களும் செய்
யப்படும்

முகவரி : 2, Rue Jules Verne 75011 PARIS

**Tel. 43 57 26 39**

M° : Belleville or Goncourt

***All days, Except Mondays***






www.tamilarangam.net



# திருமணங்களில் எம்.ஜி.ஆர். கொடுத்த அதிர்ச்சிகள்... (ஒரு வரலாறு)

திருமணங்களில் பங்கேற்பதாக ஒப்புதல் கொடுத்தாலும் — திருமண நாளின் போது எம்.ஜி.ஆருக்கு இருக்கும் மனோநிலையைப் பொறுத்தான் அவர் — அந்த திருமணங்களில் கலந்து கொள்வார். முக்கியமாக கட்சித் தலைவர்கள் வீட்டுத் திருமணங்களிலும் கூடக் கலந்து கொள்வதாக ஒப்புதல் கொடுப்பார். ஏற்பாடுகள் தடபுடலாக நடக்கும். போலீசாரும் புடை சூழ்ந்து விடுவார்கள். ஆனால் எம்.ஜி.ஆர் வரமாட்டார். அது எம்.ஜி.ஆரின் மனோ நிலையைப் பொருத்து மட்டுமல்ல. அவரது அரசியல் ஏகச் சக்ராதிபதித் தன்மையையும் பொறுத்தது.

1980 — நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. அடிக்கு மேல் அடிவாங்கிய நேரம். அப்போது அ.தி.மு.க. தொண்டர் ஒருவருக்குத் திருமணம். அவர் பெயர் ஓமப்பொடி பிரசாத். அவர் திருமணம் புரசைவாக்கத்தில் நடந்தது. ஓடிப் போய் பங்கு கொண்டார். எம்.ஜி.ஆர். நீண்ட நேரம் காத்திருந்தார்.

காரணம் அப்போது தேர்தலில் அவரது கட்சிக்குப் படு தோல்வி.

### ஜேப்பியார் வீட்டுத் திருமணம்

ஜேப்பியார் மகள் திருமணம். கலைவாணர் அரங்கு கோலாகலமாக காட்சி அளித்தது. ஜேப்பியார் சினிமா தயாரிப்பாளரும் ஆயிற்றே!

சினிமா காமிரா மேன்களை எல்லாம் அழைத்து படம் எடுக்கச் சொன்னார். சினிமா காமிராக்களும் புகைப்படக்காரர்களும் விழுந்து விழுந்து படம் எடுத்தார்கள். (சிலர் படம் எடுக்கும் போது கால் தவறி விழுந்து விட்டார்கள்.)

ஜேப்பியார் முதல்வரின் காலில் விழுந்து வரவேற்றார். அது படம் பிடிக்கப் பட்டது. ஜேப்பியார் அருகில் எம்.ஜி.ஆர் இருப்பது போல, மணமக்களுடன் இருப்பது போல இத்தியாதி இத்யாதி படங்கள், காமிரா மேன்கள். புகைப்படக்காரர்கள் அனைவரையும் திருமணத்தில் கடுமையாகத் தாக்கினார் எம்.ஜி.ஆர். ஜேப்பியாரையும் தாக்கினார். காமிராவை வாங்கி பிலிம் சுருள்கள் அகற்றப்பட்டன — எம்.ஜி.ஆர் உத்திரவின் பேரில்!

### கார்க்கி திருமணம்

பத்திரிகையாளர் கார்க்கி இல்லத் திருமணம். அவரது மகளுக்கு எம்.ஜி.ஆர். தலைமையில் திருமணம் எல்லா அமைச்சர்களும் தவறாமல் வந்து இருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். வாழ்த்தி (!) பேசினார்.

"மணமக்கள் நன்றாக வாழ வேண்டும். கார்க்கியை எனக்குத் தெரியும். மணமகன் தனது மாமனார் கார்க்கி வழியில் நடக்கக் கூடாது."

எம்.ஜி.ஆரின் இந்த "அறிவுரை" கூட்டத்தையே அதிர வைத்தது. கை பிசைந்து நின்றார் கார்க்கி.

### அருணாசலம் திருமணம்

நாமக்கல் அருணாசலம் அமைச்சராக இருந்தபோது அவருக்குத் திரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



...நடந்தது. அந்தத் திருமணத்தில் கலந்து கொள்வதாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஒப்புதல் அளித்து இருந்தார். அவரே தலைமை வகிப்பதாகவும் ஒப்புக் கொண்டார்.

அமைச்சர் கல்யாணம். அதுவும் அ.தி.மு.க. அமைச்சர் கல்யாணம். அதுவும் எம்.ஜி.ஆர். தலைமையில் என்றால் கேட்கவா வேண்டும்?

அந்தக் காலத்து சங்கத் தமிழ் மன்னர் பாணியில் திருமண ஓலை அச்சிட்டார் அருணாசலம். மாவட்டத்திலுள்ள செல்வந்தர்களிடம் எல்லாம் வசூல்! ஏகப்பட்ட தடபுடல்! நாமக்கல் நகரமே அலங்கரிக்கப்பட்டது. தமிழக முழுவதிலிருந்தும் போலீசார் குவிக்கப்பட்டார்கள்.

அந்த நேரம் பார்த்து தமிழகத்தில் ஒரு பெரும் வேலை நிறுத்தம். எதிர்கட்சிகள் அனைத்தின் ஆதரவு பெற்ற வேலை நிறுத்தம் என்றால் எம்.ஜி.ஆருக்குப் பிடிக்காது. நாமக்கல் செல்வாரா? மாட்டாரா? என்ற சந்தேகம்.

அந்தச் சமயம் எம்.ஜி.ஆர். தனது ... போல ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

''நான் திருமணத்தில் கட்டாயம் கலந்து கொள்வேன்'' என்று எதிர் கட்சிகளுக்கு சவால் விட்டார்.

எம்.ஜி.ஆராவது காரில் வருவதாவது! மாநிலமே கொதித்துக் கொண்டிருக்கிறது. திருமணத்துக்குப் போகும் முதல்வர் குறைகளைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்தால் என்ன? என்று கேள்விகள் எழுப்பப்பட்டன.

நாமக்கல் அமைச்சர் அருணாசலமோ இடிந்து போய் விட்டார். எல்லா ஏற்பாடும் செய்து விட்ட இந்த நேரத்தில் இப்படி ஒரு நிலை ஏற்பட்டு விட்டதே என்ற கவலை. மணமகள் ஒரு டாக்டர். அதுவும் பெங்களூரைச் சேர்ந்தவர்.

தலைவர் வராவிட்டால் மணமகளும் மதிக்க மாட்டார். மற்ற மாநிலத்திலும் கேவலம் என்று வருத்தம்.

ஆனால் எம்.ஜி.ஆர் சொன்னபடியே வந்தார்! ஆனால் ஒரே ஒரு மாற்றம். காரில் வருவதாகச் சொன்னவர் ஹெலிகாப்டரில் தான் வந்தார்!

## செல்வேந்திரன் திருமணம்

அ.தி.மு.க. எம்.பி. செல்வேந்திரன் திருமணம். எம்.ஜி.ஆர். பெயர் அழைப்பில் போடப் பட்டிருந்தது. மிகப் பெரிய கூட்டம். எக்கச்சக்கமாக ஏற்பாடுகள்.

எம்.ஜி.ஆர். வந்தார். திருமணம் முடிந்தது. உடனே இளம்பி விட்டார். அங்கிருந்து மற்றொரு திருமணத்துக்குச் சென்றார். அந்தத் திருமணத்துக்கு எம்.ஜி.ஆர் அழைக்கப்பட்டிருந்தாரே தவிர அவர் ஒப்புதல் கொடுக்கவில்லை. எனவே முதல்வர் வர மாட்டார் என்று நினைத்திருந்தார்கள்.

ஆனால் ஒப்புதல் கொடுத்த திருமணத்தில் இருந்து உடனே புறப்பட்ட எம்.ஜி.ஆர். ஒப்புதல் கொடுக்காத திருமணத்தில் போய் பல மணி நேரம் உட்கார்ந்து விட்டார்.

**அந்தத் திருமணம் யார் வீட்டுத் திருமணம் தெரியுமா? அப்போதைய எம்.எல்.ஏ. கம்பம் கோபாலின் அண்ணன் குடும்பத் திருமணம் தான்.**

கலை அறிவு, அன்பு, தொண்டு, அருள் இவற்றுடன் நிகராக வைத்து எண்ணத்தகாத பணம் இவற்றை விட பெருமதிப்புப் பெற்று விட்டதே!

—டாக்டர் மு. வ.

செல்வம் செல்லும்போது அதற்கு நூறு கால்கள்; செல்வம் வரும்போது அதற்கு இரண்டே இரண்டு கால்கள்!

—ரஷ்யப் பழமொழி

செல்வத்தை மட்டும் சேர்த்துக்கொள். உலகம் முழுவதும் ஒன்றுகூடி உன்னை ஒரு பண்பாளன் என்று கூறத் தயங்காது.

www.tamilarangam.net



அமைச்சராக இருந்த போது வீரப்பன் மணிவிழாத் கொண்டாடியதும் அது சம்பந்தமாக பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டதும் எம்.ஜி.ஆருக்குப் பிடிக்கவில்லை. அவர் பதவி பறி போனதற்கு இதுவும் ஒரு காரணம்.

அமைச்சர் பதவி போன பிறகும் வீரப்பனின் படம் சுற்றுலாப் பொருட்காட்சி விளம்பரத்தில் இடம் பெற்றது முதல்வருக்கு கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே வீரப்பனிடம் இருந்து அவரது ஆதரவாளர்களைப் பிரிக்கும் வேலை வேகமாக நடந்து கொண்டு இருக்கிறது.

காளிமுத்துவை நள்ளிரவில் கதவைத்தட்டி அழைத்து தோட்டத்துக்கு வர வழைத்தார் முதல்வர்.

'உன்னைப் பின்பற்ற பலபேர் இருக்கிறார்கள். நீ ஏன் இன்னொருவர் பின் வால் பிடிக்கிறாய்?'என்று கோபமாகக் கேட்டார்.

'நான் உங்களைத் தவிர யார் பின்னாலும் போகவில்லை; போகவும் மாட்டேன்' என்று கூறி விட்டாராம் காளிமுத்து.

பாவம் வீரப்பன்!

வீட்டுக்காரர் . "ஏம்பா உன்னோட திருவோடு ஹெல்மெட் மாதிரியேயிருக்கே?"

பிச்சைக்காரன் : "இது ஹெல்மெட்டேதாங்க. ஸ்கூட்டரைத் தெருக்கோடியில் நிறுத்தியிருக்கேன்"

முதல்வர் எம்.ஜி.ஆருடைய உடல்நிலைப் பற்றி சிலர் சந்தேகப் பட்டாலும் மிக நல்ல நிலையில் அவருடைய உடல்நிலை இருப்பதாக மருத்துவர்கள் அடித்துக் கூறுகிறார்கள். கடுமையான அரசியல் வேலைகள் — பயணங்கள் இதன் காரணமாக அவ்வப்போது சில பலவீனங்கள் வெளிப்பட்டாலும் உற்சாகமாகவே அவர் காரியங்களைச் செய்து வருகிறார்.

கருடனுக்கு கிடைத்தச் செய்தி ஒரே நாளில் மூன்று நான்கு படங்களை வீடியோவில் பார்க்கிறார். தொலைக்காட்சி ஒளிப்பரப்புகளையும் தவறாமல் பார்க்கிறார். கோப்புகள் (பைல்கள்) தூங்குகின்றன என்ற குற்றச்சாட்டு இப்போது இல்லை. அரசியல் விவகாரங்கள் தவிர மற்ற விவகாரங்கள் சம்பந்தப் பட்ட கோப்புகளை நிதி அமைச்சர் நெடுஞ்செழியனே இறுதி முடிவு எடுக்க விட்டு விடுகிறார். அந்தக் கோப்புகளில் வெறும் கையெழுத்து மட்டுமே போடுகிறார். கையெழுத்துப் போடுவதிலும் சற்று முன்னேற்றம்

முதல்வரின் தனிச் செயலாளர் பரமசிவம் கோப்புகளைப் பற்றி விவரம் சொல்லச் சொல்ல இவர் கையெழுத்துப் போட்டுக் கொண்டு வருகிறார்.

பார்வையாளர்களைச் சந்திப்பது என்பது அறவே நிறுத்தப்பட்டு விட்டது. அமைச்சர்களை தோட்டத்துக்கு அழைத்துப் பேசுவது என்பது அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். முக்கிய விஷயங்களுக்கு மட்டும் மிகப் பெரிய அதிகாரிகள் நேரில் அழைக்கப்படுகிறார்கள். பத்திரிகைச் செய்திகள் — எதிர்கட்சி குற்றச்சாட்டுக்கள் இவை பற்றி அவரது உதவியாளர்கள் முடிவு செய்து அவரது கவனத்துக்குரிய விஷயங்களை மட்டும் சொல்கிறார்கள்.

தமிழ் நாட்டிலேயே முதல்வர் பணியில் மிகக் குறைவான பணிகளை வைத்துக் கொண்டவர் காமராஜர் என்று சொல்வார்கள். ஆனால் அவரை விடவும் மிகக் குறை[illegible] பணிகளை இப்போது

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலேசிய அமைச்சருக்கு அவமதிப்பு!

மலேசியாவின் மாமனிதர் — டத்தோ சுவாமிவேலு குழந்தையின் உற்சாகத்தோடு தமிழ்நாட்டிற்கு வந்தார்; முதியவரின் முறிந்த உள்ளத்தோடு தாய்நாடு திரும்பினார்.

ஆறாவது உலகத்தமிழ் மாநாடு நடத்த அரசியல் தலைவர்களை அழைக்க அவர் ஆசை கொண்டார். பாவம்— அவருக்குத் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களைப் பற்றி அதிகமாகத் தெரியாது!

+ தமிழ் என்றால் பகை மறந்து ஒரே பாசறையில் கூடுவார்கள் என்று அவர் நினைத்தார்!

+ தமிழையே நடுவில் நிறுத்தி பகை அம்பு வீசி பலத்த காயம் படச் செய்பவர்கள் இவர்கள் — என்பதை டத்தோ அறியவில்லை!

தாஜ் கொரமண்டல் விடுதியில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் ஏற்கனவே ஒரு அமைப்பு உலகத்தமிழ் மாநாடு நடத்த வரிந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டார்.

"நீங்கள் நடத்தப் போகிறீர்களா? மலேசியா அரசாங்கம் நடத்த வேண்டுமா?" — என்ற வினாவைத் தூக்கி வீசினார். அரசாங்கமே நடத்தட்டும் என்று கூறி அவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அடுத்தது — அரசியல் தலைவர்களைச் சந்தித்து அழைப்பு விடுக்கும் கட்டம்!

முதலமைச்சர் எம்ஜிஆரைப் பார்ப்பதற்குள் இவருக்கு 'போதும் — போதும்' என்றாகி விட்டது.

'காட்சிக்கு எளியன்' என்று தானே திருக்குறள் கூறுகிறது என்று இவர் வியந்தார்.

ஒரு ரகசியம்

இவர் முதலமைச்சரைச் சந்தித்த போது குடிக்கத் தண்ணீர் கூடக் கிடைக்கவில்லை என்பது இவருடன் சென்றவர்களின் புகார்.

விருந்தோம்பலில் சிறந்த எம்ஜிஆரா — இப்படிச் செய்தார் என்று பலரும் ஆச்சரியமும் மறுப்பும் தெரிவித்தார்கள்.

(மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் டீ—காபி சாப்பிடுங்கள் என்று பொருள்!)

ஒருவேளை தமிழ் நாட்டில் குடிநீர்ப் பஞ்சம் வரப் போகிறது என்பதை மலேசியா மந்திரிக்கு உணர்த்துவதற்காகத் தண்ணீர் கொடுக்கப்படவில்லையோ — என்னவோ?

உலகத் தமிழ் மாநாட்டுக்கு எம்ஜிஆர் வருவதற்கு ஒப்புதல் தந்தாலும் அதிலும் ஒரு பொடி வைத்திருக்கிறார்.

ஜூன் அல்லது ஜூலை மாதம் யோசித்துக் கூறுவதாக எம்ஜிஆர் தெரிவித்தார் என்று அவரது பதினைந்தாவது தேசிய மொழியை அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக் கொண்டு தனது அமைச்சரவையிலுள்ள கே.ஏ.கே. திருமணத்திற்கு வராமல் விட்டவர் எம்.ஜி.ஆர். அதுபோல் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வராமல் இருந்து விடுவார் என்றே பலரும் கருதுகிறார்கள்.

அடுத்து தி.மு.க. — தலைவரை அழைக்கும் கட்டம்! ஆயிரம் குறை அவர் மீது கூறப்பட்டாலும்... யார் யாருக்கு என்ன மரியாதை தருவது என்று அறிந்தவர் அவர்!

அழைப்பு விடுக்கப்பட்டது; அவரும் ஏற்றுக் கொண்டார். எம்ஜிஆரைச் சந்தித்ததில் கசந்து போயிருந்த மனம் இப்போது இனித்ததாக டத்தோவின் உடன் சென்றவர்கள் கூறினார்கள்!

சிறை அதிகாரி: இந்த சிறையில் ஏதாவது குறைகள் உள்ளனவா?

கைதி: ஏறமுடியாத அளவுக்கு சுவர்கள் மிக உயரமாக எழுப்பப்பட்டுள்ளதைத் தவிர வேறு குறையில்லை.

மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற இருக்கும் உலகத்தமிழ் மாநாட்டுக்கு கலைஞரை அழைத்தால் என்னை அழைக்காதீர்கள் என்று முதல்வர் தெரிவித்ததாக வந்த செய்தியைக் கேள்விப்பட்ட தமிழறிஞர்கள் ஒருநாள் முழுவதும் இதையே பேசிக்கொண்டிருந்தார்கள்.

www.tamilarangam.net



# உதவிக்கு பிரபாகரன் நன்றி

## ்பவேறு நாடுகளில் ஆர்ப்பாட்டம்

இலங்கை யாழ்ப்பாணத் நடைபெற்று வரும் இனப் கொலையைக் கண்டித்தும். ழீழ விடுதலைப் புலிகளுக்கு தரவு அளிக்கக் கோரியும். லங்கைக்கு உலக நாடுகள் வக்கூடாது என்று வலியு த்தியும் உலகின் பல்வேறு டுகளில் ஆர்ப்பாட்டங்கள். ர்வலங்கள். உண்ணாவிரதப் ர்ப்பாட்டங்கள் நடத்தப்பட் தாக எல்.டி.டி.ஈ. சென்னை ட்ட ஒரு அறிக்கை கூறுகி து.

கடந்த மே 29-ம் தேதி ஸ்திரேலியாவில். மெல்பர் ில் நடைபெற்ற ஆர்ப் ாட்ட ஊர்வலத்தில் சுமார் 00 தமிழர்கள் கலந்து கொண் னர்; ஊர்வலத்துக்கு பின்னர் 4 மணி நேர அடையாள ண்ணாவிரதம் நடத்தப்பட் து என்றும் அச்செய்தி கூறு ிறது.

ஜெனீவாவில் (சுவிட்சர் ாந்து) கடந்த 26-ம் தேதி நடைபெற்ற ஊர்வலத்தில் சுவிஸ் நாட்டுத் தமிழர்களு டன். சுவிஸ் பிரஜைகளும் கலந்து கொண்டனர்; இறுதி யில் மனித உரிமைச் சங்கத் தின் துணைச் செயலாளரிடம் ...து ... மகஜர் அளிக்கப்பட்டது. இந்த ஊர்வ ...ப்பற்றிய தகவல்கள் அந் நாட்டு பத்திரிகைகள். ரேடி யோ. டி.வி. போன்றவற்றில் இடம் பெற்றன என்றும் அச் செய்தி தெரிவிக்கிறது. அந் நாட்டில் ஏராளமான தமிழர் கள் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டதாகவும் அச்செய்தி கூறு கிறது.

கடந்த ஜூன் 22-ம் தேதி டென்மார்க்கில் ஒகூஸ் என்ற நகரில் நடந்த ஊர்வலத்தில் 1500 தமிழர்கள் கலந்து கொண்டனர் என்றும். 'இலங் கைக்கு உதவியளிக்கும் நாடுக ளின் கூட்டத்தில் டென்மார்க் கலந்துகொள்ளக்கூடாது: யாழ்ப்பாணத்தில் ராணுவ, பொருளாதார முற்றுகை நீக் கப்பட்டு, மருத்துவமனை மூடும் உத்தரவு ரத்து செய்யப் பட வேண்டும்' என்ற கோரிக் கைகள் கொண்ட மகஜர் அந்த மாநகர சபை முதல்வருக்கு அளிக்கப்பட்டது என்றும் அந் தச் செய்தி தெரிவிக்கிறது.

நெதர்லாந்தில் டென்காக் நகரில் நடைபெற்ற ஊர்வலத் தில் அந்நாட்டுப் பிரஜைகளும் கலந்து கொண்டனர் என்றும் ஊர்வலத்தினர் இந்திய தூதர கத்திற்குச் சென்று ஒரு மகஜ ரை அளித்தனர் என்றும் அச் செய்தி கூறுகிறது.

இதே போல். கனடா தலை நகரான ஒட்டாவாவில் செவ் வாயன்று நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 2 ஆயிரத்து 500 தமிழ் மக்கள் கலந்துகொண்ட னர் என்றும் எல்.டி.டி.ஈ. செய்தி கூறுகிறது.

## தமிழர் படுகொலை: லண்டனில் ஆர்ப்பாட்டம்

மதுரை, ஜூன் 3— இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதை இந்தியா தலையிட்டு நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி திங்கள் அன்று லண்டனில் இந்திய ஹைகமிஷனர் அலுவலகம் எதிரே ஈழப் பெண்கள் லீக் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

ஈழ ஒருமைப்பாட்டு பிரச் சாரக் குழு தனியே மற்றொரு ஆர்ப்பாட்டம் நடத்தியது. இத்தகவலை மதுரையிலுள்ள தமிழர் தகவல் மையம் தெரி வித்தது.

இலங்கை யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு உணவு. உடை. எரி பொருள். மருந்துகள் ஆகிய வற்றை அளித்து உதவ முன் வந்துள்ள இந்திய அரசுக்கும். பிரதமர் ராஜீவ் காந்திக்கும். தமிழகம் உட்பட மாநில அரசு களுக்கும். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கும் தமிழீழ விடு தலைப்புலிகள் (எல்.டி.டி.ஈ.) தலைவர் வே. பிரபாகரன் நன்றி தெரிவித்துள்ளார். சென் னையில் அந்த அமைப்பு விடுத் துள்ள ஒரு செய்திக்குறிப்பு இதைத் தெரிவிக்கிறது. பிரபா கரன். தற்போது யாழ்ப்பாண நிபகற்பத்தில் இருக்கிறார்.

'தாங்கொணா இனப்படு கொலைக்கு ஆளாகி மருத்துவ வசதியும். உணவு வசதியும் இன்றி வாடிக்கொண்டிருக்கும் 'தமிழீழ' மக்களுக்கு உதவும் மத்திய. மாநில அரசுகளுக்கு தனது இயக்கம் முழு ஒத்து ழைப்பையும், ஆதரவையும் அளிக்கத் தயாராக உள்ளது என்றும், அத்துடன் துணை செய்யும் செஞ்சிலுவைச் சங் கம். மருத்துவக் குழு மற்றும் பத்திரிகை நிருபர்களுக்கும் தங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் அளிப்பதாகவும் பிரபாகரன் அந்தச் செய்தியில் கூறியுள்ளார்.

## போராளிகளின் பெற்றோர் படுகொலை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காலஞ்சென்ற தளபதிகளான ரவிந்திரன் (பண்டிதர்). சத்தியநாதன் (சங்கர்) ஆகியோருடைய பெற்றோர்கள் இலங்கை ராணு வத்தினரால் வெட்டிப் படு கொலை செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

www.tamilarangam.net

மேலிடத்துக்கு வேண்டியவர்கள், பணம் படைத்தவர்கள் என்றால், அவர்களுக்கு எதிரான எந்த ஒரு உத்தரவையும் அமுல் நடத்த அதிகாரிகள் பின் வாங்கி விடுகிறார்கள். அல்லது பின் வாங்க வைக்கப்படுகிறார்கள்.

நடிகர் ரஜினிகாந்த்துக்கும் இந்தச் சலுகை மிகத்தாராளமான அளவில் கிடைத்திருக்கிறது.

சென்னை வேளச்சேரியில் ரஜினிகாந்த் பங்களா ஒன்றைக் கட்டியுள்ளார். அதை ஒட்டி தொழிலாளர் நலத்துறைக்குச் சொந்தமான நிலமும் உள்ளது. அந்த நிலத்தில் தொழிலாளர் நலக் கல்வி நிலையம் ஒன்றை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

தனது நிலத்தில் வீடு கட்டிய ரஜினிகாந்த் கூடவே தொழிலாளர் நலத்துறைக்குச் சொந்தமான நிலத்தையும் பெருமளவில் ஆக்கிரமித்து, தனது பங்களாவை, விசாலமாகக் கட்டிக் கொண்டார். (அரசு நிலம் தானே, கேட்டால், யாராவது வேண்டியவர்களைக் கவனித்து, சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணியிருப்பாரோ என்னவோ?)

இந்த ஆக்கிரமிப்பு பற்றிய தகவல் கிடைத்ததும் இது குறித்து சென்னை மாவட்ட கலெக்டரிடம் தொழிலாளர் நலத்துறை புகார் செய்தது. அதை அடுத்து ரஜினிகாந்துக்கு கலெக்டர் நோட்டீஸ் அனுப்பினார். ஆனால அவர் அதைப் பொருட்படுத்தவே இல்லை.

இதைத் தொடர்ந்து, நடவடிக்கை எடுக்குமாறு கலெக்டரைத் தொழிலாளர் நலத்துறை திரும்பவும் வற்புறுத்தியது.

அதை அடுத்து தொழிலாளர் நலத்துறைக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து ரஜினிகாந்த் கட்டியுள்ள கட்டிடத்தின் பகுதிகளை இடித்துத் தள்ளுமாறு சென்னை மாவட்டக் கலெக்டரும், தொழிலாளர் நலத்துறை உயர் அதிகாரியும், வருவாய்த்துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளனர்.

இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஏறத்தாழ மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால்

ரஜினிகாந்த் ஆக்கிரமித்துக் கட்டிய பங்களாவோ 'என்னை யார் தொட முடியும்?' என்று சவால் விடுவதுபோல நிமிர்ந்து நின்றுகொண்டிருக்கிறது.

ஆணை கையில் கிடைத்த பிறகும் ரஜினிகாந்தின் வீட்டை இடித்துத் தள்ள அதிகாரிகள் தயங்குவது ஏன்?

16

# சிகரெட் பிடிப்பதால் ஆண்மைக் குறைவு?

நியூயார்க்

சிகரெட் பிடிப்பதும் ஆண்மைக் குறைவுக்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும் என டாக்டர் ஆல்வாரோ மோரால்ஸ் என்னும்ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார்.

புகை பிடிப்பதால் பால் உறுப்புக்குச்செல்லும் ரத்தம் தடைப்படுவதும் சிகரெட் குடிப்பவர்களுக்கு ஆண்மைக் குறைவை ஏற்படுத்தக் கூடும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சுமார் 200 ஆண்மைக் குறைவுள்ள ஆண்களை பரிசோதனை செய்து இந்த முடிவுக்கு வந்துள்ளார் அவர்.

இந்த ஆய்வு ஒரு தீர்க்கமான முடிவைக் கூறவில்லையென்றாலும், சிகரெட் புகைத்தல் ஆண்மைக் குறைவுடன் சம்பந்தப்படுவதற்கு போதுமான சாட்சியங்கள் உள்ளன என்றார் டாக்டர் மோராலஸ்.

ஆண்மைக் குறைவு உள்ளவர்களில் 81 சதவிதத்தினர் சிகரெட் குடிப்பவர்கள் அல்லது முன்பு குடித்தவர்கள்தான். ஆயினும், அவர்கள் மீண்டும் காதல் உறவில் ஈடுபடும் நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை என்கிறார் அவர்.

ஆண்மைக் குறைவு உள்ளவர்கள் சிகரெட் குடிப்பதை நிறுத்திவிட்டால் நாளடைவில் அவர்கள் தங்கள் குறையை நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்று சமீபத்திய ஆய்வின் மூலம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கண்களின் கீழே உள்ள கருப்பு வளையங்கள்

பெண்களின் கன்னத்தில் இருக்கும் கருப்பு மச்சம் அழகை கூட்டும். கண்களின் கீழே கருப்பு வளையம் இருந்தால் அவலட்சணத்தை சேர்க்கும்.

- வைட்டமின் 'ஏ', 'இ', சுண்ணாம்பு சத்து மற்றும் இரும்பு சத்து உணவில் குறைந்தால் கண்களின் கீழே கருப்பு வளையம் ஏற்படும். இதற்கு பரிகாரமாய் டானிக் மாத்திரைகள் சாப்பிடுவதைவிட, கீரை, முட்டைக்கோசு - பச்சை காய்கறிகளை சாப்பிடுவது நல்லது!
- கணவர் குடிகாரராய் இருக்கிறாரே - குழந்தைகள் படிக்கவில்லையே - நகை-நல்ல ஆடைகள் இல்லையே என்று மணமான பெண்களும், இன்னும் நமக்கு கல்யாணமாகவில்லையே - நமக்கு வரும் கணவர் நல்லபடியாக நடத்துவாரா என்று மணமாகாத பெண்களும் எப்போதும் சதா ஏதாவது கவலையில் இருந்தால் கண்களின் கீழே கருப்பு வளையம் ஏற்படும். கவலையை மறந்து - கண்களை காப்பாற்றுங்கள்.
- சமையல் அறையில் நாள் முழுவதும் போராடுவது - 24 மணி நேரமும் படிப்பது தினந்தோறும் திரைப்படம் பார்ப்பது என்று ஓயாமல் கண்களுக்கு வேலை கொடுத்தாலும் கருப்பு வளையம் கண்களின் கீழே நிச்சயம் ஏற்படும்.
- படுத்துக்கொண்டே படிக்காதீர்கள் - போதிய வெளிச்சத்தில் உட்கார்ந்து படியுங்கள், குளிர்ந்த நீரால் கண்களை காலையும்-மாலையும் கழுவுங்கள்.
- நிமோனியா, சயரோகம் (TB) சில வகை புற்றுநோய்கள் காரணமாகவும் கண்களின் கீழ் கருப்பு வளையம் ஏற்படும். இது ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் இம்மாதிரி வியாதிகள் ஏற்படுவதாய் மருத்துவ உலகம் கூறுகிறது! எனவே நீங்கள் காரணமின்றி பயப்படாதீர்கள்.
- திருமணம் ஆனபின்பு கண்களின் கீழ் கருப்பு வளையங்கள் சில நாட்களில் ஏற்பட்டால், தோல் சம்பந்தப்பட்ட மருத்துவரை அணுகி இரத்தப் பரிசோதனை, மூலம் நிவர்த்தி செய்து கொள்ளவும்.
- கவலையை மறப்பது, கண்களுக்கு போதிய அளவு ஓய்வு கொடுப்பது சத்துள்ள உணவை சாப்பிடுவது மூலமாக ஏற்கனவே உள்ள வளையங்களை மங்கி மறைந்து விடச்செய்யலாம்.
- எக்காரணம் கொண்டும் மற்றவர்களின் சிபாரிசு மூலமாக கருப்பு வளையங்களை அகற்ற களிம்பு-மருந்தை உபயோகிக்காதீர்கள். உங்களின் டாக்டர் ஆலோசனைபடி நடந்து கொள்ளுங்கள். —தகவல் M. கோவிந்தசாமி, திருச்சி.

www.tamilarangam.net



# தமிழன் என்று சொல்லுங்கள்!

மலேசியச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு ஹாங்காங் சென்றிருந்த மதுரை ஆதீனகர்த்தருக்கு ஹாங்காங் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் வரவேற்பளித்துச் சிறப்பித்தது.

இந்த வரவேற்பு விழா 3-3-87 அன்று நடைபெற்றது. தமிழ்ப் பண்பாட்டுக் கழகச் செயலாளர் திரு. ஏ. கமால், மதுரை ஆதீன கர்த்தரை அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஆதீனகர்த்தர் தமக்களிக்கப் பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:-

கடல் கடந்து வந்து இங்கு வாழும் தமிழர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், தமிழ்ப் பண்பாட்டுடனும் எமக்கு வரவேற்பளித்ததைக் கண்டு மகிழ்கிறோம். நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வளவு தமிழ் உணர்வுள்ள நீங்களெல்லாம் தமிழகத்தை விட்டு வெளியேறி விட்டீர்களே! நீங்களெல்லாம் தமிழகத்திலேயே இருந்திருந்தால் தமிழ்த் தாய் அங்கு அரசோச்சும் நிலை ஏற்பட்டிருக்குமே!

பதின்மூன்றாயிரம் சிங்களர்களைச் சிறைப்பிடித்து வந்து, அவர்களைக் கொண்டு காவிரிக்குக் கல்லணை கட்டினான் கரிகாலன் பெரு

களக் கைதிகளை மீண்டும் இலங்கைக்குக் கொண்டுபோய் விடக் கரிகாலன் மறந்து விட்டானோ என்னவோ: அந்தச் சிங்களரின் இரத்தம் தமிழர்களிடை கலந்து விட்டதோ என்னவோ! அதனால் தான் இன்னும், தமிழன் தன் தலைவன் யார் என்று கூட உணராமல் இருக்கிறான்! தமிழினத் தலைவரை அறியாமல் இருக்கிறான்.

நபிகள் நாயகம் சல்லல்லாஹு அலை ஹிவசல்லம் அவர்களின் காலமும், திருஞான சம்பந்தர் காலமும் நன்று. நல்ல கருத்தை யார் சொன்னாலும் கேட்க வேண்டியதுதான் மரபு. சொல்பவர் யார் என்பது முக்கியமல்ல. சொல்லும் கருத்து என்ன என்பதுதான் முக்கியம்.

உங்களை யாராவது என்ன ஜாதி என்று கேட்டால் தமிழன் என்று சொல்லுங்கள். யாராக இருந்தாலும் தமிழர்கள்தான் நாம் என்ற உணர்வு வேண்டும்.

இவ்வாறு கூறி விரிவாகவும் விளக்கமாகவும் உரையாற்றினார்.

பிறகு தலைவர் எஸ். எம்: யூனூஸ் நன்றி கூறினார்.

ஹாங்காங் தலைநகரான கவ்லூனில் உள்ள பள்ளிவாசலுக்கும் அடிகளார் சென்றார். அடிகளாருடன் அவர் சீடர் முருகனும், தமிழ்ச் சங்கச் செயலாளர் ஏ. கமாலும் சென்றிருந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 19

# தி. க. தலைவர் வீரமணி விளக்கம்!

இஸ்லாம் மற்றும் கிறிஸ்துவ மதங்களை விட்டு விட்டு, இந்து மதத்தை மட்டும் திராவிடர் கழகம் எதிர்ப்பதேன்? என்று ஆர். எஸ். எஸ் - இந்து முன்னணி இயக்கத்தினர் எழுப்பும் வினாக்களுக்கு சென்னை பெரம்பூரில் 24-4-87-ல் நடந்த பொதுக் கூட்டத்தில் தி. க. பொதுச் செயலாளர் பதிலளித்தார்.

மதம் என்ற கண்ணோட்டத்தில் சம்பிரதாயங்களும் சடங்குகளும், நம்பிக்கைகளும் எங்களது பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் ஏற்கத் தக்கதல்ல என்றாலும், நடைமுறையில் எங்கள் நாட்டுப் பெரும்பான்மை மக்களுக்கு, "இந்து" என்ற பெயரைச் சூட்டி, நேரிடையாகப் பாதிக்கச் செய்கின்ற இந்து மதத்தைப் பற்றி எதிர்ப்பதிலும் விமர்சிப்பதிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் ஒரு நோயாளி அனுமதிக்கப்படுகிறான் என்றால் அதற்குக் காரணம் அவனுக்கு நோயின் கடுமை அதிகம் என்று பொருள். இந்து மதத்தை நாங்கள் அதிகம் விமர்சிக்கிறோம் என்றால் அதன் குறைபாடுகளும் கேடுகளும் அதிகம் என்பதால்தான்!

கிருஸ்துவரையும், முஸ்லிமையும் பார்த்து உங்கள் மதத்துக்கு வயது என்ன? அதைத் தோற்றுவித்தவர்கள் யார்? உங்கள் மத நூல் என்ன? என்று கேட்டால், பளிச்சென்று பதில் சொல்லி விடுவார்கள். அர்த்தமுள்ள இந்து மதத்தின் நிலை என்ன?

இந்து ஒற்றுமை மாநாடு நடத்துகிறீர்கள் என்றால் என்ன பொருள்?

எங்கேயாவது முஸ்லிம் ஒற்றுமை மாநாடு, கிறிஸ்துவ ஒற்றுமை மாநாடு நடத்துகிறார்களா? நீங்கள் மட்டும் ஏன் நடத்துகிறீர்கள்?

இந்து மதத்துக்குள்ளேயே நாலு வர்ணத்தைப் பிரித்தீர்கள்; நாலு வர்ணத்துக்குள் நாலாயிரம் ஜாதியைப் பிரித்தீர்கள்; பிறவியிலேயே பேதத்தை வளர்த்தீர்கள்; 'இந்து' என்று சொல்லிக் கொண்டு பெரும்பான்மை மக்களைச் சூத்திரர்கள் என்கிறீர்கள். சூத்திரர்கள் யார் என்றால் பார்ப்பனர்களின் வைப்பாட்டிகள் மகன் என்கிறீர்கள்!

இந்து முன்னணியில் தான் ராமகோபால அய்யரும் இருக்கிறார். தாணுலிங்க நாடாரும் இருக்கிறார். இரண்டு பேரையும் சட்டையைக் கழற்றச் சொல்லுங்கள். இராமகோபாலய்யர் நெஞ்சில் பூணூல் தொங்குகிறது. தாணுலிங்க நாடாரிடம் அந்தக் காணவில்லை. ஏன் இந்த வித்தியாசம்?

முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த எவரும் மௌலவியாகலாம்; கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த யாரும் பாதிரியாகலாம்; இந்து மதத்தைச் சேர்ந்த எவரும் அர்ச்சகராகலாம் என்ற நிலை இருக்கிறதா?

பள்ளிவாசலிலோ, மாதாக் கோயிலிலோ வழிபடும் இடத்தில் வித்தியாசம் வைத்திருக்கிறார்களா? யார் முதலில் செல்கிறார்களோ அவர்கள் முன்னால் நின்று தொழுகிறார்கள். அர்த்தமுள்ள இந்து மதத்தில், விலைப்பட்டியல் வைத்திருக்கிறீர்களே!

உங்கள் மதத்தில் மனிதனை மட்டுமா பிரித்துள்ளீர்கள்? கடவுளையே மிலிட்டரி கடவுள், சைவக் கடவுள் என்று பிரித்து வைத்துள்ளீர்களே!

எந்த முஸ்லிமும் எங்களைப் பார்த்து சூத்திரன் - வைப்பாட்டி மகன் - என்று சொல்லவில்லை. எங்களைக் கட்டித் தழுவுகிறார்கள். நீங்களோ, "தொடாதே! தீட்டு" என்று வைத்துள்ளீர்கள். ஒருவரையொருவர் கண்டால் கும்பிடுவது என்கிற பழக்கத்தை எதற்காக இந்து மதத்தில் வைத்துள்ளார்கள்? தொட்டால் தீட்டுப்பட்டுவிடும் என்ற தீண்டாமைத் தத்துவம் தான் இதற்குக் காரணம்.

இந்து மதப்படி நாஸ்திகனுகிய, இந்துக் கடவுளை ஒப்புக்கொள்ளாத என்னையும் இந்து என்று தானே சொல்கிறீர்கள்? அல்லாஹ்வை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்பவனை இஸ்லாம் மார்க்கம் முஸ்லிம் என்று ஏற்றுக் கொள்ளுமா? அதனடிப்படையில் தான் இந்து மதம் அர்த்தமற்றது என்று கூறி விமர்சிக்கிறோம். உனது மதத்தின் கொள்கை எதுவும் திட்டவட்டமாக இல்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாகிஸ்தான் அணியினர் கஞ்சா கடத்தினர்களா?

## விசாரணை நடத்த இம்ரான்கான் கோரிக்கை

பாகிஸ்தான் கிரிகெட் வீரர்களில் மூத்தவர்கள் தங்களது கையுறைக்குள் கஞ்சா கடத்தியதாக ஓமர் என்பவர் குற்றம் சாட்டியிருக்கிறார். இது பொய் என்று பாக்கிஸ்தான் அணித் தலைவர் இம்ரான் கான் மறுத்திருக்கிறார்.

இப்படிப்பட்ட செயல்களில் கிரிக்கெட் வீரர்கள் ஈடுபடுவார்களா? — என்று பலரும் சந்தேகிக்கலாம்.

நெருப்பில்லாமல் புகையாது என்று கூறப்படும் பொன்மொழி உண்மையானால்... இதை நம்பத்தான் வேண்டியிருக்கும்.

கிரிகெட் வீரர்கள் தேவதைகளுமல்லர் — ஒழுக்க சீலர்களுமல்லர் என்பது உண்மைதான்.

கிரிகெட் (டெஸ்ட் மேட்ச்) பந்தயங்களில் விளையாடத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறையிலேயே முறைகேடு இருப்பதாகப் பலரும் குற்றம் சாட்டுவார்கள்.

சென்னையில் சாதாரணமாகச் சொல்லப்படுவதுண்டு. ஒரு லட்ச ரூபாயைக் கொடுத்தால் கிரிகெட் பந்தயத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படலாம்!

இதுபற்றி பொறுப்பானவர்களிடம் விசாரித்தோம். அவர்கள் கோபம் - கோபமாகப் பதில் கூறினார்கள்.

யாராவது வேண்டுமென்றே கிளப்பி விடுகின்ற செய்திகளை வைத்துக்கொண்டு எங்களை கேள்வி கேட்கிறீர்களே - என்று திருப்பிக் கேட்டார்கள்.

ஆனால், கிரிகெட் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தேர்ந்தெடுக்கும் முறையைப் பற்றிப் பல புகார்கள் வந்திருப்பது உண்மை. அந்தக் காலத்தில் பேடி போன்றவர்கள் தேர்வாளர்களை எதிர்த்துப் போராட்டமே நடத்தியிருக்கிறார்கள்.

கிரிகெட் வீரர்கள் ஆனதும் இப்போதெல்லாம் லட்சம் ரூபாயைச் சம்பாதிக்கிணியில் இருப்பது தங்களுக்குப் பெருமை என்று பல கம்பனிகள் நினைக்கின்றன.

வேலைக்கு வர வேண்டியதில்லை. தினமும் கையெழுத்துப் போட வேண்டியதில்லை. இந்த கம்பனியில் வேலை செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டால் போதும் என்று அந்தக் கம்பனிகள் நினைக்கின்றன.

ஆகவே - மாதச்சம்பளம் என்று ஆயிரக்கணக்கான ரூபாய் கிரிகெட் வீரர்களுக்குக் கிடைக்கிறது.

இது தவிர - ஒவ்வொரு பந்தயத்திலும் லட்சக் கணக்கான ரூபாய் கிடைக்கிறது.

சிறந்த வீரர் (மேன் ஆப் தி மேட்ச்) என்று தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தனியாக பணம் கிடைக்கும். இது தவிர ஊரிலுள்ள ஒவ்வொரு கம்பனியும் பணமும் - பரிசும் தரும்.

இந்திய வீரர் சாஸ்திரிக்கு விலை உயர்ந்த வண்டி வீரர்களில் வீரர் (சாம்பியன் ஆப் சாம்பியன்) என்பதற்காகத் தரப்பட்டது.

எனவே, கிரிகெட் என்பதே லட்சாதிபதிகள் வெயிலில் விளையாடும் விளையாட்டு என்று வேடிக்கையாகச் சொல்லப்படுவது உண்டு.

### முறைகேடுகள்

எதிர்க் கட்சியினர் தோற்கவேண்டும் என்பதற்காக இந்தக் கிரிகெட் வீரர்கள் முறைகேடுகள் பலவும் செய்வது உண்டு.

அந்தக் காலத்தில் இரவில் அதிகமாக மது சாப்பிட வைத்தல் போன்ற காரியங்களில் எதிர்க் கட்சியினர் ஈடுபடுவார்கள்.

இப்போது மேலாளர் ஒருவரை நியமித்து மது, மாது ஆகியவற்றிலிருந்து விலகி இருக்கச் செய்கிறார்கள்.

சென்னையில் நடந்த பந்தயம் ஒன்றில் ஜான்லீவர் என்பவர் இந்திய அணியைத் தோற்கடிக்க ஒரு தந்திரம் செய்தார்.

வீசுகின்ற பந்தில் மசகு எண்ணெய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டைப் பைக்குள் வைத்திருந்தார். இது கண்டு பிடிக்கப்பட்டது.

கிரிகெட் வீரர்கள் இவ்வளவு மோசமானவர்களா? - என்ற நினைப்பு அப்போதே தோன்றத் தொடங்கியது.

படித்தவர்களாயிருந்த போதிலும் தோல்வி வந்தால் 'கெட்ட வார்த்தை' பேசுகின்ற பண்பாளர்களாகவே கிரிகெட் வீரர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலர் இதற்கு விதி விலக்கு.

* நடுவரைத் திட்டியவர்கள்
* எதிர்க் கட்சியினரைத் திட்டியவர்கள்
* ரசிகர்களைத் திட்டியவர்கள்

— என்று பலரும் கிரிகெட் வீரர்களில் உண்டு. பொறாமையும் - கோள் மூட்டுதலும் கூட அவர்களிடையே இருக்கிறது.

சிலசமயம் கிரிகெட் வீரர்கள் பொறாமையால் அடிதடியில் கூட இறங்கி விடுகிறார்கள். சமீபத்தில் சாஸ்திரிக்கும், மியான்டாடுக்கும் கைகலப்பு ஏற்பட்டது தெரிந்ததே!

**மதுப்பிரியர்கள்**

கிரிகெட் வீரர்கள் அனைவருமே குடிகாரர்கள் என்று கூறுவது அபாண்டமாய் இருக்குமா என்பது சந்தேகமே!

கிரிகெட் பந்தயம் முடிந்து வெற்றி விழாக் கொண்டாடும் போது பீர் பாட்டிலை உடைப்பது என்பது மரபு.

இந்திய வீரர்கள் கூட அப்படிப்பட்ட செயலைச் செய்தார்கள். அதை நமது தொலைக்காட்சி நிலையம்கூட ஒளிபரப்பு செய்தது.

பந்தயம் முடிந்ததும் விழாக் கொண்டாடி வயிறு முட்டக் குடித்து விட்டு நினைவு இல்லாமல் சிலரைத் தூக்கிக் கொண்டு போவார்களாம்.

தனிப்பட்டவர்களும் மது விருந்த வைப்பது உண்டு.

கிரிக்கெட் வீரர் மீதுள்ள ஆசையால் ஊற்றி ஊற்றிக்கொடுத்து அவரை உருள வைப்பவர்களும் உண்டு.

இப்போதெல்லாம் அப்படி இல்லை; மிகுந்த கட்டுப்பாடு வைத்திருக்கிறோம் என்று கிரிக்கெட் வாரியக்காரர்கள் கூறுகிறார்கள்.

மேனாட்டு விளையாட்டுக்காரர் போதம் - எல்.எஸ்.டி போன்ற போதைப் பொருள் பழக்கம் உள்ளவர் என்று சமீபத்தில் ஒரு செய்தி வந்தது.

கஞ்சா-அபினி-பழுப்புச் சர்க்கரை போன்ற பயங்கரப் போதைப் பொருட்களை இந்தக் கிரிகெட் வீரர்கள் - மேலாளர்கள் தெரியாமல் ரகசியமாக சாப்பிட்ட



(ஒரு சிலரைத் தவிர கிரிகெட் வீரர்கள் எல்லாருமே பெண்பிரியர்கள் (உமனைசர்) என்று குற்றம் சாட்டப்படுகிறது.

சினிமா நடிகைகள் இந்தக் கிரிக்கெட் வீரர்களைச் சுற்றித் திரிவதும் - இவர்கள் அவர்களைச் சுற்றித் திரிவதும் வாடிக்கை.

மது விருந்து வைக்கும் சினிமா நடிகைகளும் உண்டு. இந்தப் பழக்கம் இறுதியில் சினிமா நடிகையின் கணவராக கிரிகெட் வீரர் மாறிவிடுகின்ற கதைகளும் உண்டு.

பட்டோடி - சாஸ்திரி போன்றவர்கள் சினிமா நடிகைகளைத் திருமணம் செய்து கொண்டார்கள். காதலர்களாக இருப்பவர்களும் உண்டு! சந்தீப்பட்டீல் - இம்ரான் கான் போன்றவர்களின் பெயர்கள் சினிமா நடிகைகளோடு சேர்த்துப் பேசப்படுவதும் உண்டு.)

சில கிரிகெட் வீரர்கள் இரவு நேரங்களில் பெண் பித்துக்கொண்டு மது போதையோடு அலைகிறார்கள் - என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

கிரிகெட் வீரர்கள் இத்தகைய ஒழுக்கக் குறைவு உள்ளவர்கள். ஆதலால் கஞ்சா கடத்தும் வேலையைச் செய்யக் கூடியவர்களும் அதில் இருக்கக் கூடும் என்றே நம்பப்படுகிறது.

பாக்கிஸ்தான் முன்னாள் ஆட்டக்காரரான குவாசிம் ஓமர் சொல்வது பரிசீலனைக்கு உரியதாக இருக்கிறது.

* நான் அணியில் இருக்கும் போது மூத்தவர்கள் பல கேவலமான செயல்களில் ஈடுபடுவதைப் பார்த்தேன்.
* கஞ்சாவை கையுறைகளில் மறைத்து வைத்து வெளிநாட்டுக்குக் கடத்தினார்கள்.
* என்னையும் கஞ்சா கடத்தும்படி வற்புறுத்தினார்கள்.

— இப்படி ஓமர் கூறுவதை 'பொய்' என்று தள்ளிவிட முடியாது.

இம்ரான்கான் சொன்னதுபோல் நடுநிலைக்குழு ஒன்று நியமித்து இதை விசாரிக்க வேண்டும்.

பாக்கிஸ்தான் மட்டும் குழு நியமித்து விசாரித்தால் போதாது. எல்லா நாடுகளுமே முன் எச்சரிக்கையாக இதைப் பற்றி விசாரிக்க வேண்டும்.

காதல் நோய்க்கு மருத்துவன் இல்லை.

—ஆப்ரிக்

உழைப்பின் வேர்கள் கசப்பானவை; ஆனு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புதுடெல்லி, ஜுன் 1— காவல்துறை - ஆயுத போலீஸ் மற்றும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் படைகளில் சிறுபான் மைமக்களுக்கும் அதிக மான இடங்களை அளிக்க வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தியிடம் முஸ் லிம் தலைவர்கள் வற் புறுத்தியுள்ளார்கள்.

சமீபத்தில் மீரட் நகரில் ந்த வகுப்புக் கலவரம் ந்தமாக முஸ்லிம் களின் முக்கிய தலை கள் பலரும் பிரதமரை லியில் சந்தித்தார்கள்.

முன்னாள் மத்திய மைச்சர் குர்ஷித் ஆலம் ன், அலிகார் முஸ்லிம் கலைக் கழகத்தின் முன் ள் துணைவேந்தர் சையத் மீத், ஜாமியா மிலியா ல் கலைக் கழகத் ணைவேந்தர் அலி ஷ்ரப், சுப்ரீம் கோர்ட் க்கறிஞர் சல்மான் குர் த், அல் அமீன் அறக்கட் ளை செயலாளர் கமால் க்கி ஆகியோர்தான் பிரத ரைச் சந்தித்தவர்கள்.

## பாரபட்சமான படை

உத்தரப்பிரதேச ஆயுத ாலீஸ்படை எப்போதுமே சிறுபான்மை மக்களுக்கு விரோதமாகச் செயல்படு வதை முன்னர் நடந்த நிகழ்ச்சிகளைச்சுட்டிக் காட்டி னார்கள்.

ஏதாவது சிறுசம்பவம் நடந் தாலும் கூட அது பெரும் கல வரமாக வெடிப்பதற்கு உத் தரப்பிரதேச காவல்துறையும் ஆயுத போலீசுமே காரணம். திறமையற்ற முறையில் ஒரு வகுப்புக்கு சாதகமாக இந்தப் படை இயங்குவதால்தான் கலவரங்கள் அதிகமாகின் றன. என்பதை சமீபத்திய சம்பவங்களுடன் எடுத்துரைத் தார்கள்.

குறிப்பாக உத்தரப்பிரதேச ஆயுத போலீஸ் எப்போதுமே ஓரவஞ்சமாக, பாரபட்சமாக செயல்படுவதையும் விளக்கி னார்கள்.

இந்த அநீதிக்கு முற்றுப் புள்ளி வைத்து, மேலும் வகுப்புக் கலவரங்கள் வரா மல் தடுக்க வேண்டுமானால் உத்தரப்பிரதேசத்தின் காவல் துறை, ஆயுத போலீஸ் மற் றும் அரசின் சட்டம் ஒழுங்கு பாதுகாப்புப் பிரிவு களில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக் கும் கணிசமான இடங்களை ஒதுக்கவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார் கள்.

# கலவரப்பகுதியில் பிரதமர் ராஜீவ்

மீரட் நகரில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் ராஜீவ் காந்தி பார்வையிட்டார். தமது துணைவியார், மற்றும் அமைச்சர்களுடன், பாதிக்கப் பட்ட மக்களை பிரதமர் சந் தித்தார்.

பிரதமர் அவரது ஜீப்பை தாமே ஓட்டிச் சென்றார். அவரது துணைவியார் சோனியா காந்தி வெளியுற வுத்துறை அமைச்சர் என்.டி. திவாரி, உள்துறை இணை அமைச்சர் பா. சிதம்பரம், வீட்டு வசதித்துறை அமைச் சரும் மீரட்தொகுதி எம்.பி.யு மான மொஹ்சினா கித்வாய் உத்தரப்பிரதேச முதலமைச் சர் வீர் பகதூர், உள்துறை அமைச்சர் கோபிநாத் தீட்சித் ஆகியோரும் பிரதமருடன் சென்றார்கள்.

டெல்லியில் இருந்து ஹெலிகாப்டர் விமானத்தில் வந்த பிரதமர் நேராக அரசு விருந்தினர் மாளிகைக்குச் சென்றார், மாவட்ட நிர்வாக அதிகாரிகளையும், மக்கள பிரதிநிதிகளையும் அங்கு சந் தித்து விவரங்களைக் கேட் டறிந்தார்.

பின்னர் ஜீப்பில் ஏறி கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றார். ஆங்காங்கே மக்கள் அவரது ஜீப்பை நிறுத்தினார்கள். அவர்களின் குறைகளை கேட் டறிந்தார்.

கலவரத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளான சே கேட், பாங்கி கால ஹாபூர் ரோடு, சாஸ் நகர், மல்லியானா கிராட ஆகிய பகுதிகளுக்கும் சென்று மக்களிடம் நேரில் குறை களைக் கேட்டறிந்தார்.

மக்கள் கூட்டம் அவரது ஜீப்பைச் சூழ்ந்து கொண்ட தால் ஆங்காங்கே ஜீப் நகர முடியவில்லை. பிரதமரின் பாதுகாப்புப் படையினர் மிகவும் சிரமப்பட வேண்டிய தாயிற்று.



www.tamilarangam.net

# இலங்கை தமிழர் நிவாரணம்

திருச்சி ஜூன் 9— தமிழ் நாடு இ. காங்கிரஸ் நிர்வாகக் குழு நேற்று திருச்சியில் கூடியது. பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு உதவும் பிரதமரின் நிவாரண நிதிக்கு ரூ. 1 கோடி அளிக்க நிர்வாக குழு முடிவு செய்தது ஜூன் 22-ல் இலங்கை தமிழர் நிவாரண தினம் அனுஷ்டிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவர் எம். பழனியாண்டி பின்னர் நிருபர்களிடையே பேசுகை கையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த இ. காங்கிரஸ் எம். பி.க்களும், எம். எல். ஏ. களும் நிதிக்கு அவர்களது ஒருமாத ஊதியத்தை நன்கொடையாக வழங்குவர் என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பகுதியில் விமான மூலம் உணவுபொருள்களைப்போட்டதற்காக பிரதமர் ராஜீவ்காந்திக்கு நன்றி தெரிவித்த நிர்வாக குழு இத்தகைய நிவாரண உதவியை நீட்டிக்குமாறுவற்புறுத்தியது

இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து கொல்லப்படுவது குறித்து நிர்வாக குழு கவலை தெரிவித்தது.

விசேஷ அழைப்பாளராக நிர்வாக குழு கூட்டத்தில் கலந்து கொண்ட மகாராஷ்டிராவைச் சேர்ந்த எம்.பி.விலாஸ் முத்தெம்வார் நிவாரண நிதிக்கு ஒரு மாத ஊதியத்தை தமது நன்கொடையாக அறிவித்தார்.

## அஇஅதிமுக ரூ. 10 லட்சம் நிதி உதவி

சென்னை, ஜூன் 3— யாழ்ப்பாண தீபகற்பத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக நிவாரணம் அளிக்க தமிழக ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ரூ. 10 லட்சம் நிதி அளித்துள்ளது.

அஇஅதிமுகவின் பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான எம்.ஜி.ராமச்சந்திரன் புதனன்று இதை ஒரு அறிக்கை மூலம் அறிவித்தார்.

## திமுக ரூ.1 லட்சம் உதவி

சென்னை, ஜூன் 3— இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவிடும் நிதியாக தி.மு.க. அறக்கட்டளையிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று தி.மு.க. அறக்கட்டளையின் தலைவர் மு. கருணாநிதி புதனன்று அறிவித்தார்.

சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. தலைமை நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பேசிய கருணாநிதி மேற்கண்ட நிதி உதவி பற்றி அறிவித்தார். இலங்கைத் தமிழர்களுக்கு உதவிட தி.மு.க. அறக்கட்டளையிலிருந்து வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபாய் மத்திய அரசு மூலம் வழங்கப்

# உலக தலைவர்கட்கு

புதுடில்லி, ஜூன் 4— நிவாரணப் பொருட்களை இலங்கையில் இந்திய விமானம் மூலம் போட வேண்டிய கட்டாய சூழ்நிலை குறித்து பல நாடுகளிலுமுள்ள இந்திய தூதர்களுக்கு விரிவாக விளக்குமாறு ஐ.நாவின் நிரந்தர பிரதிநிதியான ஆர்ரோகானுக்கு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது. உடனடியாக இந்திய தூதர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கோரப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை பற்றி இந்தியாவில் எழுந்துள்ள கவலை குறித்தும் அவர் விளக்குவார் என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

தனது எல்லையில் ஏற்பட்டுள்ள "அபாயம்" குறித்து ஐ.நா.வில் இலங்கை மேற்கொண்ட புகாரை மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகார கமிட்டி விவாதித்தது

## ராஜீவ் காந்தி இன்றுகடிதம்

அவதியுறும் யாழ்ப்பா
மக்களுக்கு உடனடியாக நி
ரணப் பொருட்கள் அனு
வேண்டிய அவசியமும்
மனச சாரநத நடவடிக்
குறித்தும் சில நாடுகளின் த
வர்களுக்கு பிரதமர் ராஜ
காந்தி நாளை வெள்ளியன்
கடிதம் எழுதுவார். இந்
நடவடிக்கை குறித்து ஏதேனு
தவறான கருத்து தோன்றின
அதனை நீக்கும்பொருட்டு இ
கைய நடவடிக்கை அவ
மாக தெரிவதாக விஷயமறி
வட்டாரங்கள் தெரிவித்தன

பல்லாண்டு காலம
இலங்கைப் பிரச்சினைக்கு அ
யல் தீர்வு காண இந்தி
எடுத்து வரும் முயற்சி கு
தும் அவர் விளக்கி எழுதுவ
என்றும் தெரிகிறது.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம்.ஜி.ஆர். சார்பில் மந்திரிகள் அறிவிப்பு

திருச்சி, ஜூன் 7—

தஞ்சை மாவட்டத்தை பிரித்து, நாகப்பட்டிணத்தை தலைநகராகக் கொண்டு, ''காயிதெமில்லத்'' மாவட்டம் அமைவது உறுதி என்று முதல்வர் எம். ஜி. ஆர். சார்பில் அமைச்சர்கள் வி. வி. சுவாமிநாதன், சவுந்தராஜன் ஆகியோர் தெரிவித்தனர். திருச்சியில் நடந்த காயிதெமில்லத் பிறந்த நாள் விழாவில் இந்த உறுதிமொழியை அவர்கள் அளித்தனர்.

தஞ்சை மாவட்டத்தைப் பிரித்து நாகப்பட்டணத்தை தலைநகராகக் கொண்ட பகுதிக்கு கண்ணியத்துக்குரிய காயிதெ மில்லத் பெயர் சூட்டப்படும் என்ற அறிவிப்பை தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். தாமாகவே வெளியிட்டார்.

காயிதெ மில்லத் அவர்கள் மீது முதலமைச்சருக்கு எப்பொழுதும் பெருமதிப்பும் மரியாதையும் உண்டு.

பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் அந்தப் பெருந்தலைவரைப்போல ஒழுக்கமும் தூய்மையும் எளிமையும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென முதலமைச்சர் அடிக்கடி சொல்வார்கள்.

ஒரு புதிய மாவட்டம் அமைக்கப்பட வேண்டுமானால் பல கோடி ரூபாய்கள் செலவளிக்கப்பட வேண்டும். காயிதெ மில்லத் மாவட்டம் அமைக்கப்படுவதற்கு நிதி நிலைதான் தாமதப்படுத்துகிறதே தவிர அந்த மாவட்டம் அமைக்கப்படுவது உறுதி.

...வஹாப் ஜானி ஆகியோர் கருத்தரங்கில் பங்கு பெற்றுப் பேசினார்கள்.

### சுவாமிநாதன்

அமைச்சர் சுவாமிநாதன், காயிதெமில்லத் உருவப் படத்தைத் திறந்துவைத்து உரையாற்றினார்,

அவர் பேசும்போது கூறியதாவது:

உலகை மாற்றிய மாபெரும் புரட்சி வீரர்களான லெனின், மா-சே-துங் போன்றவர்கள் நடத்திய எளிய வாழ்க்கையைப்பற்றி புத்தகங்களில் நான் படித்திருக்கிறேன். அப்போதெல்லாம் அவ்வளவு எளிய வாழ்க்கையை மனிதனால் நடத்த முடியுமா என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு.

ஆனால் கண்ணியத்துக்குரிய காயிதெ மில்லத் அவர்கள் எங்களூர் சிதம்பரத்தை அடுத்த லால் பேட்டைக்கு அடிக்கடி வந்து போதெல்லாம் அவர்களுடைய எளிமையைப் பார்த்து வியந்து போயிருக்கிறேன். அரசியலில் மிகவும் தேவைப்பட்ட ஒழுக்கத்தை அவர்கள் பேணி வாழ்ந்திருக்கிறார்கள்.

அத்தகைய நல்லவர் நினைவை நிரந்தரமாக்க நாம் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெற்றே தீரும்.

இவ்வாறு அமைச்சர் சுவாமிநாதன் கூறினார்.

### பேராசிரியர்

ஜமால்முஹம்மது கல்லூரி முதல்வர் பேராசிரியர் நைனார் முஹம்மது ''காயிதெ மில்லத் அவர்களிடம் காணப்பட்ட சீரிய நற்குணங்களையெல்லாம் விரிவாக சொல்லிக் காட்டினார்.

அடுத்து பேசிய பேராசிரியர் சத்திய சீலன் சமுதாயங்களுக்குடையே ஒற்றுமையை நிலைநாட்டிய சான்றோராக காயிதெ மில்லத் விளங்கியதைச் சுட்டிக் காட்டினார். 'பாரதி' என்றால் பாட்டு நினைவுக்கு வருவது போல, 'கட்டபொம்மன்' என்றால் வீரம் நினைவுக்கு வருவது போல - 'வ. உ. சி' என்றால் தியாகம் நினைவுக்குவருவதுபோல 'காயிதெ மில்லத்' என்றால் ஒற்றுமை நினைவுக்கு வருகிறது என்று பேராசிரியர் சத்தியசீலன் குறிப்பிட்டார்.

உலகில் செல்வரே பல கேட்டிற்குக் காரணமாயிருத்தல் கண்கூடு. ஏழைத் தொழிலாளர் உழைப்பால் பெறுஞ் செல்வத்தை முதலாளிகள் களியாடல்களுக்குச் செலவு செய்தல் பெருந்தவறு.

—திரு.வி.க.

செல்வம் தான் மனிதனுக்கு ஆறுவது அறிவு, அது இல்லாவிட்டால் மற்ற ஐந்து அறிவுகளைவைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது.

—சாமர்செட்மாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திட்டமிட்டபடி நடக்குமா?

மெல்போர்ன் ஜூன் 7— இந்த ஆண்டு அக்டோபர் மாதம் இந்தியாவில் துவங்க உள்ள உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள், எவ்விதத் தடையுமின்றி நிச்சயமாக நடைபெறும் என்று உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளின் அமைப்புக் குழுத் தலைவர் என். கே. பி. சால்வே தெரிவித்துள்ளார்.

இந்த போட்டிகளில் பாகிஸ்தான், நியுசிலாந்து' ஆஸ்திரேலியா, இங்கிலாந்து இலங்கை, மேற்குஇந்தியத் தீவுகள், இந்தியா ஆகிய கிரிக்கெட் அணிகள் கலந்து கொண்டு விளையாடுகின்றன.

இதில் ஆஸ்திரேலியா இங்கிலாந்து அணிகளில் தென் ஆப்ரிக்காவில் சென்று விளையாடிய வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

தென்ஆப்ரிக்காஅரசு கறுப்பர்களுக்கு எதிராக நிறவெறி கொள்கையைக் கடைப்பிடித்து வருவதால், அந்நாட்டைச் சேர்ந்த வீரர்களையோ அல்லது அங்கு சென்று விளையாடிய வெளிநாட்டு வீரர்களையோ இந்தியாவில் விளையாட அனுமதிப்பதில்லை என்று மத்திய அரசு கொள்கை வகுத்துள்ளது.

இப்போது, தென்ஆப்பிரிக்கா சென்று விளையாடிய தலைசிறந்த கிரிக்கெட் வீரர்கள் இந்த அணிகளில் இடம் பெற்றுள்ளதால், அவர்களை இந்திய அரசு இங்கு வந்து விளையாட அனுமதிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தப்பிரச்னை காரணமாக உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் நடைபெறாமல் போகுமோ என்ற சந்தேகம் கிரிக்கெட் ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ளது.

இந்த சந்தேகத்தை உலகக் கோப்பை கிரிக்கெட் அமைப்புக் குழுத்தலைவர் என்.கே.பி. சால்வே போக்கினார்.

''உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் உறுதியாக நடைபெறும்'' என அவர் கூறியுள்ளார்.

நேற்று மெல்போர்னில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சங்கத் தலைவருடன் இது குறித்து அவர் பேச்சு நடத்தினார். நியுசிலாந்து, பாகிஸ்தான்' கிரிக்கெட் சங்க உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# இலங்கை ராணுவ முகாமில் 7 தமிழர் கொல்லப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 7— இலங்கையின் தென் பகுதியில் உள்ள பூசாவில் இருக்கும் ராணுவ காவல் முகாமில் 7 தமிழ் கைதிகள் கொல்லப்பட்டனர் நேற்று முன் தினம் இரவு 7 பேரும் காவல் முகாமிலிருந்து தப்ப முயற்சித்ததாகவும் பாதுகாப்பு படையினர் சுட்டதாகவும் அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது.

7 பேரும் பயங்கரவாதிகள் என்றும் சாப்பாட்டு நேரத்தில் காவலர்தடையை மீறி தப்பிச்செல்ல அவர்கள் முயற்சித்ததாகவும் அறிக்கை குறிப்பிட்டது.

காவலர்களால் சமாளிக்க முடியாததால் பாதுகாப்பு படையினர் அமைக்கபட்டதாகவும் அறிக்கை கூறியது. காலே மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டான். 7 பேரும் இறந்து விட்டதாகக் கூறப்பட்டது.

பூசா முகாமில் சுமார் 3 ஆமிரம் தமிழர்கள் காவற் கைதிகளாக உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டது.

# 3000 தமிழ் இளைஞர்கள் கதி என்ன?

வல்வெட்டித்துறை, ஜூன் 7 யாழ்ப்பாணத்தில் இலங்கை ராணுவம் ஆதிக்கம் பெற்றுள்ள வடமராச்சிப் பகுதியில் 3000 தமிழ் இளைஞர்களை ராணுவத்தினர் பிடித்துச் சென்றுவிட்டனர்.

அவர்கள் கதி என்னஎன்று தெரியவில்லை. அதே போல் பள்ளிக்கூடம் ஒன்றில் புகுந்து 300 குழந்தைகளையும் ராணுவத்தினர் கடத்திச் சென்று விட்டனர் அவர்கள் இது வரைத்தி நம்பி வரவில்லை.

வடமராச்சிப் பகுதிக்கு அதுலத் முதலி பத்திரிகை நிருபர்களை அழைத்துச் சென்றபோது, அப்பகுதி

அழுக்குப் பிடித்த கைகளையுடையவனை நம்பி நூல் சிக்கலை அவிழ்க்கக் கொடுக்காதே.

—பிலிப்பைன்ஸ்

ஒரு ஷில்லிங்கின் பெறுமதியை நீ அறிய விரும்பினல், அதைக் கடன் கேட்டுப்பார்.

—இங்கிலாந்து

சிறு செலவுகள் முழுச்செல்வத்தையும் விழுங்குகின்றன.

—அயர்லாந்து

மெழுகுத் தலையர்கள்

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உத்திரபிரதேச காவலர் படையை கலையுங்கள்!

மனித இனமே வெட்கித் தலை குனியத் தக்க ஈனப் படுகொலைகள் மீரட் நகரிலும், அதை அடுத்துள்ள மல்லியானா பகுதியிலும் நடந்துள்ளன.

இதை முன் நின்று நடத்தியவர்கள், ஏதோ வெறி உணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்ட பொதுமக்கள் அல்ல; மாறாக, இத்தகைய பயங்கரம் நிகழுமேயானால், அதை தடுத்து 'நிறுத்தக் கடமைப்பட்ட, போலீஸாரில் ஒரு பிரிவினரே என அறியும் போது யாரும் திடுக்குறவே செய்வார்கள். உத்திரப்பிரதேச மாநிலத்தில் பி.ஏ.ஸி. (பிரவன்ஸியல் ஆர்ம்டு' கான்ஸ்டப்ளரி) என்று காவலர் பிரிவு ஒன்றிருக்கிறது.

நாடு விடுதலை பெற்ற நாளில் இருந்து, கொடுமைக்கு-குறிப்பாக - சிறுபான்மை மக்களைக் கொன்று குவிப்பதில்-சித்திரவதை செய்வதில் - அவர்களுடைய சொத்துக்களைச் சூறையாடுவதில் பி.ஏ.ஸி.யில் ஒரு பிரிவார் மிகவும் பிரசித்தியாகி யிருக்கிறார்கள்.

போலீசாருக்கு நம் தமிழ்நாட்டில் 'காவலர்கள்' எனப் பெயர் சூட்டியிருக்கிறோம். ஏனெனில், எல்லா விதத் தீமைகளில் இருந்தும், தீயவர்களில் இருந்தும் அவர்கள் நாட்டையும், நாட்டு மக்களின் உயிர், உடமை, பொருள் ஆகியவற்றையும் காக்க விதிக்கப்பட்டவர்கள்; பொறுப் பேற்றவர்கள்.

ஆனால், உத்திரப் பிரதேச மாநிலத்திலே, பி.ஏ.ஸி, குற்றமிழைக்கும் கொடியவர்கள் கூடாரம் என்ற அளவுக்குப் பிரசித்திப் பெற்றுவிட்டது.

நடந்துள்ள பல நூற்றுக்கணக்கான கலவரங்களில் பரிதாபத்திற்குரிய சிறுபான்மை மக்கள், மிகவும் கொடுமைக்கு ஆளானது, பி.ஏ.ஸி. படையினரால்தான் என எத்தனையோ அரசு அறிக்கைகள் எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றன. முராதாபாத், லக்னவ், பனாரஸ், கான்பூர் போன்ற இடங்களில் முன்னர் நடந்த கலவரங்களில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு, பி.ஏ.ஸி யினரை பாதுகாப்புக்காக நிறுத்திய நேரத்தில், பாவப்பட்ட சிறுபான்மை மக்களை சித்திரவதை செய்வதிலும் அவர்கள் பொருளை சூறையாடுவதிலும், பெண்டிரைக் கற்பழிப்பதிலும், அப்பாவிகளைக் கொலைசெய்வதிலும் ஈடுபட்டிருந்திருக்கின்றனர்.

முராதாபாத் கலவரத்திற்குப் பிறகு, சற்றேறப்ப ஒரு மாத காலம் அங்கு நிறுத்தப்பட்டிருந்த பி.ஏ.ஸி.யினர் ஒவ்வொருவரும் கொள்ளையடித்த பொருள்களை விற்று தினந்தோறும் தம் வீடுகளுக்கு மணிஆர்டர்மூலம் பணம் அனுப்பியதற்கான தடயங்களும் முன்னர் அரசிற்குக் கிடைத்திருக்கின்றன.

பல சந்தர்ப்பங்களில், மக்கள் மிருக வெறிக்கு இலக்காகிவிட்ட போது ஏற்பட்ட சேதங்களைவிட ஊரடங்குச்

## கலவரத்தைத் தடுக்க

புதுடெல்லி,

நாட்டில் வகுப்புக்கலவரங்கள் நிகழாமல் தடுக்க வேண்டுமானால் எல்லா சேனைகளையும் தடை செய்ய வேண்டும் என்று பிற்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் சிறுபான்மையினர் சங்கத் தலைவர் சந்திரஜித்யாதவ் வலியுறுத்தி இருக்கிறார்.

இந்த சங்கத்தின் சார்பில் மீரட் நகரில் கலவரப் பகுதிகளை 'சந்திரஜித்யாதவும் ஒரு தூதுக் குழுவும் சுற்றிப் பார்த்தது பின்னர் யாதவ் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

மீரட் கலவரங்கள் இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையையே குலைத்துவிட்டன. போலீசாரின் அட்டகாசங்களை மக்கள் கதை கதையாகச் சொல்கிறார்கள் என்றார்.

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய அரசு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும்.

1984 - ல் டெல்லியில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட சீக்கிய மக்களுக்கு அளித்தது போல அவசரமாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்றார் அவர். பெரும்பான்மை வகுப்பு சார்பில் அமைக்கப்பட்டுள்ள எல்லா சேனைகளையும் தளங்களையும் தடை செய்தால்தான் மேலும் வகுப்புக் கலவரம் ஏற்படாமல் தடுக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு மத்திய அரசு வகுப்பு ஒற்றுமையைப் பார்க்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

உத்தரப்பிரதேசம் வகுப்புக் கலவரங்களின் நிலைக்களனாகி வருகிறதே என்றும் அவர் வருத்தப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சட்டம் இருந்த நேரங்களில் இந்த பி.ஏ.ஸி.யினர் உண்டாக்கிய சேதமே அதிகம்எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆக பி.ஏ.ஸி. படையினரின் பெரும்பாலோர், ஜனக் கொலைகாரர்களாகவே பெயர் எடுத்துவிட்டனர்.

இதைப்பற்றி இந்திரா அம்மையார் பிரதமராக இருந்தபோது சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் வற்புறுத்தி வேண்டினார்கள். அந்தப் போலீஸ் பிரிவையே [illegible]விடவேண்டும் என்றவேண்டுகோளும் விடுக்கப்[illegible]. அதைப்பற்றி அரசும் ஆராய்ந்து வந்ததை [illegible]றிவோம்.

ஏனென்றில், ஜனதா ஆட்சிக்காலத்தில் ஜனசங்கத்தினரும் பொறுப்பில் இருந்ததைப் பயன்படுத்தி, ஆர்.எஸ். [illegible] நபர்கள் பலர் பி.ஏ.ஸி. பிரிவில் பெரும் அளவு சேர்க்கப்பட்டு விட்டனர் என கருதப்பட்டது.

இப்போது, மீரட்டிலும் அதை அடுத்துள்ள மல்லியானாவிலும் நடந்துள்ள படுகொலைகள் சிறுபான்மை மக்களைப் பூண்டோடு ஒழிக்கும் சதித் திட்டம் கொண்டுள்ள [illegible] ஒட்டு மொத்தமான நோக்கத்தை நிறைவேற்ற பி.ஏ.ஸி. கொடுத்துள்ள ஒத்துழைப்பை வெளிச்சம் போட்டு காட்டி விட்டது.

முன்னாள் மத்திய அமைச்சரும் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஜாகீர் ஹுசைன் அவர்களின் மருமகருமாகிய குர்ஷித் ஆலம் கான் தலைமையில் பிரதமர் ராஜீவ் அவர்களைச் சந்தித்த குழுவினர் பி. ஏ. ஸி.யினரால் ஏற்பட்ட கொடுமையை எடுத்துக் கூறி பரிகாரம் தேடி இருக்கின்றனர்.

மீரட் பிரதிநிதியாக, நாடாளுமன்றத்தில் அங்கம் பெற்றுள்ள மத்திய மந்திரி முஹ்ஸினா கித்வாயின் தனி அலுவலர், பிரதமர் ராஜீவ் மீரட் சென்றிருக்கும்போது தாக்கப்பட்டிருக்கிறார் என்பது கொண்டு, வகுப்பு வெறியர்களின் ஆதிக்கம் அங்கு எவ்வளவு மேலோங்கியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

பிரதமர் மீரட் சென்று திரும்பிய முதல் வேலையாக அங்கிருந்த எல்லா அதிகாரிகளும் இடம் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இது மட்டும் போதாது. மீரட், டில்லி, கலவரப் பகுதிகளில், வகுப்புவாத வெறிக்கு ஆட்படாத தமிழக போலீஸார் நிறுத்தப்படவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக. பி. ஏ. ஸி. என்ற இரத்த வெறிபிடித்த படுபாவங்களுக்கு அஞ்சாத ஜனக் கொலை வெறியர்களைக் கொண்ட போலீஸ் பிரிவு உடனடியாகக் கலைக்கப்படவேண்டும். அவர்கள் நடத்திய படுகொலைகள் பற்றி நீதி விசாரணை நடத்தி தண்டனை வழங்கப்படவேண்டும் என வற்புறுத்தி வேண்டுகிறோம்.

பாம்பு எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்கிறது — உயிரோடிருந்தாலும், செத்திருந்

# நாவல்கள் படிக்கும் ஆர்வத்தில் வீட்டை விட்டு சென்ற மாணவி

கொச்சி (கேரளம்).

மர்ம நாவல்களைப் படிக்கும் ஆர்வத்தில் வீட்டை விட்டுச் சென்ற அனுகுத் என்ற பஞ்சாபி மாணவி புதனன்று காலை கொச்சி திரும்பியதாகப் போலீஸார் கூறினர்.

கொச்சியிலிருந்து கடந்த மே மாதம் 20 ஆம் தேதி புறப்பட்டுச் சென்ற அந்த மாணவி, சென்னை, ஹௌரா, டார்ஜிலிங் ஆகிய நகரங்களுக்கு தனியாகச் சென்று விட்டு, வீடு திரும்பியதாகக் கூறப்படுகிறது.

சென்னையிலிருந்து கேரளத்திற்குச் சென்ற ஒரு ரயிலில், அந்த மாணவியைக் கண்ட ஒரு மாணவர் அவரை வீட்டிற்கு அழைத்து வந்ததாகப் போலீஸார் கூறினர்.

வீட்டை விட்டுத் தனியாகப் புறப்பட்டுச் சென்ற அந்த மாணவி, 24 நாவல்களைப் படித்து முடித்துவிட்டதாகப் போலீஸார் கூறினர். மர்ம நாவல்களைப் படிக்கும் ஆர்வத்தில் அந்த மாணவி இவ்வாறு நடந்து கொண்டதாக மாணவியின் பெற்றோர் கூறியுள்ளனர்.

எர்ணாகுளம் 2-வது வகுப்பு மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நிறுத்தப்பட்ட அந்த மாணவியை, அவரது தகப்பனாரிடம் நீதிபதி ஒப்படைத்தார்.

பொய், களவின் ஆரம்பம்.

முகத்துக்கு இனிப்பான நஞ்சு

—எஸ்.தோனியா

www.tamilarangam.net



கொழும்பு, ஜூன். 9-

யாழ்ப்பாணத்தில் இலங்கை ராணுவம் தனது இறுதித் தாக்குதலை நடத்திக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் கொழும்பு நகரில் இந்தியத் தூதரகத்தைச் வளைத்து ஆர்ப்பாட்டம் நடத்த புத்த பிக்குகள் திட்டமிட்டுள்ளனர். ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து, அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும் பிரதமர் ராஜீவ் காந்தி உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். தமிழக அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் நடக்கும் இந்தக் காரியங்கள் இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளன. இலங்கையிலுள்ள இந்தியர்— இந்தியர் உடைமைகளுக்கு ஏதாகிலும் சேதம் ஏற்படுமானால் இலங்கை அரசுதான் பொறுப்பு என்று இந்திய அரசு ஏற்கனவே எச்சரித்துள்ளது.

இருந்தாலும் இலங்கையின் ஆளும் கட்சியே இப்படிப்பட்ட ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தவிருப்பதால் இலங்கையிலுள்ள இந்தியர்களின் பாதுகாப்பு பற்றி இந்தியா அக்கறையுடன் கவனித்து வருகிறது.

### ஆளும்கட்சி தூண்டுதல்?

இந்திய தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்த ஜெயவர்த்தனாவின் ஆளும் கட்சியும் முடிவு செய்துள்ளது அவரது அரசில் உள்ள இரண்டு அமைச்சர்களே இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நேரடியாக ஆள் திரட்டுகிறார்கள்,

### தலைகீழ் மாற்றம்'

ஆரம்பத்தில் இருந்தே இலங்கை அரசு இந்திய உதவிப் பொருட்களை கொண்டு போவதில் தடைகளை ஏற்படுத்தி வந்தது. ஒரு கட்டத்தில், காங்கேசன் துறை வரைக்கும் கொண்டு வரலாம், அங்கே எங்களிடம் ஒப்படைக்கலாம் என்று நிப

## இலங்கை கிண்டல்

இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா நிவாரணம் அனுப்பியதை இலங்கை அரசு கிண்டல் செய்து இருக்கிறது..

இலங்கை மக்களுக்கு நிவாரணம் தேவையில்லை, தமிழ்நாட்டு மக்கள்தான் பட்டினியால் வாடுகிறார்கள். அவர்களுக்குத்தான் நிவாரணம் தேவை. அவர்களுக்கு அந்தப் பண்டங்களைக் கொடுங்கள் என்று இலங்கை அதிகாரி ஒருவர் நிருபர்களிடம் கிண்டலாகக் கூறி இருக்கிறார்.

இலங்கை அரசின் இந்த நிபந்தனையையும் மொய்த்ரா கடற்படையினரிடம் சுட்டிக் காட்டினார்.

ஆனால், கடற்படையினரோ, 'இங்கிருந்து திரும்பிச் செல்லுங்கள் இன்றேல் கடுமையான விளைவு ஏற்படும்' என்று எச்சரித்தனர்.

எனவே வேறு வழியே இல்லாத நிலையில் இந்தியப் படகுகள் இரவு 10-30 மணிக்கு திரும்பி வரவேண்டியதாயிற்று.

மொத்தம் ஆயிரம் டன் உணவு மற்றும் மருத்துப் பண்டங்கள் அனுப்பட்டவை இப்படியே திரும்பும் நிலை

## எம். ஜி. ஆர். எச்சரிக்கை

இலங்கைகடற்படையின் இந்த எச்சரிக்கை மிரட்டலாக கருதப்படும் என்று முதலமைச்சர் எம். ஜி. ஆர். கூறி இருக்கிறார்.

'இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி இந்திய கடற்பகுதியில் மட்டுமின்றி இலங்கை கடற்பகுதியிலும் மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமை உள்ளது. நிதியுதவி அளிக்கும் சாக்கில் ஈழத்தமிழர்களுக்கு தாம் ஆயுதங்களை அனுப்புவதாக கூறும் புகார் ஆதாரமற்றது. வதந்திகளைப் பரப்பவே துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதாக எம். ஜி. ஆர். கூறி இருக்கிறார்.

பிரேமதாசா இந்தியாவை எச்சரிக்கும் விதத்தில் பேசினார்.

இந்தியாவில் இருந்து இலங்கை அரசு எந்த உதவியையும் கோரவில்லை. அப்படி இருக்க இந்தியா வலிய வந்து இலங்கையின் ஒரு பகுதி மக்களுக்குமட்டும் உதவி அளிக்குமானால் அது இலங்கைக்கு ஆத்திரமூட்டுவதாகவும், இது வன்முறைக்கு காரணமாக பயங்கர கலவரத்துக்கு காரணமாகவும் அமையும் என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**முதல் அமைச்சர் நான்தோறும் சாப்பிடும் மருந்து—மாத்திரைகளின் மதிப்பு ரூ.2400. ஏன் இந்த மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்?**

பொதுவாக மனித உடலில் அந்நிய உறுப்போ, வெளிப்பொருளோ, கிருமியோ நுழைந்தால் நமது உடலின் எதிர்ப்புச் சக்தி அதனை வெளியேற்றிவிடும்.

உதாரணமாக கண்ணில் தூசி விழுந்தால், கண்ணீர் சுரந்து தூசி வெளியேறி விடும். வயிற்றுக்குள் கெட்ட ஆகாரம் போனால், வயிற்றுப்போக்கு, வாந்தி ஏற்பட்டு அது வெளியேற்றப் படும். நோய்க்கிருமிகள் புகுந்தால் அதனை எதிர்த்து வெள்ளை அணுக்கள் போராடும். அப்போது ஏற்படுவதுதான் காய்ச்சல்.

எம்.ஜி.ஆர். உடலில் மற்றொருவரின் (லீலாவதி) சிறுநீரகம் பொருத்தப்பட்டு இருக்கிறது. அது அந்நிய உறுப்பாக இருப்பதால் அவரது உடல் அந்த சிறு நீரகத்தை எதிர்க்கிறது.

இந்த எதிர்ப்பைத் தடுப்பதற்காக அவர் மாத்திரைகளைச் சாப்பிடு கிறார். இதிலும் ஒரு ஆபத்து உண்டு. இந்த மாத் திரைகளைச் சாப்பிடுவதால் அவரது உடல் நோய்களை எதிர்க்கும் சக்தியை இழந்து விடுகிறது. எனவே நோய்க் கிருமிகளை எதிர்ப்பதற்காக வும் மாத்திரைகளைச் சாப் பிடுகிறார். சிறுநீரகம் நீரைப் பிரிக்கும்போது இதயம் பலவீனம் அடையாமல் இருக்க ஒருவகை மாத்திரை. சிறு நீரைக்கழிக்க 15 நிமிட இடை வெளிக்காக ஒருவகை மாத் திரை. சர்க்கரைவியாதியை கட்டுப்படுத்த ஒருவகை மாத்திரையும், பேச்சை வர வழைக்க ஒருவகை மாத்தி

## காளிமுத்துவுக்குத் தண்டனை

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப் பட்ட காளிமுத்து அவருக்கு ஒதுக்கப்பட்ட அரசாங்க வீட்டிலேயே தொடர்ந்து குடி யிருந்து வந்தார். தலைவர் (முதல்வர்) வீட்டை காலி செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். அதனால்காலிசெய்ய வில்லை என்று செய்திகள் பரப்பப்பட்டது. எந்த நேரத்திலும் மீண்டும் அமைச்சரவை யில் காளிமுத்து சேர்த்துக் கொள்ளப்பட லாம் என்ற பேச்சும் அடிபட்டது. அந்த நம் பிக்கைக் காரணமாக ஜெயலலிதாவுக்கும், மத்திய அரசுக்கும் எதிராக தூக்கியபோர்க் கொடியை கீழே போட்டு விட்டு இருக்கிற இடம் தெரியாமல் இருந்து வந்தார். திடீ ரென்று ஒரு நாள் பொதுப்பணித் துறையிலிருந்து மாதம் 10 ஆயிரம் வாட கை நிர்ணயம் செய்து மூன்று மாதத்துக்கு முப்பதாயிரம் ரூபாய் வாடகை கட்டும்படி காளிமுத்துவுக்கு நோட்டீஸ் வந்தது. அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் தொலை பேசி இலாகாவிலிருந்து 27 ஆயிரம்ரூபாய் கட்டும்படி மற்றொரு நோட்டீஸ் வந்தது. நண்பர்கள் சிலரை அழைத்து உடனடியாக வீட்டை காலிசெய்து விடுங்கள். வேறு வீடு பாருங்கள் என்று மனம்நொகச் சொல்லி விட்டு மதுரைக்குப் போய்விட்டார் காளி முத்து.

குழிதோண்டுகிறவனே அதில் விழ்வான்.

—மலாயா

நற்சுகத்தோடிருப்பவனுக்குத் தினமும் திரு மணம்.

—துருக்கி

இதயம் சாவதைவிட கண்கள் சாவது மேலானது.

—ஜான்லிபார்

நாணமில்லாத பெண் உப்பில்லாத உணவு மாதிரி.

—ஹங்கேரி

உடையவனின் பாதம் வயலுக்கு உரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அர்ச்சகரின் அந்தரங்கம்!

மருதமலை முருகன் கோவிலுக்கு ஆடி மாதம் தோறும் செல்வதுண்டு.

அந்தக் கோவில் குருக்கள் மீது எனது நண்பர்கள் சிலர் அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள்.

"அர்ச்சனை தட்டுகளில் இருக்கும் தேங்காய்களைத் திருடி மார்க்கெட்டில் விற்றுவிடுவார்கள்'' என்று சொன்னார்கள்.

அது எப்படி எதற்கு? என்று கேட்டேன். "அர்ச்சனைத் தட்டில் தேங்காய் வைத்துக் கொண்டு சென்று அர்ச்சகரிடத்தில் கொடுப்போம். அவர் உள்ளே எடுத்துச் செல்லுவார். தேங்காயை உடைத்து முடி உள்ள பாகத்தை நம்மிடம் தருவார். மற்றொரு பகுதியை எங்கே என்று கேட்டால் சாமிக்கு கொடுத்தாச்சி என்பார். அடுத்தவர் முடித் தேங்காயை கொண்டு செல்லுவார். அவர் கொண்டு வந்த தேங்காயை எடுத்துக் கொண்டு, நம்மிடமிருந்து எடுத்துக் கொண்ட தேங்காயில் எஞ்சியிருக்கும் மற்றொரு பாகத்தை அவருக்கு கொடுத்துவிடுவார். அவர் கொண்டு வந்த முழுத் தேங்காயையும் எடுத்துக் கொள்ளுவார். இப்படியே இரண்டு தேங்காய்களுக்கு ஒரு தேங்காய் அர்ச்சகருக்கு கிடைத்துவிடும்'' என்று சொன்னார்கள்.



அவர் சொன்ன குற்றச்சாட்டு உண்மையா என்பதை அறிந்து கொள்ளுவதற்காக மூன்று நண்பர்களுடன் மருதமலைக்குச் சென்றேன். மூன்று தேங்காய்களை வாங்கிக் கொண்டோம். மூன்று தேங்காய்களிலும் சிகப்பு, கருப்பு, பச்சை கலர்களைத் தடவிக் கொண்டு அர்ச்சகர் கையில் கொடுத்தோம். நான் கொடுத்த சிகப்பு கலர் தேங்காய் எனக்கு பாதியாகவும், மீதியுள்ள பகுதி என் நண்பருக்கும் வந்தது. நண்பர் கொடுத்த பச்சை கலர் தேங்காய் பின்னால் நின்ற மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்கள் கொடுத்த தேங்காயை உடைக்கவில்லை.

உடனே அர்ச்சகரிடம் கேட்டோம். அவர் சொன்னார். "தேங்காய் பகவானுக்கு எடுத்துக் கொண்டோம். பகவானுக்கு சேவை செய்கிறவனுக்கு அந்த தேங்காய்தானே மிச்சம்'' ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டுப் போய்விட்டார்.

இரண்டு தேங்காய்க்கு ஒரு தேங்காயை மிச்சப்படுத்தினால் ஒரு நாளைக்கு எவ்வளவு தேங்காய்கள் அர்ச்சகர்களுக்கு சேரும்.

ஆடிக் கிருத்திகை, தைப் பூசம் ஆகிய விழாக் காலங்களில் லட்சக் கணக்கில் பக்தர்கள் கூடுவார்கள். அந்த நாட்களில் அர்ச்சகருக்கு எவ்வளவு தேங்காய்கள் கிடைக்கும்?

கணக்கு போட்டு பார்த்தேன். தலையே சுற்றி விட்டது. கடவுள் பேரைச் சொல்லி நடக்கும் இந்தத் தேங்காய் கொள்ளையைத் தடுக்கமாட்டார்களா'

— கு. பீதாம்பரம்,
மேட்டுத்தெரு,
கடலூர்.

**நம்முடைய வாழ்க்கையில் நாம் எதை நம் ஒழுக்கத்தோடு சேர்க்கிறோமோ அதைத்தான் நாம் இவ்வுலகத்தை விட்டு மறையும்போதும் எடுத்துச் செல்ல முடியும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# போலிஸ் நெ. 2

அயோத்தி நாட்டு மதுகை மைந்தர்கள், மதுமைந்தர்களை விடக் கேவலமான மனப்பான்மையினராக இருந்தது பற்றிக் கம்பரசம் என்பது, கேவலம் காமரசமாக இருப்பதை எடுத்துக் காட்டினேன். ஒரு காலத்தில் சோமரசம் குடித்துக் கூத்தாடிக் கிடந்த ஆரியருக்கு ஆதிக்கம் வந்ததன் காரணம், இவ்வித மான மனப்பான்மை கொண்ட புலவர்களின் துணைகொண்டு, தமிழரின் நெஞ்சிலே ஆதிநாள் ஆரியர் நஞ்சு புகுத்தியது. அதன் விளைவுதான் இந்தநாள் ஆரியரின் ஆதிக்கம் ஆணி வேருடன் தழைத்திருப்பது. இந்த ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமானால் கம்பரசத்தின் சுவையிலே சொக்கும் சல்லாபிகளாக நம்மவர் இருத்தலாகாது. தித்திப்பான பண்டத்தினுள்ளே தீங்கான போதையை வைத்துக் கொடுப்பது போல, கலை, காவியம் என்ற இனிப்புடன் சேர்த்து, ஆரியம் தரப்பட்டிருக்கிறது இதனை உணராதார் ஊராருக்கு வந்துற்ற இடர்களைத் தெரியாதார் என்பேன்.

நடிப்புக் கலையிலே நாலாவது இடமும் பெற இலாயக் கற்ற நங்கையர், நயனத்தின் நடமாட்டத்தாலும் இன்சொல் பேசி இடையாட்டுவதாலும், அரைநிர்வாண அலங்காரத் தாலும், நட்சத்திரங்களாவது காண்கிறோம். அவர்களின் நடைமுறையினைக் கண்டித்துப் பத்திரிகைகள் எழுதிடப் படிக்கிறோம். 'ஆமப்பா! அவள் எந்தப் படத்திலே நடித்தா லும் ஆபாசமான காட்சிகளாகத்தான் இருக்கிறது, என்று பேசுகிறோம். ஆனால் கம்பனின் கலையிலே தேங்கிக் கிடக்கும் காமரசத்தை கண்டிக்க முன்வர மறுக்கிறோம், நா கூசுகிறது; நடுக்கம் பிறக்கிறது; ஏன் இந்த ஒரவஞ்சனை ?

பனிநீரில் குளித்துப் பட்டாடை உடுத்திப் பரிமள கந்தம் பூசி, அணி பல பூண்டு, பஞ்சணை ஏகி, பாச மூட்டும் விழியும், சிலம்பு கொஞ்சும பாதமும், பவளச் செவ்வாயும் பளிங்கு போன்ற உடலும், பொன்னிற மேனியும், பதைப்புற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீசியும் ''அன்பா! என்ன தேவை?'' என்று கேட்கட்டும். அருகே சென்று கொஞ்சுமொழிப் பேசி பஞ்சபாணத்தை வீசி படுக்கையிலே பக்கத்தில் படுத்து .......... !!

இந்த 'ரசம்' கேட்காமல், எதிர்பாராமல் கிடைத்திட்டால், எப்படி இருக்கும்! அதுவும் ஒரு காசும் செலவின்றி; முன்பின் கண்டதில்லை; தூது விட்டதுமில்லை, ஆனால் அந்த ரசவல்லிகளோ, உல்லாசத்தை உவகையுடன் தந்து, உரசி நின்று உபசரிக்கின்றனர். ஒரு பொருளும் கேட்டாரில்லை. வலிய அணைத்த சுகமன்றோ சுகம். அதிலும் வக்கிரங்களலல வகையிழந்த வயோதிகங்களுமல்ல, சரச குண ஜெகன் மோகினிகளய்யா! சுவை தரும் பருவமுள்ள மங்கையர் வாசமலர் கூந்தலழகியர் அவர்களை அருகேயழைத்து இருகை பற்றியிழுத்து, மஞ்சத்தில் படுக்கவைத்துப் பக்கமேவி, படு பாவியாம் மதனன் விடுகணைகளைப் பொடி பொடியாக்கி விடுகிறார்கள்!

''பரதா! எங்கேயப்பா, இத்தகைய 'புண்யவதிகள்' உள்ளனர்? இத்தகைய காமவல்லிகள், கருணாமூர்த்திகள் தியாகதேவிகள் எங்கே உள்ளனர்? இருந்துமுகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி எழுந்து வாயேண்டி இரவு மணி பத்தாச்சி!'' என்று அழைத்தாலும் இருமலும் காய்ச்சலும் இழுத்து வதைக்குதே என்று ஈனக் குரலில் பேசிடும் இன்பக் கொல்லிகளிடம் இடர்பட்டுக் கிடக்கிறோமே, கண்டதும் களி கொண்டு மதனன் மாளிகைக்கு அழைத்துச் செல்லும் ஆரணங்குகள் உள்ள அந்த போக பூமி எங்கேயிருக்கிறது? எமக்குக் கூறு, என்று கேட்கத் தோழர்கள் துடிப்பர்; கலவியைக் கேட்குமுன் வழங்கும் இக்காரிகையர் வாழுமிடம் தெரியும். ஆனால் என்மொழியை அவர் கேளார். அந்தக் கோலாகலக் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் சாதாரண சாமான்ய பேர்வழியல்ல. பரமனருள் பெற்றுப் பந்தபாசம் விட்டு, நாலு வேதங் கற்றுணர்ந்த பரத்துவாச மாமுனிவர், இந்த இன்பத்தை இல்லை என்னாது ஈயும் வள்ளற்றன்மை கொண்ட வனிதையரின் வசீகரக் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர்?

''என்ன புதிரப்பா கிளப்புகிறாய்? அரை நொடிக்குள் எனது ஆனந்தத்தை தகர்த்துவிட்டாயே?

போகம் வழங்கும் பூவையர்க்கு, யோகம் செய்யும் முனிவரா ஏஜண்டு? இது எம்மால் நம்பமுடியவில்லையே காமக்குரோதிகளை அடக்கும் ரிஷிசிரேஷ்டர் காமக்கூத்து கழகத்தின் நிர்வாகியா? ஓமத்தீயை மூட்டி சாமவேதத்தைப் பாடிடும் சற்குணர் காமத் தீயை மூட்டி சரச கீதம் பாடிடும் மடந்தையர் மன்றத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீர்கள். தயவு செய்து நம்புங்கள் தோழர்களே! அரிய அந்தக் குணவதிகளின் கூட்டத்திற்கு, பரத்துவாச முனிவரே மானேஜிங் ஏஜண்டாக இருந்தார்! அவர் அழைத்தார்! அவர்கள் சதங்கை கொஞ்ச ஓடி வந்தனர், அவர் பணித்தார்.

முனிவரின் விருந்தினருக்கு அந்தச் சுந்தரிகள் மகிழ் ஊட்டினர். பர்ணசாலைகளிலே அல்ல! சாதாரண மாளிகை களிலேயுமல்ல! சந்திர மண்டலம் போன்ற தமது மாளிகை களிலே! சந்திர மண்டலம் வெறும் சுந்தரம் மிகுந்ததாக மட்டுமா இருக்கும்! சந்திரன் என்ன சாமான்யப் பேர்வழியா? குரு பத்தினியைக் கூடிய குணாளன்! அவனுடைய மண்டலம் போன்ற அழகும் காமமொழுகும் நெகிழும் இடம். அந்தச் சுந்தரிகளின் மந்திர மாளிகைகள்! இன்னும் ஒன்றுகேண்மின்! ''நீ மந்திரியா, அப்படியானால் மஞ்சத்தில் வா! நீ யார்? மந்திரிகளின் தேரோட்டியா? சரி வெளியே போய்ப்படு! நீ யார்? சேனாதிபதியா? மெத்த சந்தோஷம்; போர்க் கோலத் தைக் கலைத்துவிட்டுச் சயனக்கிரகம் வாரும்! நீ யார்? சேனாதி பதியின் சேவகனா? நீ போய் தெருத்திண்ணையிலே படுத் துறங்கு?'' என்று அந்த மாதர் பேதம்பாராட்டி, தக்கோருக் குத்தவை காட்டி மற்றையோரை இல்லை என்று கூறி வாட்டி னர் என்று கருதுகிறீர்களா? அப்படிச் செய்யவில்லை! பேத நிலை கண்டு காதலை நிறுத்தும் கயவரல்ல. அந்தக் கருங் குழலிகள்! எல்லோரும் இன்புற்று இருப்பதேயல்லாமல், வேறொன்றும் அறியாப் பராபரங்கள், அப்பாவைகள். சர்வம் ஜெகன்னாதம், எவரையும் விடவில்லை- சகலரும் சரி என்று சம்மதித்தனர்.

இனிப் பொறுக்கமாட்டோம் பரதா! எங்கே இருக்கிறது இந்த விபச்சார விடுதி? இதற்கும் பரத்துவாசருக்கும் என்ன சம்பந்தம்? நீ கூறுகிறபடி எப்போதாவது நடந்ததா? அந்த அதிர்ஷ்டசாலிகள் யார்? அந்த சம்பவம் நடந்தது, உனக்கு எப்படித் தெரியும்?'' என்று அடுக்கடுக்காகக் கேட்க வேண் டாம் தோழர்களே; கூறி விடுகிறேன்

இந்த ''விடுதி'' இருக்குமிடம் சுவர்க்கலோகம், இதனை அனுபவித்தவர் அயோத்தியின் மதுகை மைந்தர்! இதை நடத்தி வைத்தவர், பரத்துவாச முனிவர்! இதை நான் தெரிந்துகொண்டதும், கம்பனின் கதையினால்! கல்கத்தாவிலே சில வீதிகளில் விபசாரிகள் தங்க, வீட்டு வசதிகளை அதிகாரி கள் ஏற்பாடு செய்து தந்து, பட்டாளத்துக்காரர் விபசார வசதி பெற வழி செய்து தந்தனர் என்று முன்பு ஓர் புகார் வெளி வந்தது. பத்திரிக்கைகளெல்லாம் சீறின; பாதிரிகள் சிலர் கூடப் பதைத்தனர். சர்க்கார் மறுத்தனர்; பிறகே சந்தடி அடங்கிற்று

போகத்தைப் [illegible] பொது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடைந்த குணவான்களெவரும், பரத்துவாசர் யாரும் கேட்காமுன்பு, இந்த விபசார விடுதியை அமைத்துத்தந்தார் என்பதற்காக அவரை கண்டிக்கமாட்டார்கள்! நான் ஓர் கட்டுக்கதையுங் கூறவில்லை! கடவுள் திரு அவதாரக் கதையாம் இராமாயணத்தைக் கூறுகிறேன். கம்பன் எழுதியது சாதாரண பேர்வழியின் சாரமற்ற கதையில்லை? சாட்சாத் கம்பராமாயணத்திலே இருக்கிறது இந்த ''சத்விஷயம்''.

பரதன், பிரதானியர், படையினர் ஆகியோர் இராமனை காட்டிலிருந்து, நாட்டுக்கு அழைத்துவரச் சென்றபோது .. வழியிலே பரத்துவாச முனிவரின் ஆசிரமத்தைக் கண்டனர் முனிவரைத் தொழுதனர். குசலம் விசாரித்த பிறகு, பரதனுக்கும் அவனுடன் வந்தவர்க்கும் விருந்தளிக்க ரிஷி எண்ணினார். காட்டிலே, பர்ணசாலையிலே, விருந்தளிக்க வேண்டுமானல், மானிறைச்சியும், மதுவும், பசுங்கன்றின் கறியும் பழமும்தானே கிடைக்கும்.

எனவே, பரத்துவாசர் ஓமத் தீயை மூட்டினார், ஆகுதி செய்தார்; ''சொர்க்கமே! வா இங்கே!'' என்று கட்டளையிட்டார். சுவர்க்கமே அந்தக் காட்டுக்கு வந்து சேர்ந்தது! நான் சொல்வதை நம்ப மறுக்கும் நண்பர்கள் கம்ப இராமாயணத்தைக் கையிலெடுத்து, அயோத்திய காண்டம் திருவடிசூட்டுப் படலம் 6, 7வது பாடல்களைப் பார்க்கக் கோருகிறேன் தீயினுவுதி செய்கையிளிக்கினன், சிவந்த தன் கைகளால் ஓமத்தீயில் சில ஆகுதிகளைப் பெய்திட்டான் என்று 6-வது பாடலிலும், சொர்க்கம் பறந்து வந்து நின்றது, என்று 7-வது பாடலிலும் இருக்கக் காண்பர்.

அப்படி வந்த அந்த சுவர்க்க லோகத்திலே, விருந்துக்குக் குறைவா? ஆனந்தமாக அறுசுவை உண்டி கிடைத்தது. அத்துடன் நிறுத்திவிட்டிருக்கலாம் கவி! ஆனல் கம்பரா நிறுத்துவார்? இழவு வீட்டு வருணனையிலும் மாதரின் எழிலைத் தீட்டும், காமப் பொழிலின் காவலரல்லவா கம்பர்! ஆகவே அவர் காட்டிலே வந்து குதித்த அந்த சுவர்க்க லோகத்திலே பரதனுடன் வந்தோர் என்னென்ன சுகமனுபவித்தனர் என்பதை வர்ணிக்கிருர், சுவர்க்கலோகத்துச் சுந்தரிகள், பரதனுடன் வந்தோர்க்குச் சோபச உபசாரம் செய்தனர் என்று சொல்லுகிருர். அதுவும போதாது என்று, அந்த மங்கையர் ஆடவரை பஞ்சணையிலே, படுக்கையிலே படுக்கச் செய்து, தாமும் அவர் பக்கத்திலே படுத்து உறங்கினர் என்று கூறுகிருர். படியுங்கள் அப்பாடலை.

அஞ்சடுத் தவமணி யலத்தகப்
பஞ்சடுத்த பரிபுரம் பல்லவ
தஞ்சடுத்த நயனியர் நவ்விபிற்
றுஞ்சவத்தனே மைத்தருத் துஞ்சினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# S.M.C.R.
# மாணவர் சுற்றுலா

1. ST. VRAIN இயற்கை மிருகக்காட்சி, ROUEN மாதா கோவில் மற்றும் DEAUVILLE கடற்கரை.

இது CHARONNE-ல் இயங்கும் பாரீஸ் தமிழர் கல்வி நிலைய மாணவ மாணவியர், நிர்வாகிகளுக்கு மட்டும்.

எனவே பழைய மாணவ மாணவியர் நிர்வாகத்திடம் தொடர்பு கொள்ளவும்.

நாள் : 19 ஜூலை ஞாயிறு காலை 8 மணிக்கு CHARONNE கல்வி நிலையத்திலிருந்து புறப்பட்டு இரவு 8 மணிக்கு திரும்பும்.

2. நிச்சயமாக ST. VRAIN மற்றும் புகழ் பெற்ற ஒரு கோட்டை அல்லது கடற்கரை.

இது ADAP மாணவ மாணவியருக்கு. விரும்பும் மாணவர் STALINGRAD MADAME THOMSY அவர்களை அணுகவும். அல்லது திரு. ஜெயநாதன் [சந்திரன்] 47.40.08.87, திரு வான்ஃபீ 47.06.72.00

காலை 8 மணிக்கு ADAP-லிருந்து கிளம்பி இரவு 8 மணிக்கு திரும்பும்.

நாள், கட்டணம், இடங்கள் முடிவு செய்யப்படவில்லை. தொடர்பு கொள்க.

தனி பஸ் ஏற்பாடு செய்ய விரும்புகிறவர்கள் 47.06.72.00 [21H00க்குப் பிறகு. சனி ஞாயிறு 12H00 க்குள் போன் செய்க.

வேலையில்லாத் திண்டாட்ட
அனல் தகிக்க
எதிர்காலப் பூஞ்சோலை
தென்படாமல்
வறுமைப் பாலைவனத்திற்கு
கல்லூரி [illegible]ரிலிருந்து
வெளியே அனுப்பும்
வாசலே
ரிசல்ட்.

கி. பி. 1880 ல் முதன் முதலாக ஐரிஷ் நிலச்சுவான்தார் ஒருவருடைய காரியஸ்தரான, கேப்டன் சார்லஸ் கன்னிங்கம் பாய்காட் என்பவருக்கெதிராக, இந்தப் பகிஷ்கார முறை வழங்கப்பட்டதிலிருந்து இதற்குப் "பாய்காட்" (Boycott) அதாவது பகிஷ்காரம் என வழங்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# S.N.C.R. சுற்றுலா

அன்புடையீர் !

எமது வந்தனங்கள் !

கீழ்க்கண்ட தேதிகளில் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

1. **அரோமான்ஸ் கடற்கரை. CAEN நகரம்** மற்றும் 25.000 அமெரிக்க வீரர்களின் கல்லறை.

நாள் : 25 ஜூலை சனி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 7 மணிவரை. ஒரு பகல் மட்டும்.

கட்டணம் : பஸ் மற்றும் பானங்களுக்கு மட்டும் **100** பிராங்

2. **MARSEILLE. TOULON, CANNE, NICE** நகரங்கள் பிரெஞ்சு நாட்டின் சொர்க்கம் என அழைக்கப்படும் அழகிய பிரதேசம். சுமார் 250.K.M கடற்கரையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நாள்: 31 ஜீலை வெள்ளி மாலை 9 மணிக்கு புறப்பட்டு 3 ஆகஸ்டு காலை 6 மணிக்கு பாரிசை வந்தடைதல். மொத்தம் 3 இரவு 2 பகல் ஆக 2½ நாள்.

3. **LOURDE** பிரெஞ்சு நாட்டின் புகழ் பெற்ற மாதா கோவில் உள்ள நகரம் மற்றும் **BORDEAUX** நகரம்.

நாள்: 14 ஆகஸ்டு வெள்ளி மாலை 9 மணிக்கு புறப்பட்டு 17 திங்கள் காலை 6 மணிக்கு பாரிசை அடைதல்.

கட்டணம்: 2-ம், 3-ம் சுற்றுலா ஒவ்வொன். தங்கும் பஸ், படுக்கை, போர்வை, இருவேளை இரு நாட்கள் உணவு, பானம் உட்பட **600** பிராங் மட்டும்

[சுருங்கக் கூறின் சில்லறை செலவுக்குப் பணம், மாற்று உடை மட்டும் எடுத்து வந்தால் போதுமானது.]

www.tamilarangam.net

## விளக்கம் & விதிமுறைகள்

1. வேலை செய்பவர்களின் வசதிக்காகவே வெள்ளி மாலை புறப்பட்டு திங்கள் காலை 6 மணிக்கு திரும்பும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
2. கிளம்பும் இடம் GARE DU NORD தமிழர் கடை பகுதியிலிருந்து [ RUE DE FAUBORG ST. DENIS ] மேலே குறிப்பிட்ட நேரத்தில் புறப்படும்.
3. தூர சுற்றுலாக்களுக்கு முடிந்த வரையில் சிறு குழந்தைகளை தவிர்ப்பது நலம்.
4. 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் இல்லை. 3 to 12 க்கு 1/2 கட்டணம்.
5. நண்பன் அமைப்பாளர்களிடம் பெயர்களை பதிவு செய்யலாம் அல்லது

திரு . ஜெயநாதன் [சந்திரன்] 47.40.08.87
திரு . இமானுவேல் 42.38.34.84
திரு . நீரேர் சாலி 48.21.15.19
திரு சசி 47.00.48.45
திரு எம்.ஏ.ராஜா 60.20.59.23

ஆகியோரிடம் பதிவு செய்யலாம்.

இங்ஙனம்

S.N.C.R பஸ் உரிமையாளர், சுற்றுலா அமைப்பாளர்

# நுழைவுக் கட்டணம்

பெண் பார்க்க
என்று
என்னைப் பார்க்க வரும்
மாப்பிள்ளைகளிடம்
நுழைவுக் கட்டணம்
வசூலித்திருந்தால்கூட
இந்நேரம்
என் திருமணத்திற்கு
அவர்கள் கேட்கும்
வரதட்சணைப் பணம்
சேர்ந்திருக்கும்.....

நா. மலையப்பன், முதலாண்டு,
பி. எஸ்ஸி வேதியல்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி
தேவகோட்டை.
இராமநாதபுர மாவட்டம்.

www.tamilarangam.net

# கோவா மாநிலம் உதயம்

பனாஜி, மே 30—
...ரியன் பிரதேசமாக இருந்த ...வா சனிக்கிழமையிலி ...து, நாட்டின் 25வது மாநி ...ாக மாறியது. முதலமைச் ... பிரதாப் சிங் ரானே தலை ...யில் 6 பேர் அடங்கிய ...மைச்சரவை ராஜ்பவனில் ...யன்று பதவியேற்றது.
மாநில கவர்னர் டாக்டர் ...பால்சிங், அமைச்சர்களுக் ... பதவிப் பிரமாணமும், ரக ...க் காப்பு பிரமாணமும் ...ய்து வைத்தார்.
முன்னதாக பம்பாய் உயர் மன்ற தலைமை நீதிபதி ...பாறுப்பு) எஸ்.கே.தேசாய் ...ர்னருக்கு பதவிப் பிரமா...ம் செய்து வைத்தார்.
அமைச்சரவை பதவி...ற்பு நிகழ்ச்சி எளிமையாக ...டபெற்றது. முன்னாள் பிரத... சரண்சிங் மறைவை ...ாட்டி துக்கம் அனுஷ்டிக்...படுவதால், மாநிலத்தின் ...வக்க விழா புதன்கிழமைக்கு ...திவைக்கப்பட்டது.
பதவியேற்பு நிகழ்ச்சிக்குப் ...கு நிருபர்களிடம் பேசிய ...லமைச்சர் பிரதாப் சிங் ...னே, மாநிலத்தின் வருவா... உயர்த்தி பொருளாதார ...ர்ச்சி மற்றும் அபிவிருத்தி... ஏற்படுத்துவதே தனது ...சின் முதல் பணியாகு...ன்று கூறினார்.

கோவா மாநிலத்தை சுய சார்புடையதாக ஆக்குவதற்கு புதிய வரிகளை மாநில அரசு விதிக்கும் என்ற அச்சம் தேவையில்லை என்றார். மாநிலத்தின் முறையான பொருளாதாரத் தேவைகளுக்கு மத்திய அரசு தொடர்ந்து உதவுமென்று முதல்வர் நம்பிக்கை தெரிவித்தார்.

முதல்வர் ராணேயும், வருவாய்த் துறை அமைச்சர் ஷேக் ஹாசன்ஹருனும் ஹிந்தி மொழியில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். மற்ற அமைச்சர்களான பிரான்சிஸ்கோ சர்தினு மற்றும் டாக்டர் லூயிஸ் புரோட்டோ பரோ பொஜா ஆகியோர் கொங்கணி மொழியிலும், ஹரிஷ் ஜாண்டி மராத்தி மொழியிலும், வைகுந்த் தேசாய் ஆங்கிலத்திலும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

அமைச்சரவை துவக்க நிகழ்ச்சியில் சபாநாயகர் தயானந்த் நர்வேகர், எதிர்க்கட்சி எம்.ஜி.பி தலைவர் ரமாகாந்த் கலாப் மற்றும் எம்.எல்.ஏக்களும் உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

கோவாவிலிருந்து துண்டிக்கப்பட்ட டாமன், டையூ பிரதேசங்கள் யூனியன் பிரதேசமாக, அதன் நிர்வாகத்தின் கீழ் செயல்படும்.

## ...ந்தியா-பின்லாந்து

...விஞ்ஞானம், ...ல்வி, மக்கள் தொடர்புச் சாத...ம், கலாச்சாரம், சுகாதாரம், ...மூக நலம், விளையாட்டு ...கிய துறைகளில் ஒத்து...ழைக்க பின்லாந்தும் இந்தியா...ம் ஒப்பந்தம் ஒன்றில் கையெ...

## எல்.டி.டி.ஈ.

சென்னை, ஜூன் 3—
யாழ்ப்பாண தொலை தொடர்பு நிலையத்திலுள்ள ராணுவ முகாம் ஒன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் (எல்.டி.டி.ஈ.) கொரில்லா படையினர் புதன்கிழமை அதிகாலை நடத்திய அதிரடித் தாக்குதலில் அந்த முகாம் முற்றிலும் தகர்க்கப்பட்டது; அதிலிருந்த சுமார் நூறு ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். மூன்று ராணுவத்தினரை விடுதலைப்புலிகள் உயிருடன் பிடித்துள்ளனர் என்று எல்.டி.டி.ஈ. அரசியல் ஆலோசகர் ஏ.எஸ். பாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டைக்கு அருகிலுள்ள தொடர்பு நிலையத்தில் உள்ள அந்த ராணுவ முகாமின் ஒரு பகுதி கடந்த மார்ச் 23ம் தேதி விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டு அதிலிருந்த எட்டு சிப்பாய்கள் பிடிபட்டனர் என்பது செய்தி குறிப்பிடத் தக்கது. இந்த ராணுவ முகாம் கடந்த ஜனவரி மாதம் அமைக்கப்பட்டது என்றும் புதன்கிழமையன்று (ஜூன் 3) அது முற்றிலும் தகர்க்கப்பட்டது என்றும் பாலசிங்கம் கூறினார்.

### மூன்று போராளிகள் மரணம்

விடுதலைப் புலிகள் அந்த முகாமின் பாதுகாப்பு அரணை உடைத்துக் கொண்டு சிங்கள ராணுவத்தினரைச் சுட்டு வீழ்த்தினர் என்றும், விடுதலைப் புலிகள் தரப்பில் நிக்சன், அசோக், ரதன் என்ற மூன்று போராளிகள் உயிர் துறந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அவனூறு ஒரு நல்ல பெண்ணின் வீட்டு வாசலில் சாகிறது.
—டென்மார்க்

காலநேரம் பொன்னான நேரம்,

தமிழ்த் தேசிய ஆவண சுவடிகள்

## "தூங்காதே தமிழ் மகனே!"

செ. சுப்பிரமணியன்
(பி.எஸ்ஸி.)

தமிழ் மகனே! உன்
தாயின் மொழி காக்க
என்றும் தயங்காதே;
வீரமகள் பெற்றெடுத்த
கற்பை இழந்து
கண்ணீர் விடுகின்றனர்
உணர்வை இழந்து
உயிரைக் கொடுக்கின்றனர்
கற்புக்கு விலை பேசும்
கயவனின் பேச்சுக்குக்
காலத்தை வீணாக்கி
பலத்தை இழக்காதே
இரத்த வெறிபிடித்த
சிங்களப் பேய்களை, நீ
சிறைப்படுத்த முனைந்திடுவாய்
தம்மை யெல்லாம்
உறங்க வைத்து
சங்கு ஊதக் காத்திருக்கும்
தமிழரசு; அது
என்றுமே; ஊதாத சங்கு
சங்கை எதிர்ப்பார்த்து; உன்
சந்ததியை இழக்காதே.
தமிழனின் உயிர்காக்கத்
தரணி எங்கும்
சூளுரைப்பாய்
தன்மானச் சபதமேற்று
தமிழனைக் காத்திடுவாய்!

www.tamilarangam.net



## அகதிகள் வருகை அதிகரிப்பு

# நடவடிக்கை எடுப்பதை யாரும் தடுக்க முடியாது

வாஷிங்டன். ஜூன் 3—
ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டுக்கு அகதிகள் வருகை அதிகரிக்குமானால், எதிர் நடவடிக்கை எடுக்க ஒரு நாட்டுக்கு உரிமை உண்டு. அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது என்ற கருத்து அமெரிக்க அரசியல் பார்வையாளர்களிடையே நிலவி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இலங்கை ராணுவத்தாக்குதலுக்கு ஆளாகிப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு பண்டங்கள், மருந்துகள் ஆகியவற்றை அனுப்ப இந்தியா எடுத்த முடிவு குறித்து அமெரிக்க அரசு தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

அதில் யாழ்ப்பாணம் மக்களுக்கு அதிக இழப்பு ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்படுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

தமிழர்களுக்கு உதவுவது குறித்து இந்தியாவும் இலங்கையும் ஒரு ஒப்பந்தத்துக்கு வரவேண்டும். இருநாடுகளும் கூடிப்பேச வேண்டும் என்று அமெரிக்கா தனது ஆலோசனையைத் தெரிவித்தது.

"ஒரு நாட்டில் இருந்[து] அண்டை நாட்டுக்[கு] அகதிகள் செல்வது அதிகரி[த்]தால் அதற்கு எதிராக நட[வ]டிக்கை எடுக்கலாம். அதை[ச்]

சம்பந்தப்பட்ட நாடுகள் எதிர்க்க முடியாது. அப்படியே எதிர்த்தாலும் சரி, நாம் வழங்கும் உதவி ஆபத்து விளைவிக்கா[த] உயிர்காக்கும் உதவி என்றால் அதையாரும் ஆட்சேபிக்க முடியாது என்று ஏற்கனவே ஆப்கன் விவகாரத்தில் அமெரிக்கா கூறிய கருத்தை அவர்கள் குறிப்பிட்டனர்.

# தமிழர்களை வைத்து பிணையாக தாக்குதல்

யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் வடமராச்சிப் பகுதியில் முன்னேறி வரும் இலங்கை ராணுவம் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்து வருகிறது.

தமிழ்ப் போராளிகளின் எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத ராணுவம் நூற்றுக்கணக்கில் தமிழர்களை வளைத்துப் பிடித்து பிணையாட்களாக வைத்துக் கொண்டு போராளிகளை நோக்கி முன்னேறுகிறது.

இந்த அப்பாவித் தமிழர்களை முன்னால் நிறுத்தி அவர்களுக்குப் பின்னால் இருந்து தாக்குகிறது இலங்கை ராணுவம். மனிதக் கேடயமாகப் பயன்படுத்தப்படும் அப்பாவித் தமிழர்களைச் சுடக் கூடாது என்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை நிறுத்தி பின் வாங்க நேரிட்டுள்ளது. அப்படி போராளிகள் ராணுவத்தைச் சுட்டால் ராணுவம் பிணையாக உள்ள தமிழர்களைக் கொல்கிறது.

எங்கெல்லாம் தமிழ்ப் போராளிகள் தாக்குதல் தீவிரமாக இருக்கிறதோ அங்கெல்லாம் அப்பாவித் தமிழர்களை நூற்றுக் கணக்கில் கொன்று குவித்து தனது இயலாமையை மூடி மறைக்கிறது இலங்கை ராணுவம். தமிழ் இளைஞர்களைக் கண்டவுடன் சுட்டுக்

## தீக்குண்டுகள்

அரியாலி, நாவட்குழி, மற்றும் கோப்பாயில் தமிழர்களின் வீடுகள் மீது எரிகுண்டுகள் வீசப்பட்டன. தமிழர்களின் வீடுகள் தரைமட்டமாக ஆகியுள்ளன. பல வீடுகள் எரிகின்றன. இவற்றின் உள்ளே சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை; ஏராளமா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இலங்கைக்கு உணவு சப்ளை

# இந்திய அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆதரவு

புதுடில்லி, ஜூன் 3— மருந்து, உணவு, எரிபொருள் இன்றி அவதிப்படும் நிலையில் தினசரி படுகொலைக்கு ஆளாகும் இலங்கைத் தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உணவு, மருந்துப்பொருள்களை அனுப்ப மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய மாறுதல்கள், இடம் பெறும் நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய அரசு மேற்கொண்டுள்ள அணுகுமுறையை எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எடுத்துரைப்பதற்காக கூட்டம் ஒன்றை டில்லியில் மத்திய அரசு புதன்கிழமையன்று கூட்டியது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் தலைமையில் அத்தியாவசிய பொருட்களையும் மருந்துகளையும் எடுத்துக் கொண்டு இந்தியக்குழுவினர் இலங்கை செல்வது குறித்து, எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பி.வி. நரசிம்மராவ் எடுத்துரைத்தார்.

அந்தக் குழுவில் 102 பத்திரிகையாளர்களும், டாக்டர்களும் உடன் செல்வதாக நரசிம்மராவ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண கடற்கரையில் இந்தியாவிலிருந்து அனுப்பப்படும் பொருள்களை ப... சோதிக்க வரும்படி இலங்... அரசுக்கு அழைப்பு விடுக்க... பட்டிருப்பதாகவும் அவர் ெ... ரிவித்தார்.

இந்தியக் குழுவின் பயண... குறித்து பல விவரங்க... அமைச்சர்கள் நரசிம்மராவி... மும், வெளியுறவுத் துணை ம... திரி கே. நட்வர் சிங்கிடமு... எதிர்க்கட்சித் தலைவர்கள் கே... டறிந்ததாக அரசுப் பிரதிநி... ஒருவர் நிருபர்களிடம் பின்ன... கூறினார்.

இந்தக் கூட்டத்தில் எதிர்... கட்சித் தலைவர்கள் ஹர்கிர்ஷ... சிங் சுர்ஜித், சபிப் உத்தீ... சவுத்திரி (இ. கம்யூ.), ஏ.ட... வாஜபேயி (பாரதீய ஜனத... கட்சி) மதுதண்டவதே (ஜ... தா) கே.பி. உன்னிகிருஷ்ண... (காங். எஸ்.), மாதவ ரெட்டி... பி. உபேந்திரா (தெலுங்கு தே... சம்) ஆகியோர் கலந்து... கொண்டனர்.

பாராளுமன்ற விவகா... அமைச்சர் எச்.கே.எல். பகத்... பாராளுமன்ற விவகார துணை... அமைச்சர்கள் ஷிலா தீட்சி... எம்.எம். ஜேக்கப் ஆகியோரு... கூட்டத்தில் கலந்து கொண்... னர்.

## தீட்சித் தகவல்

வெளிநாட்டு தூதரக அதிகாரிகளை யாழ்ப்பாண தீபகற்ப பகுதிக்கு இலங்கை அரசு விமானம் மூலம் அழைத்துச் சென்று காண்பித்தது. இந்த பயணத்தில் பங்கேற்குமாறு இந்தியப் பிரதிநிதிக்கு அழைப்பு தரப்படவில்லை என்று இந்திய ஹைகமிஷனர் கூறினார்.

இந்திய தூதரக ராணுவ ஆலோசகர் இலங்கை அரசு கொடுத்த அழைப்பை நிராகரித்தது விட்டார் என்று இலங்கை அரசு வெளிவிவகார மந்திரி ஹமீது ஒரு அறிக்கையில் கூறியுள்ளார். இதையடுத்தே தீட்சித் மேற்சொன்னவாறு விளக்கமளித்தார்.

இந்த பயணக்குழுவில் பங்கேற்குமாறு இந்திய தூதரக ராணுவ ஆலோசகருக்கு வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமோ இலங்கை அரசு அழைப்பு ஏதும் தரவில்லை என்று தீட்சித் சொன்னார்.

அந்த விமானப் பயணத்தில் பங்கேற்க விருப்பமா என்று வெள்ளியன்று மாலை இந்திய அதிகாரியிடமிருந்து வரும் அழைப்பு எதுவும் வரவில்லை என்பதால் அதில் பங்கேற்க வேண்டாம் என்று அந்த அதிகாரி தீர்மானித்தார். இந்த குழுவுக்கு யாழ்ப்பா... தீபகற்ப பகுதி காட்டப்படு... என்பதால் உண்மை நிலை... காண முடியாது என்று இ... திய அதிகாரி கருதியதாக ...

தேசியத் தமிழ் ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 3 சிறு போராளி கோஷ்டிகள் ஒன்று சேரமுடிவு

மண்டபம், ஜுன் 7—
தமிழ் ஈழம் மக்கள் விடு தலை ஸ்தாபனம் (பிளாட்) ஈழம் மக்கள் புரட்சி விடுதலை முன்னணி (ஈ பி ஆர் எல் எப்) தமிழ் ஈழம் விடுதலை ஸ்தா பனம் டெலோ ஆகியமூன்றை யும் யாழ்ப்பாணம் பகுதியில் தமிழ் ஈழம் விடுதலைபுலிகள் அமைப்பு (எல்.டி.டி.ஈ.) அநேகமாக அகற்றி விட்டது போராட்டத்தைத் தொடரும் பொருட்டு கூட்டணி யாகச் சேர இந்த மூன்று சிறு போராளி கோஷ்டிகள் முடிவு செய்திருக்கின்றன. யாழ்ப்பாணத்திற்கு வெளியே ஒரே பெயரின் கீழ் ஒன்று சேர மூன்று கோஷ்டி களின் தலைவர் களும் திட்டமிட்டு வருவதாக பொது செயலாளர் உமா மகேசுவரன் நிருபர் களிடம் தெரிவித்தார். வவு னியா, முல்லைத் தீவு, மன் னார்; ஆகியவற்றின் காடு க ள் ஒன்று பட்டு போராட்டத்தைத் தொடரப்போவதாக அவர் குறிப்பிட்டார்.

### இலங்கை விமான குண்டுவீச்சு,

# புராதன கோவில் சேதம்

புதுடெல்லி, ஜுன் 9—
யாழ்ப்பாணம் பகுதியில் தமிழர்களை பூண்டோடு அழிக்க முனைந்துள்ள இலங்கை விமானப்படை கோவில்களையும் விட்டு வைக்கவில்லை.

5 புராதன ஆலயங்கள் விமானங்களின் தாக்குதலுக்கு இலக்குகளாயின. யாழ்ப் பாணம் நகரிலும், சுற்றுப் புறங்களிலும் நிரா யுதபாணிகளாயிருந்த மக்களின் மீது குண்டுகளை வீசிய இலங்கை விமான படை விமானங்கள் ஆலயங் களை நாசப்படுத்திய காட்சி வீடியோ கேஸட்டில் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இந்த வீடியோ கேஸட் இந்திய அரசுக்குக் கிடைத்திருக்கின் றன. இதனை டெல்லியில் அதிகாரிகள் பார்த்தனர்.

கந்தசாமி கோவில், சிவன் கோயில், காமாட்சி கோவில், அம்மன் ஆலயம், ஐயனார் ஆலயம் ஆகிய 5 கோவில்களும் மே 27 காலை யிலிருந்து மறுதினம் வரை விமானங்களின் தாக்குதலுக்கு இலக்கா துள்ளன. இந்த ஆலயங்களில் தஞ்சமடைந்த நூற்றுக்கணக் கான மக்களும் ஒரு மணி நேர குண்டு மழைக்கு பலியாயினர்.

மருத்துவமனையில் காணப்பட்ட உருக்குலைந்த சடலங்கள் இலங்கை ராணு வத்தின் விமானப் படையின் மிருகத்தனமான தாக்குத லுக்கு சான்றாகும்.

## காலிபானைகளுடன் ஆர்ப்பாட்டம்

காஞ்சிபுரம், ஜுன் 9—
செங்கல்பட்டு மாவட்டம் திருபெரும்புதூர் அருகே உள்ள செங்காடு கிராமத்தில் மக்கள் காலிபானைகளுடன் குடிநீருக்காகக் போராட்டம் நடத்தினர்.

காலை 9 மணியிலிருந்து 10-30 மணி வரை இந்தப் போராட்டம் நடந்தது. ஆண் களும் பெண்களுமாக சுமார் 100பேர் இந்தப் போராட்டத் தில் கலந்துகொண்டனர். குடி நீர் வேண்டி ரோட்டின் ...

(பீரங்கிப் பேர ஊழல்)

### ஸ்வீடன் ரேடியோ ஆதாரம் தர தயார்

புதுடில்லி,
பீரங்கி பேர ஊழலில் இந் திய அரசும் தாங்களும் தம் பக்கூடிய பொதுவான ஒரு வரிடம் ஆதாரங்களை வெளி யிட தயாராக இருப்பதாக ஸ்வீடன் ரேடியோ கூறி யுள்ளது.

போஃபார்ஸ் கம்பெனி யிடமிருந்து பீரங்கிகள் வாங்கியதில் சில இந்தியா களுக்கு லஞ்சம் வழங்கப் பட்டதாகவும் அவர்களின் சுவிஸ் வங்கி கணக்கில் லஞ்சப் பணம் போடப்பட் டதாகவும் ஸ்வீடன் ரேடி யோ முதலில் அறிவித்தது. இதற்கான ஆதாரம் இருப்ப தாகவும் அது தெரிவித்தது. இந்த ஆதாரத்தை வெளியி டத் தயார் என்று 'எக்ஸ்பி ரஸ்" என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஸ்வீ டன் ரேடியோவின் பிரதி நிதி கெர்ஸ்டியன் பிரண் பர்க் கூறினார்.

இந்தியாவிலிருந்து இந்த ஆண்டு 23 ஆயிரம் பேர் ஹஜ் செய்ய அரசு அனுமதித்திருப்பது அறிந்ததே. இந்த ஹஜ் சீச னில் சுமார் 70,000 பாகிஸ் தானியர்கள் ஹஜ் பயணம் ...

www.tamilarangam.net



வேடிக்கை பார்க்க மாட்டோம்

# கடும் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன் 3— இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள் படும் அவதியை வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோம் என்று இலங்கைக்கு இந்தியா எச்சரிக்கை விடுத்திருப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் புதன்கிழமை நள்ளிரவுக்குப் பின் தெரிவித்தார்.

ராமேசுவரத்திலிருந்து உணவு மற்றும் மருந்துப் பொருட்களை ஏற்றிச்சென்ற படகுகளை இலங்கை செல்ல அனுமதிக்க முடியாது என்று இலங்கை ராணுவம் பிடிவாதமாக மறுத்ததைத் தொடர்ந்து அவை ராமேசுவரத்திற்குத் திரும்பி வந்தன. அதன் பிறகு டெல்லியில் இந்திய வெளியுறவுத் துறை பிரதிநிதி இந்தியாவின் எச்சரிக்கை பற்றிய செய்தியை வெளியிட்டார்.

இலங்கை கடல் பகுதிக்குள் நுழைய முயன்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை ராணுவம் மறைமுகமாக மிரட்டியது. இந்த நிலையில் இந்தியப் படகுகள் ராமேசுவரம் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை என்று அந்த இந்திய அதிகாரி கூறினார்.

உணவு, மருநதுப் பொருளகளுடன் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட இந்தியப் படகுகளை, பீரங்கிப் பொருத்தப்பட்ட இலங்கை கடற்படை படகுகள் வழி மறித்து தடுத்தன. இந்த செயலை இந்தியா வன்மையாகக் கண்டித்துள்ளது என்று இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி குறிப்பிட்டார்.

"ஐந்து மாத காலம் யாழ்ப்பாண மக்களை பொருளாதார முற்றுகைக்குள் சிக்க வைத்துவிட்டு அப்பாவிகளான அவர்களை கடந்த சில வாரங்களாக இலங்கை ராணுவம் கொன்று குவித்து வருகிறது. இந்த கொடுஞ்செயல்களின் தொடர்ச்சியாக இந்தியா அனுப்பிய நிவாரணப் பொருள்களை இலங்கை அரசு தடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்களுக்கு அடிப்படை மனித உரிமைகளைக்கூட மறுப்பதில் இலங்கை அரசு உறுதியாக உள்ளது என்பதை இந்த நடவடிக்கை தெளிவுபடுத்துகிறது'' என்றும் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி கூறினார்.

இத்துடன் உணவுப் பொருள்களையும், மருந்துப் பொருள்களையும் யாழ்ப்பாண மக்களுக்கு அனுப்ப மேற்கொண்ட 'கருணை முயற்சி'க்கு இந்தியா முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் பெருந்துயர்களுக்கு ஆளாக்கப்படுவது குறித்து இந்திய மக்கள் ஆழ்ந்த வருத்தமும், உணர்ச்சிக் கொந்தளிப்பும் அடைந்துள்ளனர் என்பதையும் இந்திய அதிகாரி சுட்டிக் காட்டினர்.

## ராஜீவ் பேட்டி

பஞ்ஜி, ஜூன் 3— இலங்கை யாழ்ப்பாணத்தில் சொல்லொணு துயருரும் மக்களுக்கு உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் பிற பொருட்களை இந்தியா அனுப்பி வைப்பதில் தவறு ஏதும் இல்லை. நியாயம்தான் என்று இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் சூழ்நிலையை பஞ்சாபுடன் ஒரு காலும் ஒப்பிட்டுப் பேச முடியாது என்று ராஜீவ் காநதி சொன்னர்.

பஞ்சாபில் மக்களை ராணுவத்தினர் குண்டு வீசித் தாக்கவில்லை. யாழ்ப்பாண மக்களை, இலங்கை ராணுவத்தினர் விமானத்திலிருந்து கொண்டு யந்திரத் துப்பாக்கிகளால் குறி வைத்து சுட்டுத் தள்ளுகின்றனர். அம்மாதிரி சம்பவம் பஞ்சாபில் நடக்கவில்லை என்று அவர் சுட்டிக் காட்டினர்.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது இலங்கை அரசின் நடவடிக்கைதான். யாழ்ப்பாணம் மீது இலங்கை அரசு போர்ப் பிரகடனமே செய்து தாக்குதல் நடத்துகிறது என்று ராஜீவ் காந்தி நிருபர்களிடம் பேசும்போது கூறினர்.

இலங்கைப் பிரச்சினையை பொறுத்த மட்டில் இந்தியாவின் அணுகுமுறை ஸ்திரமான தாகவும், நேரானதாகவும் உள்ளது. இந்தியாவின் நிலை பற்றி நட்பு நாடுகள் அனைத்துக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று ராஜீவ் காந்தி குறிப்பிட்டார்.

**சந்தேகம் நட்பின் நஞ்சு.**

—டென்மார்க்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முன்னாள் மன்னருக்கு மரண தண்டனை

## மனிதன் உடலை கறிசமைத்து சாப்பிட்டவர்

பங்குய். ஜூன். 13—
மனித உடலை கறி சமைத்து சாப்பிட்ட மத்திய ஆப்பிரிக்க முன்னாள் மன்னருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

### சர்வாதிகாரி

அந்த மன்னரின் பெயர் ஜீன் பெடேல் பொக்காசா. இவருக்கு இப்போது 66 வயது ஆகிறது. இவருடைய சர்வாதிகார ஆட்சியில் சிக்கி மத்திய ஆப்பிரிக்க மக்கள் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல.

1965–ம் ஆண்டில் இருந்து 1979–ம் ஆண்டு வரை சுமார் 14 ஆண்டுகள் பொக்காசாவின் கொடுங்கோல் ஆட்சி மத்திய ஆப்பிரிக்காவில் கொடி கட்டி பறந்தது.

### கொலைகாரன்

பொக்காசாவை போல ஒரு கொடூர மனிதன் உலகத்தில் இல்லை என்று கூறலாம். அந்த அளவுக்கு அவன் மக்களை கொடுமைப்படுத்தினான். கொலை பாதக செயலில் மட்டும் பொக்காசா இறங்கவில்லை. கன்னிப் பெண்களின் கற்பை சூறையாடுவது தான் இவரது பொழுது போக்கு.

இவரது காம களியாட்ட கொலை பாதக செயல்களுக்கு மத்திய அப்பிரிக்காவில் உள்ள இன்காரகா ஹெயிலபான்படுத்தி வந்தார். அவர் விரும்பப்பட்ட பெண்களை அடைத்து இருவார்.

### விசித்திர குணம்

சொல்வதில் குழந்தைகள் கூட விதி விலக்கு இல்லை. அத்துடன் இவருக்கு ஒரு விசித்திர குணம் உண்டு. மனிதனின் உடலை கறி சமைத்து சாப்பிடுவதில் இவருக்கு அலாதி விருப்பம்.

இப்படிப்பட்ட கொடூர பொக்காசாவின் ஆட்சி 1979–ம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப் பட்டது.

### தூக்கு தண்டனை

புதிய ஆட்சி வந்ததும் பொக்காசாவின் கொடூர அரக்கத்தனமான செயல்கள் விசாரிக்கப்பட்டது. அவன் செய்த அட்டகாசங்கள் வெட்ட வெளிச்சமானது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பொக்காசா பிடிபட்டார்.

இவர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரித்த மத்திய ஆப்பிரிக்க நாட்டில் உள்ள பங்குய் கிரிமினல் கோர்ட்டு நேற்று தீர்ப்பு கூறியது.

அவருக்கு, மரண தண்டனை விதிக்கப்பட்டது. துப்பாக்கியால் சுட்டு தண்டனை நிறைவேற்றப்படும்.

### அப்பீல் செய்ய வேண்டும்

இந்த தீர்ப்பை எதிர்த்து பொக்காசாவின் வக்கீல்கள் அப்பீல் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்தாலும் இத்தண்டனை

கொழும்பு. ஜூன் 4—
விமானங்கள் மூலம் யாழ்ப்பணம் நகருக்கு உணவுப் பொருட்களையும், மருந்துகளையும் போடுவது என்ற இந்திய அரசின் முடிவை இலங்கை கடுமையாக ஆட்சேபித்திருப்பதாக, இலங்கை ரேடியோ தெரிவித்தது.

இந்த நடவடிக்கையை அட்டூழியமான செயல் என்று இலங்கை வர்ணித்திருப்பதாகவும், இந்தச் செயலுக்கான விளைவுகளுக்கான பொறுப்பை இந்தியா ஏற்க வேண்டியிருக்கும் என்று கூறியிருப்பதாகவும் ரேடியோ தெரிவித்தது.

இந்தியாவின் நடவடிக்கை இலங்கையின் ஆதிபத்திய உரிமையையும் ஒருமைப்பாட்டையும் அப்பட்டமாக மீறுவதாகும் என்று இலங்கை வெளிநாட்டிலாகா கூறியதாக இலங்கை ரேடியோ தெரிவித்தது. இந்தியாவிடம் இது சம்பந்தமாகக் கடுமையான ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கு இலங்கையிடம் ராணுவ வசதிகளோ, வேறு வசதிகளோ இல்லை என்று வெளிநாட்டிலாகா கூறியது.

இலங்கை சிறிய நாடு என்றபோதிலும் தன்னுடைய உள்நாட்டு விவகாரங்களில் மற்ற நாடுகள் தலையிடுவதை அது அனுமதிக்காது என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலி கூறியதாகவும் ரேடியோ தெரிவித்தது.

ஒத்தடம் அரை வைத்தியன்

—இந்தியா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திப்பட உலகத்தினரின்

## ஒழுக்கம்

இந்திப் படவுலகில் நடிகை-நடிகரிடையே நிலவும் காதல் நிலையானதாக இல்லை. காதலிக்கத் தொடங்கிய சிறிது நாள் வரை ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருப்பதுபோல் நடந்து கொள்கின்றனர். கொஞ்ச நாட்கள் கழித்ததும் ஆடைகளை மாற்றிக் கொள்வது போல் தங்கள் காதலர்களை மாற்றிக் கொள்கிறார்கள். குட்டிங் என்ற முறையில் தன் கள்ளக் காதலர்களுடன் ஸ்டுடியோக்களில் ஜாலியாகக் கழிக்கிறார்கள். ஆனால் இதைப்பற்றி இவர்கள் எக்காலத்தும் வெட்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஸாபனு ஆஸ்மியும், தீப்தி நாவலும் பம்பாய் உலகில் நுழைந்து, காலூன்றுவதற்காகப் போராடிக் கொண்டிருந்த பொழுது, துருவ் என்ற இளைஞரை இருவரும் தம் கைக்குள் போட்டுக் கொண்டு காலத்தைக் கழித்தனர். துருவ் மாடலின் மூலமாக நல்ல வருவாயினை ஈட்டிக் கொண்டிருந்தார். துருவ் செய்த உதவிக்கு தங்கள் உடலையே காணிக்கையாக ஆக்கியிருந்தார்கள் இந்த இரு கன்னியரும்.

காலங்கள் மாறியது. ஸாபனு ஆஸ்மிக்கும், தீப்தி நாவலுக்கும் ஓரளவு முன்னேற்றம் கிட்டியது. ஆனால் துருவ் போராட்டத்தில் வெற்றி பெற இயலவில்லை. பின்தங்கினார். முன்னேறுபவர்கள் பின்னிருப்பவர்களைப் பார்ப்பார்களா? ஸாபனு, பெஞ்சமின் கிளானி என்பவரையும்; தீப்தி, மார்க் ஜீபர் என்பவரையும் பிடித்தனர்.

இவர்களுடனும் நீண்ட நாள் உறவை வைத்துக்கொள்ளவில்லை. நல்ல பசுமையான இடங்களைத் தேடினார்கள். ஸாபனு ஆஸ்மி, சேகர் கபூரையும்; தீப்தி நாவல், பிரகாஷ் ஷாவையும் தங்களின் புதிய மேயும் நிலங்களாக மாற்றினார்கள்.

எங்கு, எப்பொழுது, யாரைப் பிடித்தால் காரியங்கள் நடக்கும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார்கள் ஸாபனுவும், தீப்தியும்.

ஸாபனு ஆஸ்மி, சேகர் கபூரை விட்டு கதாசிரியர் ஜாவித் அக்தரைப் புதிதாகப் பிடித்தார். தீப்தி, பிரகாஷ் ஷாவையே திருமணம் செய்து கொண்டார்.

ஸாபனு ஆஸ்மிக்கும், தன் கணவருக்கும் தொடர்பு இருந்ததாக அறிந்த ஜாவித்தின் மனைவி ஒரு விழாவில் ஸாபனுவை திட்டினார். பொறுக்கமாட்டாத ஆஸ்மி, பழி வாங்கும் எண்ணத்துடன் ஜாவித்தைத் திருமணம் செய்து கொண்டு ஜாவித்தை முழுவதுமாகத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார். இப்பொழுது ஜாவித்துடன்தான் இருக்கிறார். நாளை நடப்பதை யார் அறிவார்?

தீப்தி நாவல், தன் கணவர் பிரகாஷ் ஷாவுக்கும் துரோகம் செய்துவிட்டு அக்பர்கானுடன் அலைவதாகக் கூறப்படுகின்றது.

சமீபத்தில் வெகு வேகமாகத் திருமணம் செய்து கொண்ட அனிதாராஜூம் இந்த மாதிரி நடந்து கொண்டவர்தான். ஆரம்ப காலத்தில் பல படங்களில் வாய்ப்பைப் பெற தர்மேந்திராவை அணைத்துக் கொண்டார்—அரவணைத்துக் கொண்டார். தர்மேந்திராவின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இஷ்டம்!

மனம்போல் நடந்து கொண்டார். ஆனல் தர்மேந்திராவைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்ற நிலை ஏற்பட்டவுடன், அவசர அவசரமாகத் தன் புதிய காதலன் களில் ஹிங் கோரணியுடன் ஓடித் திருமணம் செய்து கொண்டார். அவசரத் திருமணத்திற்கு அனிதாராஜ் கர்ப்பமாக இருந்ததும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது. பர்வின் பாபி "பதினன்கு வயதுக்கு மேற்பட்ட எந்தப் பெண்ணும் இந்திப் படவுலகில் பத்தினியாக இருக்க முடியாது'' என்று அழகாகச் சொன்னர்.

நடிகை பத்மினி கோலாப்பூரி வாய்தூத் விமானக் கம்பெனியின் தலைவருடன் அமெரிக்காவுக்கு திருமணத்திற்கு முன்பே ஹனிமூன் சென்ருர். அங்கு கர்ப்பத்தைக் கலைத்துக் கொண்டதாகக் கூடக் கூறப்படுகிறது எல்லாம் இன்ப மயமாக முடிந்தவுடன், பத்மினி, பிரதீப் சர்மா என்பவரைக் காதலித்து, மீண்டும் கர்ப்பமடைய—பிரதீப்பைத் திருமணம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ராஜேஷ் கன்னுவைத் திருமணம்செய்துகொண்ட டிம்பிளும் சரி, அவருடன் மனைவி போல் வாழ்ந்த டீனு முனிமும் சரி— தனக்குப் பிரியமானவர்களுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டவர்கள்தான்.

ராஜேஷ்கன்னுவை விட்டுப் பிரிந்து சென்றவுடன் டிம்பிள் கபாடியா ராஜேந்திரா என்பவருடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். பம்பாய் நகர் முழுவதும் காதலர்களாகச் சுற்றினர். சன்னி டாயலுடன் படம் புக்கானவுடன் டிம்பிள் தன் மனத்தை சன்னி டாயலுக்கு மாற்றிக் கொண்டார். பலநாள் படுக்கையைப் பகிர்ந்து கொண்டனர். இருவரும் திருமணம் செய்து கொண்டதாகக் கூடக் கூறப்படுகிறது.

டீனு முனிம், ராஜேஷ்கன்னுவுக்கு முன்பு சஞ்சய் தத்தைத் தீவிரமாகக் காதலித்தார். சஞ்சய் பெரும் குடிகாரராக மாறியதால், ராஜேஷைப் பிடித்துக் கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளாக மனைவியைப் போல் ராஜேஷுடன் குடும்பம் நடத்தினர். தன் தந்தை போல தோற்றமளிக்கும் ராஜேஷுடன் திருமணத்திற்கு வாய்ப்பில்லை என்பதை அறிந்தவுடன் விமல் கம்பெனியின் முதலாளியின் மகனை இப்பொழுது பிடித்துக் கொண்டிருக்கிருர்.

ஜெயலலிதாவிடம் முன்பெல்லாம் கட்சிப் பிரமுகர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்பார்கள். அப்படிப்பட்ட தொலைபேசித் தொடர்பு இப்போது அனுமதிக்கப்படுவது இல்லை.

தலைமைக் கழகத்துக்கு அவர் வருகிறபோது மட்டுமே கட்சிக்காரர்கள் அவரை நேரில் பார்க்கலாம். எழுத்தாளர் இந்துமதிக்கு அவரிடம் தனிச்சலுகை உண்டு. அவர் அந்தச் சலுகையைப் பயன்படுத்தி பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்.

உதாரணமாக ஒரு வாரப் பத்திரிகை மீது விழ இருந்த கொலைப் பழியைத் தடுத்து நிறுத்தினார். பொதுவாக ஜெயலலிதாவிடமிருந்து அரசாங்க அதிகாரிகளுக்கு இப்போது தொலைபேசிச் செய்திகள் வருவதில்லை. இது எம்.ஜி.ஆரின் கண்டிப்பான உத்தரவு. ஆனால் இந்துமதி சிபாரிசுக்காக ஜெயலலிதா தொலைபேசியில் உத்தரவிட்டது பற்றி காவல்துறை அதிகாரிகள் வியப்புத் தெரிவிக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அ.இ.அ.தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டு, பின்னர் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர் தாமரைக்கனிக்கு தடபுடலான வரவேற்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலிருந்து தன் சொந்த ஊரான திருவில்லிபுத்தூருக்குத் திரும்பிய தாமரைக்கனிக்கு தொகுதியின் எல்லைத் தொடங்கும் ஊரான அழகாபுரியிலிருந்தே வரவேற்புக் கிடைத்திருக்கிறது. வழிநெடுக வரவேற்பு வளைவுகள் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. முதல் நாள் பிற்பகலிலிருந்தே ஒவ்வொரு ஊர் எல்லையிலும் எம். ஜி. ஆரின் இசைத் தட்டுகள் முழங்கிக் கொண்டிருந்தன.

பஸ்கள், லாரிகள், வேன்கள் போன்ற எழுபதுக்கும் மேற்பட்ட வாகனங்களில் கட்சித் தொண்டர்கள் ஏறிச் சென்று அழைத்து வந்திருக்கிறார்கள். சென்ற 18-5-87 அன்று திருவில்லிபுத்தூர் நகரமே விழாக் கோலம் பூண்டிருக்கிறது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பகல் 12 மணிக்கு 10,000 பேர் தாமரைக்கனி தலைமையில் நகரத்தில் கோஷம் இட்டுக் கொண்டு ஊர்வலமாகச் சென்றிருக்கிறார்கள். இடையில் தாமரைக் கனியை விட்டு விலகி நின்ற கட்சிக்காரர்களில் பெரும்பகுதியினர் தற்பொழுது அவரிடமே திரும்பவந்துவிட்டார்கள்; நகரெங்கும் வரவேற் புச் சுவரொட்டிகளையும் ஒட்டியிருக்கிறார்கள். தொகுதி முழுவதுமே தாமரைக்கனிமீது அனுதாப அலை வீசிக்கொண்டிருக்கிறது.

காமராஜர் மாவட்டத்தில் தாமரைக்கனிக்கு எதிராக தீவிரமாகச் செயல்பட்டுவரும் அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் 'மே தின விழா'க் கூட்டம் மற்றும் திறப்பு விழாக்கள் என்ற போர்வை யில் தாமரைக்கனியின் தொகுதியிலுள்ள வத்திராயிருப்புப் பகுதியில் 1-5-87 அன்று தூள் பரப்பியிருக்கிறார்.

அன்றைய தினம் விருதுநகர், திருவில்லிபுத்தூர், இராஜபாளையம், சாத்தூர், சிவகாசி போன்ற எல்லா ஊர்களில் இருந்தும் வாடகைக் கார்கள், லாரிகள், பஸ்களைக் கொண்டுவந்து குவித்துவிட்டார்கள். எங்கு பார்த்தாலும் கார்களின் பவனிகளே காட்சியளித்தன.

'தினமலர்' போன்ற நாளிதழ்களில் முழுப்பக்க விளம்பரங்கள்; வரவேற்பு வாசகங்கள் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் தண்ணீர்த் தொட்டிகள் மீண்டும் திறந்து வைக்கப்பட்டன. பிளவைக்கல் அணையில் அனைவருக்கும் விதவிதமான விருந்துகள் வைக்கப்பட்டன. அணையில் தண்ணீர் இல்லாவிட்டாலும், விருந்துக்குத் 'தண்ணீர்'ப் பஞ்சம் இல்லை!

இந்த விழாக்களில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பெயர் எங்கும் இல்லை; அவருக்கு அழைப்பும் இல்லை.

இத்தனைக்கும் தனது பெயர் வேண்டும் என்றே அழைப்பிதழில் விடப்பட்டிருப்பதைச் சட்டமன்றத்திலேயே தாமரைக்கனி சுட்டிக் காட்டினார். அப்போது சபாநாயகர் பி. எச். பாண்டியன், "சட்ட மன்ற உறுப்பினர் பெயரையும் அழைப்பிதழில் அச்சிட்டு அவரை அழைக்க வேண்டும்; இல்லாவிட்டால் விழாவை ரத்து செய்துவிட வேண்டும்" என்று சட்டமன்றத்திலேயே உத்தரவு போட்டார்.

வானளாவிய அதிகாரம் படைத்த பி. எச். பாண்டியனின் ஆணை வத்திராயிருப்பு நிகழ்ச்சிகளில் நிறைவேறவில்லை. மாறாக விழாக்களை வரலாறு காணாத வகையில் நடத்திக் காட்டி விட்டார் அமைச்சர். இதனால் சபாநாயகருக்கும் அமைச்சருக்குமே வாக்குவாதம் நடை பெற்றிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குமரிஅனந்தன் இந்திராகாங்கிரசில் இணைந்து விட்டதும், அரங்க நாயகத்தின் பதவி பறிக்கப்பட்டதும், தாமரைக்கனி கட்சியில் இருந்து நீக்கப்பட்டதும், எல்லாவற்றுக்கும் மேலாக கே. கே. எஸ். எஸ். இராமச்சந்திரனின் நாடார் எதிர்ப்பு நடவடிக்கைகளும் நாடார் சமூகத்தினரிடையே பெரும் கவலையைத் தோற்றுவித்திருந்தன.

இராஜபாளையத்தில் நடைபெற்ற நாடார் - அரிஜன் மோதல் நிகழ்ச்சிகளில் உடனடியாகத் தலையிட்டு தங்களுக்கு உதவும் நிலையில் ஆளும் தரப்பில் யாரும் இல்லாதது நாடார்களின் மத்தியில் பல்வேறு சிந்தனைகளைத் தோற்றுவித்துவிட்டது.

எனவே, தூத்துக்குடியில் நாடார்கள் சங்கத்தின் சார்பில் பி. எச். பாண்டியனுக்கு வரவேற்புக் கொடுக்கப்பட்ட நேரத்திலேயே தங்கள் உள்ளக் குமுறலை வெளியிட்டு முதல்வரிடம் எடுத்துரைக்கு மாறு வற்புறுத்தியிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து பி. எச். பாண்டியன் மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளித்திருக்கின்றன.

அதற்கு எதிர்ப்பாகத் தன் மாவட்டத்திலிருந்து கட்சித் தொண்டர்களைத் திரட்டி வந்து முதல்வருக்கு நிர்ப்பந்தம் கொடுத்தார் கே. கே. எஸ். எஸ். ஆர். எப்படியும் தாமரைக்கனியை மீண்டும் சேர்க்கமாட்டார் என்று உறுதியாக இருந்தார்.

தற்போது தான் நினைத்ததற்கு நேர்மாறாக நடந்துவிட்டதால் அமைச்சர் பெரிதும் வருத்தப்படுகிறாராம். "மாவட்டத்திற்குள் இனி மேல் நான் அரசியல் நடத்த முடியாது" என்று தனக்கு நெருக்கமான கட்சித் தலைவர் ஒருவரிடம் கூறி சலித்துக் கொண்டாராம்!

# பாடல்

ஆர். அறிவழகன்
வகுப்பு: 6 ஏ, ஈஷன் தொடக்கப்பள்ளி

நில், நில், நில்
நில்லா விட்டால் உடனே ஓடிச்
செல், செல், செல்
புல், புல், புல்
புல்லைப் பிடுங்கிப் பூமியை உழுதால்
நெல், நெல், நெல்
வெல், வெல், வெல்
வென்றது ராமர் கையில் உள்ள
வில், வில், வில்
சொல், சொல், சொல்
சொல்லித் தந்த பாட்டிக் கெங்கே
ப்ல். பல், பல்?

சேலம் கண்ணன் எம்.பி
அரும் கட்சியிலிருந்து
நீக்கப்பட்டுவிட்டாலும்
அவரது நடவடிக்கைகள்
கட்சிக்கு ஆதரவாகவே
இருந்து வருகிறது.
மாவட்டத்தில் உள்ள
முக்கியப் புள்ளிகளும்,
கட்சித் தொண்டர்களும்
நாள்தோறும் கண்ணனை
சந்தித்துக் கொண்டுதான்
இருக்கிறார்கள். அவர்மீது
தலைமைக்கு நல்ல எண்ணம்
ஏற்பட்டிருக்கிறது. விரைவில்
அ.தி.மு.கவில் அவர்
அதிகாரப் பூர்வமாக
சேர்த்துக் கொள்ளப்படுவா

www.tamilarangam.net



# ஒடுக்கப்பட்டோரின் உதிரம்!

சிந்தப்பட்ட இரத்தத்திற்கான
தடையம்
எங்கும் காணவில்லை
கொலைஞனின் கையிலும் இல்லை

அவன் ஆடையிலும் இல்லை
சிவந்த கத்தியின் முனையிலும் இல்லை
வாளின் நுனியிலும் இல்லை
தூசியிலும் எந்தத் துளியும் இல்லை
சுவற்றிலும் எந்தக் கறையும் இல்லை!

சிந்தப்பட்ட இரத்தம்
தன் கருமையைக் காட்டும்
எந்தத் தடையமும்
எங்கும் இல்லை

அந்த இரத்தம்
தியாகச் சடங்கிலே
சிந்தப்பட்டது அல்ல
அதற்காக

எந்த விழாவும் நடக்கவில்லை!
அந்த
அநாதையின் இரத்தம்
பீறிட்டு ஓடியபோது
அவன் எழுப்பிய
ஓலம்தான் கேட்டது!
அப்போது
அந்த ஒலத்தைக் கேட்டு

உதவுவதற்கு
எவருக்கும்
நேரமும் இல்லை, நினைப்பும் இல்லை

சாட்சியம் எதும் இல்லை
பரிந்து வாதிடுவோரும் இல்லை
வழக்கு முடிந்து விட்டது
ஒடுக்கப்பட்டவர்களின் உதிரம்
மண்ணிலே மவுனமாக மறைந்துவிட்டது!

www.tamilarangam.net



## மீரட் கலவரம்

# யாதவ் புகார்

அரியானா சட்டசபை தேர்தலில் இந்து ஓட்டு களை பெறும் பொருட்டு மீரட்டில் வகுப்புவாத கலவரங்களை தூண்டியதாக இ. காங்கிரஸ்காரர்களை ஜனவாடி தலைவர் சந்திரஜித் யாதவ் குற்றஞ் சாட்டினார்.

நிருபர்களிடையே அவர் பேசுகையில் கலவரங்களுக்கான காரணங்களை அறியவும், மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் காணவும் மீரட்டுக்குச் சென்ற எதிர் கட்சி எம்.பி.க்கள் அனுமதி மறுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டனர். எனக் குறிப்பிட்டார்

உ. பி. முழுவதிலும் வகுப்புவாதவிஷம் பரவி வருவதால மதச்சார்பற்ற நிலை என்ற அஸ்திவாரமே ஆட்டம்கண்டு வருகிறது. இதனை சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக மத்திய அரசும், உ.பி. அரசும் கருதுகின்றன என்றார். வகுப்புவாத பிரச்னை தலைதூக்கியதற்கு மூலகாரணத்தை யாதவ் விவரிக்கையில் அயோத்தியில் சர்ச்சைக்கிடமான ஒரு ஆலயத்தின் கேட்களைத் திறந்ததைத் தொடர்ந்து வகுப்புவாத தகராறு துவங்கியதாகக் கூறினார். இந்த ஆலயம் 30 வருடங்களாக மூடப்பட்டிருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

## துருக்கி ஈரான் பொருளாதார ஒப்பந்தம்

டெஹ்ரான்

துருக்கியும் - ஈரானும் தங்களுக்கிடையே பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு ஓர் வியாபார ஒப்பந்தத்தில் கையப்பமிட்டன. இவ் ஒப்பந்தப்படி இரு நாடுகளுக்கு மத்தியில் வியாபாரப் பரிமாற்றம் சுமார் இரண்டு பில்லியன் டாலர் அளவிற்கு உயர உள்ளன. இவ் ஒப்பந்தப்படி இவ்வாண்டு ஈரானிலிருந்து துருக்கி சுமார் 900 மில்லியன் டாலர் மதிப்புள்ள கச்சா எண்ணெயையும் (சுத்தம் செய்யாத பெட்ரோல்). சுமார் 70 மில்லியன் டாலர் மதிப்புடைய இதர பண்டங்களையும் இறக்குமதி செய்யும் என அறிவிக்கப்பட்டது.

...மெரிக்கா
...ட்டல்

வியன்னா, ஜூன் 9— ...ஈரான் மீது அமெரிக்கா ...குதல் நடத்துமானால் ...க வளைகுடாவில் ...அமெரிக்க படைகளை ...நுக்குவோம்; அமெரிக்...ர்களேயும் தாக்குதல் ...துவோம் என்று ஈரான் ...த்துள்ளது.

...பாரசீக வளைகுடாவில் ...ரிக்க போர்க்கப்பல்களை ...தி ஈரானுக்கு எதிராக ... சண்டைக்கு வர ...கிறது என்று வியன் ...; ஈரான் வெளியுறவு ...ச்சர் ஹூசையன்ஷேக் ...அஸ்ஸாம் கூறினார். ...அமெரிக்க கடற்படை ...ளைத் தாக்குமானால், ... வளைகுடாவில் ... அமெரிக்க போர்க்...களை நொறுக்கு... அமெரிக்காவுக்குள்ளும் ...தல் நடத்துவோம் ... அவர்.

...ளைகுடாவிலுள்ள ...ரிக்க கப்பல்கள் மீது ... கைவைக்குமானால் ...னுக்கு மரண ...கொடுப்போம். இது ... யுத்தத்தில் ஈரான் ...ய அடியை விட பத்து ...அதிகமான மரண ...க இருக்கும். ஈரான் ...ய பலத்தின் சதியையே

அது முடிவு கட்டிவிடும் என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலாளர் ப்ரெசன்ஸ்கி எச்சரித்தார்.

சீனாவில் இருந்து ஈரான் வரவழைத்துள்ள 'சில்க் வொர்ம்' என்ற ஏவுகணையைப் பயன்படுத்துமானால் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

ப்ரெசன்ஸ்கி எச்சரித்து இருக்கிறார்.

நேட்டோ நாடுகளில் உள்ள மூன்றரை லட்சம் அமெரிக்க துருப்புகளில் ஒருலட்சம் துருப்புக்களை வளைகுடாவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் தெரிவித்து இருக்கிறார்.

பாரசீக வளைகுடாவில் சர்வதேசக் கப்பல்களை பாதுகாக்க அமெரிக்காவும் ரஷ்யாவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குவைத் கூறி இருக்கிறது. இந்த யோசனையை அமெரிக்க ஜனாதிபதி ரீகனின் உதவியாளர் ஹாவர்ட் பேக்கர் வரவேற்று இருக்கிறார். 'குவைத் யோசனை சிறந்த யோசனை' என்று அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த தலை கீழ் மாற்றத்தை அந்த நாட்டின் ஜனநாயகக் கட்சி எதிர்த்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எளிய உடை உடுக்கும் துறவியாக இருந்தாலும், செல்வம் இருந்தால்தான் பலரும் மதிப்பர். உயர் குடியில் பிறந்தவராக இருந்தாலும் செல்வம் இல்லாவிட்டால் பிணத்தைவிடக் கேவலமாகக் கருதுவர்.

—நாலடியார்

# 'ஜூடோ மன்னன்!' ம.பொ.சி.க்கு பட்டம்!

சென்னை,

'மூல சபை' என்ற படத்தில் சிறப்பாக சண்டைக்காட்சி அமைத்த ம.பொ.சி.க்கு 'ஜூடோமன்னன்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.

ராணிசிதை ஹாலில் நடைபெற்ற இந்த விழாவிற்கு ப்ளாக் பெல்ட் பி. எச். பாண்டியன் தலைமை வகித்தார்.

ஆரம்பகாலங்களில் தி.மு.க. பிக்சர்ஸார் தயாரித்த படங்களில் சண்டைக் காட்சிகளை அமைத்துக் கொண்டிருந்தவர் ம.பொ.சி. தி.மு.க. படக் கம்பெனி நொடிந்து போனதும் அ.தி.மு.க. புரொடக்ஷன்ஸ் படங்களில் துணை நடிகராகச் சேர்ந்தார். பிறகு ஸ்டண்ட் நடிகராகி, பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்ட 'மேல் சபை' வண்ணப் படத்தில் ஸ்டண்ட் மாஸ்டராகப் பொறுப்பேற்றார். இவர் சொந்தமாகத் தயாரித்த 'தமிழரசு கழகம்' என்ற கருப்பு- வெள்ளைப் படம் 50 ஆண்டுகளாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது. படத்தின் கதை, வசனம், டைரக்ஷன், பாடல், இசை, கேமிரா, நடனம், சண்டை, படம் பார்ப்பது, தியேட்டரில் கை தட்டுவது, சுண்டல்- கடலை விற்பது ஆகிய எல்லா பொறுப்புக்களையும் ம.பொ.சி. ஒருவரே கவனித்து வந்தார்.



"சமீபத்தில் வெளியான 'மேல்சபை' படம் தோல்வியடைந்ததும், ம. பொ. சி. அங்குமிங்கும்' பல்டி' அடித்து, உருக்கமாகக் கண்ணீர் விட்டு நடித்தும் காட்டினார். இந்தத் திறமையை பாராட்டும் வகையில் 'ஜூடோ மன்னன்' என்ற பட்டத்தை வழங்குகிறோம்'' என்று பேசினார் பி.எச். பாண்டியன்.

பட்டத்தை வாங்குவதற்காக மேடைக்கு வந்த ம. பொ. சி., ஜூடோ சண்டைக் காட்சிகளைச் செய்து காட்டினார். 20 செங்கற்களை மீசையில் கட்டி இழுத்தது வியப்புக்குரிய காட்சியாகும்.

www.tamilarangam.net



# வல்லரசை கலக்கிய வாலிபன்

சோவியத் யூனியன் ...லக வல்லரசுகளில் ஒன்று. ...மெரிக்காவின் எதிரி. ...ார்ஷா ஒப்பந்த நாடுகளின் ...துகாவலர் அமெரிக்காவை ...திர்க்கும் நாடுகளுக்கெல் ...ாம் துணைவன்.

உலகில் எங்கே அமெரிக் ...வுடன் மோதல் வந்தாலும் ...ங்கே அமெரிக்காவுக்கு எதி ...க விமானங்களை அனுப் ...ம் அல்லது அனுப்புவதாக ...ச்சரிக்கும் சக்தி படைத்த ...மானப்படை கொண்ட ...டு.

ஆள் இல்லாமலேயே சந் ...னில் இருந்து மண் எடுத்து ...ரும் ராக்கெட்டையும் விண் ...வெளியில் முதல் மனிதனை ... அனுப்பிய பெருமையும் ...டைத்த நாடு.

அவ்வளவு வல்லமை ...காண்ட சோவியத் ரஷ் ...ாவை மேற்குஜெர்மனியைச் ...சர்ந்த மத்தியாஸ் ரஸ்ட் ...ன்ற வாலிபன் கலங்கடித்து ...ட்டான்.

உலக அரங்கில் சோவி ...த் ரஷ்யாவின் படை ...லத்தை கேள்விக் குறியாக்கி ...ட்டான். சோவியத் பாது காப்பு அமைச்சரையும். விமானப்படைத் தளபதியையும் நீக்கப்பட வைத்துவிட்டான்.

அவன் செய்த காரியம் மிகவும் எளிதானது. சோவியத் ரஷ்ய தலை நகரான மாஸ்கோவின் நடு நாயகமான செஞ்சதுக்கத்துக்குள் விமானத்தை இறக்கிவிட்டான்.

அவன் ஒரு பிரபல விமானியுமல்ல. அவனது விமானம்எதிர்ப்புக்களைத்தாங்கும் சக்தி கொண்டதும் அல்ல.

சாதாரண விளையாட்டு விமானம் அது.

இத்தனைக்கும் மாஸ்கோ என்பது மேற்கு ஜெர்மனி எல்லையை ஒட்டிய நகரம் அல்ல. ரஷிய மண்ணுக்குள்ளேயே 900 மைல் அவனது விமானம் பறந்திருக்கிறது.

அப்போது அதுதடுக்கப்படவில்லை. அதன்பிறகு மாஸ்கோவின் உச்சியில் பறக்கும் போது அதைசோவியத் விமானங்கள் கட்டாயமாகத் தரையில் இறககவில்லை. இரண்டு ரஷிய போர் விமானங்கள் அதனைச் சுற்றி சுற்றிப் பறந்தனவே தவிர தரை இறக்கவில்லை. தானாகத் தான் அந்த விமானம் தரை இறங்கியது,

ரஷியத் தலைவர்கள் இருக்கும் கிரெம்ளின் மாளிகை அருகிலேயே உள்ள செஞ்சதுக்கத்தில் தங்குதடை இன்றி ஒரு விமானம் அதுவும் சாதாரண விமானம் இறங்க முடியும் என்றால்.

யுத்தம் என்று வந்தால் மாஸ்கோ நகருக்கு என்ன தான் பாதுகாப்பு என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. இதனால் ரஷியாவின் ராணுவ பலம் கூட உலகின் முன் சந்தேகக் குறியைத் தோற்றுவித்துள்ளது.

அதுவும். இந்த நிகழ்ச்சி நடந்த நேரம் முக்கியமானது வார்ஷா ஒப்பந்த நாடுகள் என்று அழைக்கப்படும் கம்யூனிஸ்ட்நாடுகளின் தலைவர்கள் கூட்டம், கிழக்கு ஜெர்மனியில் நடந்து கொண்டிருந்த நேரம். அந்த நாடுகளுக்கெல்லாம் பாதுகாப்பு அளிப்பதாக ரஷிய பாதுகாப்பு அமைச்சர் உத்தரவாதம் அளித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அவர் நாட்டின் மையப்பகுதியிலேயே வெளிநாட்டு விமானம் இறங்கி விட்டது.

அந்த வாலிபனின்வயது 18 தான். ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிப்பார்ப்பதற்காக மூன்று வாரத்துக்கு வாடகைக்கு எடுத்து வந்த விமானம்தான் அது.

ஆக மொத்தத்தில் ஒரு வாலிபனின் விளையாட்டு ஒரு பெரும் வல்லரசின் பாதுகாப்பு அமைச்சர் பதவியையும், விமானப்படை தளபதியின் பதவியையும் பறித்துக் கொண்டது.

வல்லரசின் பாதுகாப்பையே கேலிக்குரியதாக-கேள்விக்குரியதாக மாற்றி விட்டது,

அவன் இப்போது சிறையில் இருக்கிறான். அவன் எதிர்காலமும் இப்போது கேள்விக்குறிதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விபச்சாரிக்கு ஆண்பால் என்ன?

இன்றைய சமுதாயத்தில் அதுவும் இந்தியாவில் பெண்கள் ஆண்களுக்குச் சமம் என்ற நிலை உருவாகியிருக்கிறது. ஆனால் அன்றாடப் பிரச்சனைகளில் அதை செயலாக்க முடிவதில்லை. ஏன் என்றால் ''மேல் சாவனிசம்'' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அதாவது ஆண் வர்க்கத்தின் கொடுங்கோல் ஆட்சி ஆகும். அதையெல்லாம் திருப்திப் படுத்தி பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது மிகவும் கடினமானது.

முதலாவதாக இப்போது காணும் திரைப்பட சுவரொட்டிகள் கதைப் புத்தகங்கள் ஆகியவற்றைப் பார்க்கும்போது பெண்கள் ஒரு போகப் பொருளாக கருதப்படுவதாகத் தோன்றுகிறது. சமத்துவம் பேசும் போது ஒரு வர்க்கத்தினரை மட்டும் தாழ்த்துவது நல்லதல்ல. அதை ஆண் வர்க்கம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

அதேபோல் விபச்சார வழக்கிலும், ஆண்கள் வரலாம். ஆனால் கோர்ட்டில் பாதிக்கப்படுவது பெண்கள். விபசாரம் தவறு என்றால் தண்டனை ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமாக இருக்க வேண்டும்.

ஒரு ஆண் எவ்வளவோ பெண்ணிடம் போகலாம். ஆனால் ஒரு பெண் அப்படிப் போனால் அவளுக்குப் பெயர் விபச்சாரி. ஏன் ஆண்களை விபச்சாரன் என்று கூப்பிடக்கூடாது?

மேலும் சமத்துவத்தில் சில காரியங்கள் பெண்கள் செய்தால் தவறு. ஆண்கள் செய்தால் அதை சரி என்று ஏற்றுக் கொள்கிறது உலகம்.

இப்போது சட்டங்களில் பெண்களுக்கு சில சலுகைகள் வந்துள்ளன. ஆனால் அந்தச் சலுகைகள் இன்னும் வளர்ந்து கிராம அளவுகளில் செல்லவில்லை. அதை கிராமங்களுக்கு எடுத்துச் செல்லும் அளவிற்கு பெண்கள் சங்கங்கள் பாடுபடவேண்டும்.

அதேபோல் நான் காணும் சில காட்சிகளை சொல்ல விரும்புகிறேன். அதாவது எழும்பூர் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் பெறும் பெண்கள் தினமும் வந்து காத்துக் கிடக்கும் காட்சி மிகவும் மனவேதனை தருகிறது. அவர்களுடைய கணவன்மார்கள் என்றைக்குப் பணம் கட்டுவார்கள் என்று தெரியாது. மாதம் முழுவதும் காத்துக் கிடந்து அங்கு வருவோர் போவோர் கண்களுக்கு ஒரு காட்சிப் பொருளாக இருக்கிறார்கள். இதை கண்டித்து நாங்கள் ஒரு மனுவை உயர்நீதிமன்ற நீதிபதியிடம் கொடுத்துள்ளோம். அவர்கள் கணவன் கட்டும் பணத்தை நேரடியாக பணஆணை (மணியார்டர்) செய்யும் அதிகாரத்தை நீதிமன்றம் எடுத்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளோம்.

இதைப்போல் அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சனைகள் பெண்களைச் சார்ந்து இருக்கிறது. இவையெல்லாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அன்றுதான் நமக்கு பூரண சமத்துவம் கிடைத்தது போல் ஆகும்.

—டாக்டர். ரமாதேவி

நல்லொழுக்கம் மிக்க மனைவி தன் கணவனின் மகுடம் ஆவாள்.

—பைபிள்

மனோ இச்சை, நாம் எப்படி நேரத்தைச் செலவிடுகிறோம் ஆகிய இரண்டையும் வைத்துத்தான் நம் ஒழுக்கம் உருவாகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"திருமண விழா நடத்துகிறீர்கள், வாங்கிய கடனைக் கட்டினால் என்ன?"

உழவர்களைப் பார்த்து ஊராள வந்த நீண்டதுண்டு நெடுஞ்செழியன் கேட்கிறார்!

* கடனைக் கட்டு என்று சொல்!
* திருமணவிழா பற்றி என்ன குத்தல்? குறுக்குச்சால்?.

கடன் வாங்கியவர் யாருமே கல்யாணம் செய்யக் கூடாதா? அண்ணாவின் மொழியில் சொல்வதானால் இதுதான் மிராசு மனப்பான்மை!

சிறிது நாள் — நகர்ந்தால் இந்த நாவலரின் நாவு கேட்கக் கூடாத கேள்வி எல்லாம் கேட்கும்!

* சோறு ஏன் சாப்பிடுகிறாய்? கடனைக் கட்டிவிட்டுச் சாப்பிடு! அதுவரை பட்டினி கிட!
* ஆடை ஏன் உடுத்துகிறாய்? கடனைக் கட்டி விட்டு! ஆடை உடுத்து! அதுவரை ஆடை இல்லாமல் உலா-வா!
* வீட்டில் ஏன் குடியிருக்கிறாய்? கடனைக் கட்டிவிட்டு வீட்டில் உறங்கு! அதுவரை சுடுகாட்டில் உறங்கு!

கேட்டாலும் கேட்பார்! அவரா கேட்கிறார்? அதிகாரம் கேட்கிறது. அடுத்த தேர்தல் வரையுள்ள தாற்காலிக அதிகாரம் கேட்கிறது.

கடன் வாங்கியவர்கள் எந்த விழாவுமே நடத்தக் கூடாது என்றால்.... இந்த நாவலரது அரசாங்கம் கூடக் கடன் வாங்கியிருக்கிறதே!

* மத்திய அரசிடமிருந்து கடன்!
* உலக வங்கியிடமிருந்து கடன்!

இத்தனை கடன்களை வாங்கி விட்டு.... மேளதாளத்தோடு மேலூர் கீழூர் உலா ஏன்?

* பத்து ஏக்கர் பங்களா வாசம் ஏன்?
* வண்டி ஏன்? வாகனம் ஏன்?
* அறுசுவை உண்டி ஏன்?
* பண்டிகை ஏன்?
* நீண்ட துண்டுதான் ஏன்?

உழுதுண்டு வாழ்வோரைத் தொழுது உண்டு பின் செல்வோர் பழிப்பதோ? சேற்றில் உழன்று நாற்றை வளர்த்துச் சோற்றைத் தரும் உழவர் மீது ஊத்தைச் சடலங்கள் இழிவை உமிழ்வதோ?

கடன் கொடுத்தோம்; கடன் கொடுத்தோம் — என்கிறாரே! இவருக்கு ஏது பணம்? இவரது முன்னோர் பணமா? பின்னோர் பணமா?!

* இந்த உழவரைக் காட்டி அவரது உழுநிலங்களைக் காட்டி —
  உலக வங்கியிலிருந்து பெற்ற பணம்தானே அது?

அவர்கள் கொடுத்த பணத்திற்கு இவர் என்ன நாட்டாண்மை? சத்திரத்துச் சோற்றுக்குத் தாத்தையங்கார் சிபாரிசா?

* ஒருநாள் வரும்!
* உழவர்கள் உலக வங்கியிடம் சொல்வார்கள்!
* உங்கள் பணத்தை எங்களிடம் நேரடியாகத் தாருங்கள்!
* இந்த நீண்டதுண்டுத் தரகர்கள் இடையில் வேண்டாம்!

அப்போது புரியும்; அதிகாரம் சரியும்; அடிவயிறு எரியும்! அது மட்டுமா? உலக வங்கியிலிருந்து குறைவான வட்டிக்குப் பணம் வாங்கி உழவருக்குக் கொடுக்கும் போதும் வட்டிக்கு வட்டி போடும் இவர்களின் "மார்வாரித்தனம்" மாநிலத்திற்குப் புரியும்!

* விவசாயிக்கு விவரம் தெரியாத போது பச்சைக் குதிரை ஏறினார்கள்!
* பச்சைத் துண்டு போட்ட பிறகு விவசாயி விழித்து விட்டான்!

தூங்கியபோது திரித்த கயிற்றை இனித் திரிக்க முடியாது; உருட்டல் - மிரட்டல் - விரட்டல் — வெருட்டல் இனி... எடுபடாது! குதர்க்கப் பேச்சுகளால் 'குஜராத்தை' இங்கே கொண்டு வந்துவிட வேண்டாம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விமானம் மூலம் உணவு சப்ளை

# தமிழர்கள் மகிழ்ச்சி

கொழும்பு, ஜூன் 7-

இந்திய அரசு விமானம் மூலம் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் சப்ளையால் எங்கள் பட்டினி தீர்ந்தது என்று பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

ஒரு வாரத்திற்குப் பின்னர் தங்களுக்கு உணவு கிடைத்ததாகவும், இந்திய அரசு முன்கூட்டியே உணவுப் பொருட்களை வழங்கி இருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை ராணுவத்தாக்குதலினால் நாசம் செய்யப்பட்ட, வடமராச்சி, வல்வெட்டித்துறை, பருத்தித் துறை, ஆகிய நகரங்களும் பத்திரிக்கையாளர்களுக்கு சுற்றிக்காட்டப்பட்டன.

இதற்கான ஏற்பாட்டை இலங்கை அரசு செய்திருந்தது. இந்த சுற்றுப் பயணத்தில் இலங்கை பாதுகாப்பு அமைச்சர் அதுலத் முதலியும் நிருபர்களுடன் சேர்ந்து கொண்டார்.

### தமிழர்கள் மகிழ்ச்சி

வல்வெட்டித் துறையிலும், பருத்திதுறையிலும்நிருபர்களை சந்தித்து தமிழர்கள் அனைவரும் இந்திய அரசின் உதவி குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

முன்னரேஇந்திய அரசு உதவிசெய்து இருக்கலாம் என்றும் ஒருவார காலத்துக்குப்பின் இப்போதுதான் தங்களுக்கு உணவு கிடைத்தது என்றும் அவர்கள் கூறினர்.

இந்தியாவின் உதவியை தமிழர்கள் அலட்சியம் செய்துள்ளார்கள் என்று இலங்கை அரசு தெரிவித்த செய்தியை தமிழர்களின் மகிழ்ச்சி பொய்யாகிவிட்டது.

இலங்கை ராணுவம் தாக்கிய போது பதுங்கு குழிக்குள் ஆறுநாட்கள் முடங்கிக் கிடந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர் வல்வெட்டித்துறை ... கள் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்தியாவின் உதவி புதிய சிக்கலை உருவாக்கலாம் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

இந்திய அரசு ஏன் எங்களை விடுவிக்கக் கூடாது என்று நடுத்தர வயதுள்ள ஆசிரியர் ஒருவர் கேட்டார். வல்வெட்டித்துறை மீண்டும் புலிகள் கைக்கு மாறினால் அவர்கள் சொல்வதுபோல நாங்கள் கேட்கவேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

## அதுலத் முதலி வாக்குறுதி

அகதிகளாக தங்கியுள்ள தமிழர்களிடம்விரைவில் நிவாரண உதவிகள்வழங்கப்படும். பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடாத இளைஞர்களை விடுவிக்கும் பணியை அரசு துரிதப்படுத்தும் என்று அதுலத்முதலி கூறினார்.

பலர் தங்கள் குழந்தைகள் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் விரைவில் அவர்களை விடுதலை செய்து தங்களிடம் சேர்க்க வேண்டும் என்றும் அமைச்சரிடம் மனு தந்தனர்.

### ராணுவம் கொள்ளை

ராணுவம் தங்கள் சொத்துக்களை கொள்ளையடித்துச் சென்று விட்டதாக சிலர் அமைச்சரிடம் புகார் தந்தனர்.

## துப்பாக்கி முனையில் ராணுவத்தினர் நடத்திய உணவு சப்ளை

அதுலத்முதலி முன்னிலையில் இந்தியா அளித்த உதவிக்கு தமிழர்கள் பகிரங்கமாக மகிழ்ச்சி தெரிவித்ததை அடுத்து, வல்வெட்டித் துறையில் ராணுவத் ...

... இலங்கை அரசு உணவு விநியோகம் செய்தது.

ராணுவத்தினர் சீனத் துப்பாக்கிகளைக் கையில் ஏந்தி துப்பாக்கி முனையில் தமிழர்களை வரிசையில் நிறுத்திவைத்து இந்த சப்ளையை நடத்தியது.

ராணுவ 'ஹெல்மட்'களின் மூலம் அரிசி, மாவு ஆகியவற்றை அவர்கள் அளந்து போட்டார்கள்.

### நேபாளம் கவலை

விமானம் மூலம் யாழ்ப்பாணத்தில் உணவுப்பொருட்களை இந்தியா விநியோகம் செய்தது குறித்து நேபாள வெளியுறவு அமைச்சகம் ஆழ்ந்த கவலை தெரிவித்தது.

பனிதாபிமான அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு உதவ இந்தியா கொண்டுள்ள விருப்பத்தை நேபாளம் உணர்வதாகவும் நேபாள வெளியுறவு அமைச்சகப் பிரதிநிதி கூறினார்.

ஒரு சமரசத் திட்டத்தை நேபாளம் முன் வைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையும் இந்தியாவும் இந்திய துணைக்கண்டப் பகுதியில் பதட்டம் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பு கூறி உள்ளது.

## மார்க்சிஸ்ட் கோரிக்கை

இலங்கை தமிழர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களை அனுப்புவதை இந்தியா தொடர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச்செயலாளர் ஏ. நல்லசிவனும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்து வைப்பதற்குஉலகநாடுகளின் ஆதரவையும் இந்தியா திரட்ட வேண்டும் என்றும் ...

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மருமகனுக்கு மாமனர் கொடுக்க மறந்த சீதனம்

ஒரு ஊரில் திருமணம் நடந்தது. பெண்வீட்டார் சீர்வரிசை நிறைய செய்திருந்தனர். நகைகளை புதுப்பெண்ணல் சுமக்க முடிய வில்லையாம். வெண்கல பாத்திரங்கள் வீடு நிறைய இருந்ததாம். அத்தனையையும் பார்த்தும் நிறைவுபெருத மாப்பிள்ளை இன்னும் சீதனத்தில் குறையிருக்கிறது என்ருன்.

இதைக்கேட்ட மாமனர் மனம் வருந்தி, கைக்கு இரண்டு காப்பு களே இருந்ததால், மீண்டும் நிறைய தங்கக்காப்புகளை செய்து பெண்ணின் இரண்டு கைகளில் போட்டார். அப்பொழுதும் மாப்பிள்ளை குறையிருப்பதாகவே கூறினர்.

வெண்கலப் பாத்திரமும் நிறைய வாங்கிக் கொடுத்தார். துணி, மணிகள் வேண்டிய மட்டும் எடுத்துக்கொடுத்தார். இத்தனை வாங்கிக் கொடுப்பதற்குள் மாமனரின் சொத்து அனைத்தும் காலியாகி விட்டது. இப்பொழுதும் குறையிருபபதாகவே மாப்பிள்ளை சொன்னர்.

அப்பாவி மாமனர் என்ன செய்வார்? மருமகனுக்கு உல்லாசமாக வாழ்ந்திட ஒற்றைமாடி வீடு மட்டும்தான் இருக்கிறது. அது தான் குறையாக இருக்கலாம் என்றெண்ணி மூன்றுமாடி வீட்டையும் சீதனமாக கொடுத்தார்.

இன்னும் மருமகன் குறையிருப்பதாகவே சொல்ல, திகைத்தார் மாமனர்.

இத்தனையும் தம் மகளுக்குதானே கொடுத்திருக்கிருேம்! ஒருவேளை தனக்கு ஒன்றும் இந்த மாமனர் செய்யவில்லையே என்ற குறையினல் கோபப்படலாம! எனவே அதிக விலைக்கு வேட்டி சட்டையும், விரல் களுக்கு மோதிரமும், கழுத்தில் மைனர் சங்கிலியும் மாப்பிள்ளைக்குப் போட்டார்.

இப்பொழுது மாப்பிள்ளை சொன்னர், 'மிகத் தேவையானதைச் செய்யாத குறை இன்னும் நீங்கவில்லை'.

இனி கொடுப்பதற்கு ஒன்றும் இல்லையே என்றெண்ணிக் கொண் டிருக்கும்போது, மாப்பிள்ளை மாமனரை மட்டும தனியே அழைத்து 'மாமா! உங்கள் செல்வ மகளுக்கு வீட்டை எப்படி சுத்தமாக வைத்துக் கொள்வது என்பதை நீங்கள் சொல்லிக் கொடுக்கவில்லையே? அதனல் தான் வீட்டை பெருக்கி சுத்தத்துடன் அழகாக வைத்துக்கொள்ள பயன் படும் விளக்குமாற்றைச் சீதனமாக கொடுக்க மறந்துவிட்டீர்களோ?' என்ருன்.

ஓடிப்போய் இரண்டு விளக்குமாற்றை வாங்கி வந்து சீதனமாக கொடுத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதாபிமான நடவடிக்கை

யாழ்ப்பாணப் பகுதியில் கடந்த ஐந்து மாதங்களாக இலங்கை அரசின் பொருளாதார முற்றுகையாலும், அண்மையில் இலங்கை அரசின் விமான குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதல், தரைப்படை தாக்குதல் ஆகிய முழு மூச்சு ராணுவ நடவடிக்கைகளாலும் அல்லல்படும் தமிழ் மக்களுக்கு அவசர உதவியளிக்க உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும், அறுவைச் சிகிச்சைக்கு மருத்துவர்களையும் அனுப்ப இந்திய அரசு முடிவு செய்து அதற்கு இலங்கை அரசின் ஒத்துழைப்பினைக் கோரியது. இரு முறை இதற்கான வேண்டுகோளை விடுத்தது. ஆனால் இலங்கை அரசு ஒத்துழைப்பு தராதது மிகவும் வருந்தத்தக்கது.

இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளிப்பதில் இறுதி நேரத்திலாவது இலங்கை அரசுக்கு நல்ல மனமாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் புதன்கிழமையன்று 19 படகுகளில் உணவுப் பொருட்களையும், மருந்துகளையும் ராமேசுவரத்திலிருந்து யாழ்ப்பாண மக்களுக்கு உதவ இந்திய அரசு அனுப்பியது. இந்தப் படகுகள் இந்தியா-இலங்கை கடல் எல்லையை நெருங்கியதும் யாழ்ப்பாணத்துக்கு அந்தப் படகுகள் செல்ல இலங்கை கடற்படை அனுமதி மறுத்தது. உடன் இலங்கை கடல் பகுதிக்குள் இந்திய படகுகள் பிரவேசித்தால்தான் "நடவடிக்கை எடுக்கப் போவதாக

யது மிகவும் வருந்தத்தக்கது.



பேச்சு மூலம் தீர்வு காண்பதற்குப் பதிலாக ராணுவ நடவடிக்கையையே இலங்கை அரசு முழுமையாக நம்பிவிட்டதாகத் தென்படுகிறது. விமானங்கள் மூலமும், கப்பல்களின் பீரங்கிகளாலும், தரைப் படைகள் வழியாகவும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தில் இலங்கை அரசு மாபெரும் தாக்குதல் நடத்தி வருவதே இதற்குச் சான்று. விமானங்கள், ஹெலிகாப்டர்கள் குண்டு வீசியதால் ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதனை இந்திய அரசு சுட்டிக் காட்டியதை இலங்கை அரசு மறுத்தது நம்பத்தக்கதாக இல்லை. யாழ்ப்பாணத்தில் சதுர கிலோ மீட்டருக்கு 3000 பேருக்கு மேல் வசிக்கின்றனர். நல்லூர் பகுதியில் 2000க்கு மேற்பட்டவர்கள் சதுர கிலோ மீட்டரில் உள்ளனர். மற்றும் வலிகாமம், வடமராச்சி, தென்மராச்சி, கிழக்கு மராச்சி, மேற்கு மராச்சிப் பகுதிகளும் நெருக்கமான ஜனத்தொகை கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி ஜனநெரிசல் மிகுந்த பகுதிகள் மீது விமானங்களிலிருந்து குண்டுகளை வீசி, பீரங்கிகளால் சுடும்போது காக்காய், குருவி கூட சாகவில்லை என்று கூறினால் யாராவது நம்ப முடியுமா? பொது மக்கள் ஏராளமாக மடிந்திருப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

வும்" இலங்கை கடற்படைத் தலைவர் மிரட்டினார். அதனால் யாழ்ப்பாண மக்களின் துயர் துடைப்புப் பணியினை நிறைவேற்ற முடியாமல் இந்தியப் படகுகள் புதன்கிழமை இரவில் ராமேசுவரத்துக்கு திரும்ப வேண்டியதாயிற்று.

இதனை பயனற்ற நடவடிக்கை என்று கருத முடியாது. ஏனென்றால் (1) அவதிப்படும் யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு உதவ இந்தியா மேற்கொண்ட நல்லெண்ண மனிதாபிமான முயற்சிக்கு இலங்கை அரசு தடை விதித்த உண்மை உலக சமுதாயத்துக்கு உணர்த்தப்பட்டு விட்டது. பல நாட்டு பத்திரிகையாளர்கள் இதற்கு சாட்சியாக உள்ளனர். (2) யாழ்ப்பாண தமிழர் நிலைமை பற்றி இந்திய அரசு மிகுந்த கவலை கொண்டுள்ளது. இந்த நிலைமையில் இந்தியா செயலற்று இராது என்பது இலங்கை அரசுக்கு நன்கு உணர்த்தப்பட்டுவிட்டது. இந்தியப் படகுகளை அனுமதிக்க இலங்கை அரசு மறுத்த பிறகு புதன் இரவில் இந்திய அயல் நாட்டு இலாகா வெளியிட்ட அறிக்கையில் யாழ்ப்பாண மக்களின் அவல நிலையினை இந்திய சர்க்காரும் மக்களும் செயலற்று பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையினை இலங்கை அரசு உன்னிப்பாக கவனித்து விவேகமாக நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய படகுகளையும், மருத்துவர்களையும், பல தேச பத்திரிகை நிருபர்களையும் அனுமதிக்க மறுத்ததன் மூலம் ஒரு சமாதானத்துக்கான நல்ல வாய்ப்பினை இலங்கை அரசு நழுவவிட்டுள்ளது என்றே தோன்றுகிறது. இந்தியப் படகுகளும், மருத்துவர்களும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தால் இரு நாடுகள் இடையே ஒரு புதிய தொடர்பு ஏற்பட்டிருக்கும். அமைதியான பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையினைத் தீர்க்க ஒரு புதிய வழி தோன்றியிருக்கக் கூடும். இந்த இறுதி வாய்ப்பினை இலங்கை அரசு பயன்படுத்தி விவேகத்துடன் மக்கள் வசிக்கும் பகுதிகளை தவிர்த்து தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளையே தாக்க வேண்டும் என்று ஒரு நியதி உண்டு. யாழ் பகுதியில் எவ்வித தொழிற்சாலையும் இல்லை. தன் மக்கள் மீதே இலங்கை அரசு போர்த் தொடுத்து கொன்று குவித்து வருகிறது என்பதே அங்குள்ள நிலவரமாகும். இதனை உலக சமுதாயும் குறிப்பாக இந்தியா அனுமதிக்க முடியுமா?

ராணுவ நடவடிக்கை மூலம் இலங்கை, தமிழர் பிரச்சினையினைத் தீர்க்க முடியாது. "எகானமிஸ்ட்" பத்திரிகை கூறுவது போல இந்திய ஆட்சேபங்களை புறக்கணித்து, (யாழ்) தீபகற்பத்தினை தாக்குவதன் மூலம் ஸ்ரீலங்கா அரசு கடுமையாக நடந்து கொண்டு தன் மக்களுக்கு (சிங்களர்) மகிழ்ச்சியளிப்பதாக தோன்றக்கூடும். ஆனால் யாழ்ப்பாணத்தினை மீண்டும் கைப்பற்றினால் என்னவாகும் என்று அவர்களில் (இலங்கை அரசில்) சிலர் கேட்கிறார்கள். இந்த ஆண்டு துவக்கத்தில் "8,50,000 தமிழர்கள் கொண்ட பகைமையான ஜனத்தொகையுடன் நாம் என்ன செய்வது" என்று இலங்கை பந்தோபஸ்து மந்திரி திரு. அதுலத்முதலி கேட்டிருக்கிறார். அப்போது அவர் கூறியதனை அவரும், அதிபர் திரு. ஜெயவர்த்தனவும், போர் வெறிபிடித்த மற்ற சிங்களரும் இப்பொழுது எண்ணிப் பார்ப்பது நல்லது.

*குறிப்பு: விமானம் மூலம் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்படுவதாகச் செய்தி வருவதற்கு முன்பு - வியாழன் காலை இந்தத் தலையங்கம் எழுதப்பட்டது.*

# சீன துருப்புகள் குவிப்பு

நியூயார்க், ஜூன் 3--

இந்திய எல்லையில் சீனா படைகளைக் குவித்து வருவதாக அமெரிக்க ஏடான நியூயார்க் டைம்ஸ் எழுதியுள்ளது.

இந்தியாவின் வடக்கேயுள்ள திபெத் பகுதியில் ஆயிரக் கணக்கான துருப்புகளையும், ஆயுதங்களையும் சீனா குவிப்பதாக அது கூறுகிறது.

அதிக மக்கள் நடமாட்டமில்லாத மலைப் பகுதிகளில் இந்த துருப்புகள் முகாமிட்டுள்ளதாகவும், மிகப் பெரிய மருத்துவமனை ஒன்று காலி செய்யப்பட்டுள்ளதாகவும் திபெத் விமான நிலையமும் வர்த்தக விமானங்கள் செல்லாதபடி மூடப்பட்டு விட்டதாகவும் அந்தச் செய்தி மேலும் கூறுகிறது.

1950ம் ஆண்டு திபெத்தை சீனா கைப்பற்றிய போது இருந்ததை விடவும் அதிகமான அளவில் துருப்புகள் குவிக்கப்படுகின்றன என்று திபெத்வாசி ஒருவர் கூறியதாக அந்தச் செய்தி மேலும் கூறுகிறது.

# வங்கதேசத்திற்கு பிரான்ஸ் கடனுதவி

டாக்கா, ஜூன் 4—

வங்கதேசத்திற்கு பொருளாதார உதவியாக, பிரான்ஸ், ரூபாய் 61.10 கோடி வழங்கவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் செவ்வாயன்று கையெழுத்தானது.

35 சதவிகித மானியத்துடனை இந்தக் கடனுதவி வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என்று வங்கதேச நிதி அமைச்சக அதிகாரிகள் "அசோஸியேட்டட் பிரஸ்" செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தனர்.

# சென்னையில் புதிய ஸ்டேடியம்

சேலம், ஜூன் 2-

ரூ. 1.10 கோடி செலவில் சென்னையில்கட்டப்படவிருக்கும் புதிய இண்டோர் ஸ்டேடியத்திற்கு மான்ய உதவியாக மத்திய அரசும், தமிழ் நாடு அரசும் கூட்டாக ரூ.40 லட்சம் ஒதுக்கியுள்ளது.

# விண்மீன் அரங்கம்

சென்னை, ஜூன் 7

சென்னை கோட்டூரில் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மைய வளாகத்தில் சுமார் 2 கோடி செலவில் 'விண்மீன் அரங்கம்' (பிளானட்டோரியம்) அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு

# மேலும் ரூ. 4 கோடி முதல்வர் வழங்கினார்

சென்னை, ஜுன் 3— இலங்கையில் உள்ள தமிழர்களின் இன்னல்களைத் துடைக்க நிவாரண நிதியாக மேலும் 4 கோடி ரூபாயை தமிழக முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் அளித்துள்ளார். இத்தகவலை மாநில அரசின் செய்திப் பிரிவு ஒரு குறிப்பில் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்க இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி உருவாக்கி வரும் நிவாரண நிதிக்கு தமிழக அரசின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் ரூ. 4 கோடி அளிக்கப்படுவதாக முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் புதனன்று அறிவித்துள்ளார்.

ஏற்கனவே தமிழக மக்களின் சார்பில் 4 கோடி ரூபாய் இலங்கை வாழ் தமிழர் மறுவாழ்வு அமைப்புகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### ஈரோஸ் வரவேற்பு

விமானங்கள் மூலம் உணவுப் பொருட்களை இந்திய அரசு விநியோகிப்பதற்கு ஈழப் புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) பிரமுகர் வி. பாலகுமார் நன்றி தெரிவித்துள்ளார்.

வியாழனன்று மாலை விடுத்துள்ள ஒரு அறிக்கையில், "இரண்டரை வருட காலமாக கிழக்கு மாகாணங்களில் அகதிகளாக முகாம்களில் வசித்து வரும் மக்களுக்கு இதுபோன்ற நிவாரண உதவிகளை இந்திய அரசு விஸ்தரிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

கலந்து கொண்டதாக அவர் கூறினார்.

### கர்நாடகம் ரூ. 50 லட்சம்

பெங்களூர், ஜுன் 3— இலங்கையில் சொல்லொணாத் துயர்களுக்காளாகிவரும் தமிழர்களுக்கு மனிதாபிமான முறையில் உதவி அளிக்கும் பணிக்கு கர்நாடக அரசு ரூ. 50 லட்சம் அளித்துள்ளது.

அதிகாரப்பூர்வ அறிக்கை ஒன்று இத்தகவலை தெரிவிக்கின்றது.

### உர ஆலை நன்கொடை

புதுடில்லி, ஜுன் 3— யாழ்ப்பாண தீபகற்பத்தில் கடுமையான இன்னல்களைச் சந்தித்து வரும் தமிழர்களுக்கு உதவ கூட்டுறவு துறையில் உள்ள உர நிறுவனம் ஒன்று ரூ. ஒரு லட்சம் தருவதாக புதனன்று அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண தமிழர்களுக்கு உதவுவதற்காக மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்காக இந்தத் தொகை பிரதமரின் நிவாரண நிதியில் சேர்க்கப்படும் என்று கோ[illegible] என்ற அமைப்பின் தலைவர் [illegible] தெரிவித்தார்.

**'இந்தியாவை சுற்றி வளைக்க சதி நடக்கிறது. ஆனால் எந்த மிரட்டலுக்கும் இந்தியா பயப்படாது சவாலை சந்திக்கும் என்று பிரதமர் ராஜீவ்காந்தி திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**

## பஞ்சாபில் ஹிந்து சிவசேனை தலைவர் உட்பட 7 பேர் சுட்டுக் கொலை

ஹோஷியார்பூர், ஜுன் 4— ஹோஷியார்பூரில், பஞ்சாப் ஹிந்து சிவசேனை துணைத் தலைவர் கிரிஷன் மஹாஜனை பயங்கரவாதிகள் வியாழனன்று காலை சுட்டுக் கொன்றனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு பதட்டம் நிலவுவதாக தகவல் கிடைத்துள்ளது. போலீஸ் படையின் 4 பிரிவுகள் ஹோஷியார்பூரில் நிறுத்தப்பட்டுள்ளன.

அமிர்தசரஸ் மாவட்டத்தில் வெவ்வேறு சம்பவங்களில் 6 பேரை வியாழனன்று பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

நகரின் மையப் பகுதியில் உள்ள தூரி ரயில்வே கிராஸிங் அருகே மகாஜன், தனது பாதுகாவலர் ஒருவருடன் சென்று கொண்டிருந்தபோது பயங்கரவாதிகளால் சுடப்பட்டார் என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட மகாஜன், அங்கு உயிரிழந்தார். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த அவரது பாதுகாவலரின் உடல்நிலை பற்றி உடனடித் தகவல் கிடைக்கவில்லை.

மகாஜனைக் கொலை செய்ய இதற்கு முன்பு இரண்டு முயற்சிகள் நடந்தன.

மகாஜன் கொலை செய்யப்பட்டவுடன் வன்முறைக்கு அஞ்சி சில பகுதிகளில் கடைகள் மூடப்பட்டன.

இலங்கைக்கு நிவாரண சப்ளைகளை ஏற்றிச் செல்லும் இந்திய படகுகளில் செஞ்சிலுவை சின்னத்தைப பயன்படுத்துவது குறித்து செஞ்சிலுவை சங்கத்துக்கான சுவிஸ் சர்வதேச கமிட்டி அதிகாரி ஒருவர் "அபாக்க கவலை"

www.tamilarangam.net



## யாழ் பகுதி மீது எரிபொருள் தடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 4— யாழ்ப்பாணம் பகுதி மீது கடந்த 5 மாதமாக பொருளாதாரத் தடையின் ஒரு பகுதியாக இலங்கை அரசு அமலாக்கியிருந்த எரிபொருள் தடை நீக்கப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி வியாழனன்று அறிவித்தது. அவசியப் பண்டங்களை இந்திய விமானங்கள் சப்ளை செய்ததை யடுத்து இந்த அறிவிப்பு வெளியாகின்றது.

✱ ✱ ✱ ✱ ✱ ✱

✱✱ திராவிட மொழிகளை 23-க்கும் மேலாக பிரிக்கலாமாம். தென் திராவிட மொழிகளாக தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கோரகா; நடுதிராவிட மொழிகளாக தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பார்ஜி, கதபா, கொண்டா, நாயகி, பெங்கோ, மண்டா; வட திராவிட மொழிகளாக குருக், மால்தோ, பிராகூய என பிரிக்கலாம் என்று மொழியியலார் கூறுகின்றனர்.

✱ ✱ ✱ ✱ ✱ ✱

லோகசபையில் புகார்

## என்.டி.ஆர். உருவம் பொறித்த ரூ. நோட்டுக்கள்

புதுடில்லி, ஏப். 28— ஆந்திர முதல்வர் என்.டி. ராமாராவின் உருவம் பொறிக்கப்பட்ட ரூபாய் நோட்டுக்களை தெலுங்கு தேசம் கட்சி புழக்கத்தில் விட்டதாக கூறப்படுவது பற்றி தாம் விசாரிப்பதாக மத்திய நிதித் துறை துணை அமைச்சர் பிரம்மதத் இன்று லோக சபையில் உறுதி கூறினார்.

நிதித் துறை மசோதாவுக்கான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய இ.காங்கிரஸ் உறுப்பினர் பன்வாரிலால் புரோஹித் இதுபற்றி கூறுகையில் ரூ.3 கோடி அளவுக்கு என்.டி. ராமாராவின் உருவம் பொறிக்கப்பட்ட ரூபாய் நோட்டுக்களை தெலுங்கு தேசம் கட்சி அச்சடித்து புழக்கத்தில் விட்டுள்ளதாகக் கூறினார். இது அரசியல் சட்ட விதிமுறைகளுக்கு எதிரானது. இதில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிய புரோஹித் அந்த ரூபாய் நோட்டின் புகைப்படப் பிரதியையும் சபையில் காண்பித்தார்.'

## மோசடியிலீடுபட்ட சோவியத் பிரதியமைச்சருக்கு சிறை!

மாஸ்கோ.

கார்களையும் கட்டிடங்களையும் சட்டவிரோதமாக விற்றமை, அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்தமை ஆகிய மோசடிகளில் சம்பந்தப்பட்டமைக்காக சோவியத் உதவி அமைச்சர் ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாரென உத்தியோகபூர்வ சஞ்சிகையான ஒகொங்யொக் தெரிவித்துள்ளது.

பிரதி விவசாய இயந்திர அமைச்சரான விக்டா விஷ்ன் யாம்கோலே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவராவார்.

தமது குற்றங்களை விளக்கும்முகமாக சோவியத் சட்டமா அதிபருக்கு சிறையிலிருந்து மேற்படி அமைச்சர் 15பக்கங்கள்கொண்ட கடிதமொன்றை அனுப்பி வைத்திருப்பதாக ஒகொங்யொக் அதன பிந்திய பதிப்பில் தெரிவித்திருக்கின்றது.

முன்னணி மாணவனாக இருந்து கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டத்தில் அங்கம்பெற்ற அப்பிரதியமைச்சர், தான் ஏன் மேற்படி குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டார் என்பதை தனது கடிதத்தில் விளக்கமுடியாமல் போய்விட்டது. அவர் எப்போது சிறையில் அடைக்கப்பட்டார்? எவ்வளவுகாலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது? என்பதை சஞ்சிகை தெரிவிக்கவில்லை.

மாஸ்கோவில் பிரதியமைச்சராகப் பதவியுயர்த்தப்பட்டபின்னர் மோசடிச்செயல்களில் தன்னுடன் தொடர்புடைய பேர்வழிகளையும் மாஸ்கோவிற்கு இடம்மாற்றி, மேற்படி கைங்கரியங்களை அவர் ...து.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்னை வந்த மத்திய உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ப. சிதம்பரம் நிருபர்கள் கூட்டத்தில் பேசினார். பேட்டியும் அளித்தார். அவரது பேச்சும் பத்திரிகைகளில் வந்தது.

ஆனால் வேறு சில கருத்துக்களை அவர் நிருபர்களிடையே பேசி இருக்கிறார். இதைப் பத்திரிகையில் போட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

அது என்ன?

"அரசியலில் ஈடுபடுகிற்வர்களை அரசியல்வாதிகளாகத்தான் பார்க்க வேண்டுமே தவிர அவர்களின் நட்சத்திர மதிப்பைப்(ஸ்டார்வேல்யூ) பார்க்கச் கூடாது. அரசியல்வாதி நாளை பதவி இறங்கி விட்டாலும் அவரை அரசியல் வாதியாகத்தான் மக்கள் கருத வேண்டும். நட்சத்திர அந்தஸ்தில் பார்க்கக் கூடாது" என்பது அவரது பேச்சு.

நட்சத்திரம் என்று சிதம்பரம் குறிப்பிட்டது யாரை?

சினிமா நட்சத்திரமாக இருந்த எம்.ஜி.ஆரையா? என்.டி.ஆரையா?.

அது சிதம்பர ரகசியம்.

●

சென்னையில் பிடிப்பட்ட கடத்தல் பொருட்கள் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவருக்கு சொந்தமாம். பத்தாயிரம் ரூபாய் சந்தன மரங்களும் 3 லட்சரூபாய் போதைப் பொருட்களும் சிக்கியதால் அந்த எம்.எல்.ஏ. மிகவும் அதிர்ந்து போய் இருக்கிறாராம்.

எப்படி இவ்வளவு பொருள் சிக்கியது!என்று கேட்டால் முன்னாள் அமைச்சர் ஒருவரின் பெயரைச் சொல்கிறாராம்.

●

தமிழக ஜனதாக் கட்சித் தலைவர் இரா. செழியனுக்கு எதிராக கையெழுத்து வேட்டை நடக்கிறது. விஜயராகவன்–இஸ்மாயில்–நெல்லை ஜெபமணி ஆகியோர் இதற்குத் தலைமை வகிக்கிறார்கள். கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தை உடனே கூட்ட வேண்டும் என்பது இவர்களின் முதல் கோரிக்கை. எந்தத் தேர்தலிலும் தி.மு.க, அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளுடனும் உடன்பாடு வைத்துக் கொள்ளக் கூடாது என்பது மற்றொரு கோரிக்கை. மொத்தம் உள்ள 234 பொதுக்குழு உறுப்பினர்களில் 87 பேர் இதற்கு ஆதரவாக கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். என்னதான் முயற்சித்தாலும் செழியனை ஒன்றும் செய்ய முடியாது. அவரது தலைமைக்கு கட்சியில் அமோக ஆதரவு இருக்கிறது என்று கூறுகிறார் அவருடைய ஆதரவாளர் ஒருவர்.

●

சட்டஎரிப்புப் போராட்டத்தில் கைதாகி சென்னை மத்தியச் சிறையில் இருக்கும் கலைஞர் கருணாநிதி உற்சாகமாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறார். முதல்வர் எதிர்பார்த்ததைப் போல தி.மு.க, வளர்ச்சியும் தடைப்படவில்லை.

●

பார்க்க அணி அணியாக வருகின்றனர். அறிஞர் அண்ணாவின் மூத்த மருமகள் சரோஜாபரிமளம் சிறைக்குச் சென்று கலைஞர் கருணாநிதியைப் பார்த்தார். இருவரும் நலம் விசாரித்துக் கொண்டனர். அண்ணாவின் குடும்பம் தனக்கு ஆதரவாக இருக்கிறது என்பதில் தி.மு.க. தலைவருக்கு மட்டிலா மகிழ்ச்சி.

●

திடீரென்று ஒரு நாள் அமைச்சர் கே.ஏ.கே.வின் சகோதரர் செல்வராஜ் அவின்யூ சாலையில் உள்ள அறிஞர் அண்ணாவின் வீட்டுக்குப் போன் செய்தார். மறுமுனையில் போனை எடுத்தவர் டாக்டர் பரிமளம். அண்ணனும் (கே.ஏ.கே) டாக்டர் ஹண்டேவும் அண்ணியைச் (ராணி அம்மையார்) சந்தித்து அறிக்கை விடச் சொன்னதாக ஒரு வாரப் பத்திரிகையில் செய்தி வந்ததே பார்த்தீர்களா? என்று கேட்டார் செல்வராஜ். ஆமாம் என்றார் பரிமளம். பார்க்கவில்லை என்று ஒரு மறுப்பு அறிக்கை விடுவதுதானே?என்று கேட்டார் செல்வராஜ். தேவையில்லை. இதை ஏன் பெரிது படுத்த வேண்டும் என்று கூறி விட்டார் பரிமளம். இந்த விவகாரத்தை கருணாநிதியிடம் சொல்லி தேவை என்றால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அ.தி.மு.க. மந்திரிகளில் ஒரு ராஜ தந்திரி உண்டு என்றால் அது பொன்னை யன் தான்.



புயல் அடித்தால் முயல் போல் ஒளிந்து கொள்வார்; வெள்ளம் வந்தால் நாணல் போல் வளைந்து கொடுப்பார்; இடிச் சத்தம் கேட்பதற்கு முன்பே காதைப் பொத்திக் கொள்வார்; மின்னல் வரு வதற்கு முன் தூங்கி விடுவார்.

அமைச்சரவையில் குலுக்கல் – கலைத் தல் – கலக்கல் என்று எது வந்தாலும் அந்த வலைகளில் மாட்டாத மீன் இது.

இத்தனைக்கும் "நடவடிக்கை" எடுக்க முடியாத "திருவாளர் தூய்மை நாதனா?" – என்றால் அதுவும் இல்லை. அனைத்துப் 'பணிகளும்' உண்டு; ஆனால் 'பலி' மட்டும் ஆக மாட்டார்.

இவர் திராவிடப் பாரம்பரியத்தின் நீண்ட நாள் தலைவரா? தொண்டரா? எதுவும் இல்லை.

1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத் தில் மாணவர்கள் ஈடுபட்டபோது 'இந்த மாணவர்' எட்டி நின்று பார்த்து ஆதரவு தந்தவர்.

1972-ல் எம்.ஜி.ஆர். வகை தொகை தெரியாமல் தி.மு.க. மீது ஊழல் குற்றச் சாட்டுகளைக் கூறி மாட்டிக் கொண்டார். அப்போது தான் பொன்னையன் மூளை வேலை செய்தது. வழக்கறிஞர் அணி ஒன்றை அப்போது உருவாக்கினார்.

சில திறமையாளர்களும் அதில் சேர்ந் தனர். ஞாயிற்றுக் கிழமை வக்கீல்கள் சிலரும் சேர்ந்தனர். தேசிய முகாம்களிலும் – திராவிட முகாம்களிலும் வாய்ப்பு (சான்ஸ்) கிடைக்காத அளவு மீறிய அறிஞர்கள் (பி.எச். பாண்டியன் போன்ற வர்கள்) அந்த அணியில் சேர முன் வந் தனர். இவர்களை எல்லாம் காட்டி – பொன்னையன் எம்.ஜி.ஆரிடம் நல்ல பெயர் வாங்கிக் கொண்டார்.

கட்சி வக்கீல் – சினிமா கம்பெனி வக்கீல் – எம்.ஜி.ஆர் வீட்டு வக்கீல் என்று தன்னை மிக நெருக்கமாக்கிக் கொண்டார். அ.தி.மு.க. தலைமைக் கழகத்தில் உட் கார்ந்து அனைவருக்கும் இங்கிதமாய்ப் பதில் சொல்வார். எம்.ஜி.ஆரிடம் பேசும் போதெல்லாம் ராஜதந்திர "குறுக்கு வழி" களையே இவர் சொல்வதால் இவருக்கு அந்தக் காலத்தில் குறுக்கு வழிப் பொன் னையன் என்றே பெயர்.

அ.தி.மு.க. 1977 தேர்தலில் நின்ற போது இவரும் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி...

...தெடுப்பார்கள். அவரே முதல் அமைச்சர் ஆவார். இது நடைமுறை.

பொன்னையனும் வேறு சிலரும் கொடுத்த அழகான குறுக்கு வழி யோசனை; 'கூட்டம் எல்லாம் எதற்கு? எம்.ஜி.ஆர். தான் தலைவர் என்று எழுதிக் கையெழுத்து வாங்கி விடுவோம்' என்றார் கள். அதன்படியே கூட்டம் நடந்ததாக வும் அதில் எம்.ஜி.ஆர். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக எழுதியவரும் இவரே! எம்.எல்.ஏக்களிடம் கையெழுத்து வாங்கியவரும் இவரே! இவரும் அமைச் சர் ஆனார்.

இரண்டரை ஆண்டுகளில் ஆட்சி கலைக்கப்பட்டது. பொன்னையன் திருச் செங்கோடு தேர்தலில் மீண்டும் நின்றார். அப்போதுதான் அவருக்கு பெரிய நெருக் கடி ஏற்பட்டது.

கவுண்டர் வகுப்பைச் சார்ந்தவர் என்று தன்னை இவர் கூறிக் கொண் டாலும் அந்தத் தொகுதியில் உள்ளவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். முற் போக்கான முறையில் இவரும், இவரது குடும்பத்தாரும் முதலியார் வகுப்பில் 'சம்பந்தம்' வைத்துக் கொண்டதால் இவரை "அரைக்கவுண்டர்" என்று கேலி செய்வார்கள். கேலி என்பது வளர்ந்து தேர்தல் நேரத்தில் எதிர்ப்பாகவே போய் விட்டது.

கவுண்டர்கள் வகுப்பு ஓட்டுக்களைப் பெற இவர் வழக்கம் போல் ஒரு குறுக்கு வேலை செய்தார். வேட்டுவக் கவுண்டர் கள் என்ற வகுப்பைத் தன் பக்கம் இழுத் துக் கொண்டார். அந்த வகுப்புத் தலை வருக்கு எம்.ஜி.ஆரிடம் கூறி "எம்.எல்.சி." பதவியும் வாங்கித் தந்தார்.

தன்னைக் கவுண்டர்களின் வகுப்பு ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் கொங்கு வேளாளர் மாநாட்டில் அக் கறை காட்டுவார்; எம்.ஜி.ஆர். ஒரு கொங்கு வேளிரே! (கவுண்டரே) என்று கட்டுரை எழுதத் தூண்டுவார்.

"எம்.ஜி.ஆர். செந்தமிழ் வேளிர்" என்ற புத்தகம் எழுத புலவர் ராக என்ப வருக்கு ஊக்கம் அளித்து கேரளா வரை சென்று ஆதாரம் சேகரிக்கப் பொருள் உதவி செய்து – புத்தகத்தை வெளியிடவும் செய்தார்.

1986 ஆம் ஆண்டு அச்சிட்ட அந்தப் புத்தகத்தில் 1985-ஆம் ஆண்டு என்று போடச் சொல்லி – நூலகங்களில் அந்தப் புத்தகத்தைக் கொண்டு போய்ச் சேர்த்தார் என்ற ஒரு பலவீனமான குற்றச்சாட்டு இவர் மீது உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களில் குறைந்துக் கொள்ள முயற்சி செய்தார். ஆனால் நாளாக நாளாக எதிரிகள் வளர்ந்து கொண்டு தான் இருக்கின்றனர்.

* சேலம் கண்ணன் எம்.பியைப் பகைத்துக் கொண்டார். பிறகு சமரசம் செய்து கொண்டார்:
* சேலம் ராஜாராமைப் பகைத்தார்; பிறகு சமரசம்.
* பிடிக்காத கட்சிக்காரர்களைச் சமயம் பார்த்துக் கட்டம் கட்டிக் கட்சியை விட்டு வெளியேற்றுவார்.
* இவரை எதிர்த்த தனது கட்சிக்காரர் ஒருவரை வாழைக்காய் லாரியை விட்டு மோதச் செய்தார் என்று அபாண்டமாக இவரது அரசியல் எதிரிகள் குற்றம் சாட்டுவர்.

இவருக்குக் காரியம் ஆக வேண்டும் என்றால் குழைவார்; குளிர்ச்சிப் பேச்சு பேசுவார். கூடவே உட்கார வைத்துக் கொள்வார்! காரியம் முடிந்ததும் பொத் என்று போட்டுவிடுவார்; திரும்பிக் கூட பார்க்க மாட்டார்.

வக்கீலுக்கு படித்திருந்தும் "அடி; உதை" என்று கூறுகின்ற வேடிக்கை நெஞ்சம் இவருக்கு உண்டு என்பதை பழனிபாபா என்பவர் ஒரு முறை அம்பலப்படுத்தினார்.

எதிர்கட்சியின் போராட்டம் நடந்த போது போலீசை விட்டு நன்றாக உதைக்கச் சொல்லியிருக்கிறேன் என்று பழனி பாபாவிடம் தொலைபேசியில் பேசினார். அதை பழனிபாபா பதிவு நாடாவில் பதிவு செய்து கொண்டார். பிறகு... ஊர் முழுவதும் அந்தப் பதிவு நாடா போட்டுக் காட்டப்பட்டது.

மிசாக் காலத்தில் சென்னைச் சிறையில் எதிர்க்கட்சியினர் மிருகத்தனமாக அடிக்கப்பட்டனர் என்று கேள்விப்பட்டு வருந்தாத அரசியல்வாதியே இல்லை. எம்.ஜி.ஆர். கூட அதைக் கேட்டு 'ச்சு... ச்சு' என்றார்.

ஆனால் எதிர்கட்சியினர் அடிபட்டதில் துயரம் அடையாத ஒரு மகாத்மா உண்டு என்றால் அது பொன்னையன் தான். அந்த சிறை நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்த அதிகாரிகள 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டார்கள். இந்த மகாத்மாதான் அவர்களைப் பதவியில் அமர்த்தி – பதவி உயர்வும் தந்திருக்கிறது. இதுவும் இவருடைய அழகான நெஞ்சத்தின் எடுத்துக் காட்டு ஆகும்.

முன்பொருமுறை மந்திரிகள் மீது மிகப் பெரிய குற்றச்சாட்டுகள் கிளம்பின. அப்போது எம்.ஜி.ஆர். — மோகன்தாசை விட்டு மந்திரிகள் சொத்து பற்றி ரகசியக் கணக்கெடுப்பு எடுக்கச் சொன்னார். அந்தக் கணக்கைப் பார்த்து எம்.ஜி.ஆர். அதிர்ச்சி அடைந்தார். மந்திரிகளிலேயே கோடீஸ்வரர் பொன்னையன் என்று அந்தக் கணக்கெடுப்பு கூறியதாக சேலம் மாவட்டத்துப் பொறுப்பாளர்களே கூறுவார்கள்.

அப்போதே பொன்னையன் விலக்கப்படுவார் என்ற பேச்சு அடிபட்டது. ஆனால் தனது ராஜ தந்திர முறைகளால் எம்.ஜி.ஆரைப்பல்வேறு பிரச்சினைகளில் திசை திருப்பி பதவி விலக்கல் என்ற தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

ஜெயலலிதா எதிர்ப்பாளர் தான் இவர். ஆனால் அந்த எதிர்ப்பில் தனது பெயர் வராதபடி பார்த்துக் கொண்டார். பின்னாலிருந்து அனைத்தையும் செய்து முடித்து கடைசியில் ஒரு சிரிப்பு சிரிப்பவர் இவர். மாயக்காரக் கண்ணன் என்று இவரை ஆதரிப்பவர்கள் கூறுவார்கள்.

இந்தச் சாதுர்யமான நடவடிக்கை ஜெயலலிதாவுக்குப் பிடிக்காது. அவர் "வெட்டு ஒன்று; துண்டு இரண்டு" என்பவர். அதனால் கோபம் அடைந்தார். 1985 தேர்தலில் பொன்னையன் தொகுதியிலேயே — பொதுக் கூட்டத்திலேயே அதை வெளியே கொட்டித் தீர்த்தார்.

ஜெயலலிதா ஆதரவாளர் சேலம் கண்ணன் எம்.பியை ஏழை என்று கூறி — பொன்னையனைக் கோடீஸ்வரர் என்றும் குற்றம் சாட்டினார்.

ஆனால் பொன்னையன் இதற்குப் பதில் கூறவே இல்லை. சில நாட்கள் கழித்து "ஜெயலலிதா கை" ஓங்கியவுடன் — அவரே பவ்யமாக ஜெயலலிதா முன் நடந்து கொண்டார்.

இந்தப் பவ்யம் — அடக்கம் — அமைதி எல்லாம் பொன்னையன் என்ற புலி பதுங்குகிறது என்பதற்கு அடையாளம்!

இந்தப் புலி சமயம் நேருகிற போது யார் மீதும் பாயும்! எம்.ஜி.ஆருக்குப் பிறகு... முதலமைச்சர் பதவிக்கு அந்தக் காலத்துக் காமராசர் பாணியைக் (பேச்சு இல்லாமல் காரியம் செய்து) கடைப் பிடித்து பொன்னையன் வந்தாலும் வியப்படைவதற்கு இல்லை.

லாபத்தினல் ஒருவன் பணக்காரனுக ஆவதில்லை, சேமிப்பதினுல்தான். —பின்லாந்து

உதட்டினுல் மட்டும் செய்யப்படும் பிரார்த்தனை பிரார்த்தனையல்ல. —ஆப்ரிக்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






SALON DE COIFFURE

# ASIAN SALOON

## ஏசியன் சிகை அலங்கார நிலையம்

பாரீஸ் மாநகரில் புதிதாக நிறுவப்பட்டுள்ளது

3, Passage Duhesme 75018 PARIS

☎ 42.51.52.21

***• We make fine and latest Eastern, Western style hair dressings And hair colour dyeing***




*M° :*
*Porte de Clignancourt ou Simplon*

ALL DAYS EXCEPT THURSDAY

குறிப்பு: முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**CABRI** MÔT CỮA HÀNG RẤT TÍN NHIÊM
TỪ LÂU VỀ THỊT BÒ, GÀ, DÊ VÀ DỒ LÒNG
V.V. HALAL VỚI GÍA RẤT RE QÚY VỊ CO THỂ
TIN CẬY DƯỢC.

NẾU QÚY VỊ MÚÔN MUA SĨ, BAN NÊN
DẶT TRƯỚC VÀO NGAY THỨ BA.

SAU DÂY LÀ DIA.CHỈ:

**SOCIETE CABRI**

உங்களுக்குத் தேவையான ஹலாலான
ஆடு, மாடு, கோழி, வான் கோழி இறைச்சி,
குடல், ஈரல் போன்றவைகள்
சுத்தமான முறையில், குறைந்த விலையில்
கிடைக்கும் இடம்.

சில்லறை, மற்றும் மொத்த வியாபாரமும் உண்டு.
முகவரி:

195, Rue du Faubourg Saint Denis, 75010 PARIS
(Metro: GARE DU NORD)

TEL (1)42 39 27 11


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# PARIS TAMILS EDUCTION CENTRE

## பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

(பிரஞ்சு அரசின் அங்கீகாரம் பெற்றது)

சனி, ஞாயிறு கிழமைகளில் பி.ப.2 மணி முதல் இரவு 10 மணிவரை பிரஞ்சு, ஆங்கில வகுப்புக்கள் (தமிழ் மொழிமூலம்) சிறுவர்களுக்கான தமிழ் வகுப்புக்கள்.

பட்டதாரி தமிழ் ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.

| பி.ப 2 மணி தொடக்கம் மாலை 6 மணி | மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி |
|---|---|
| M.J.C (2 மாடி)<br>43, RUE BORREGO,<br>75020 - PARIS.<br>Mº: TELEGRAPHE. | C.L.J.T (1வது மண்டபம்)<br>165, RUE DE CHARONNE,<br>75011 - PARIS.<br>Mº: CHARONNE/ALEX. DUMAS. |

**43, RUE BORREGO**




4-7.87 முதல்

4வது வகுப்பு

**165, RUE DE CHARONNE**



www.tamilarangam.net

# PATISSERIES

Spécialités Pakistanaises, Indiennes et de Toute l'ASIE

## GATEAUX SUCRÉS – SALÉS

Pour Vos Fêtes, Mariages, Baptêmes, Etc... VENEZ NOUS VOIR

## BHAI BHAI SWEETS

4, Rue des Deux Gares, 75010 PARIS – ☎ 42.08.24.31 métro Gare du Nord et de l'Est

RAS MALAI
RAS GULY
BALU SHAHI
MOTI CHOUR
MOTI PAK
MESSUR PAK
GULAB JAMAN



– இனிப்புப் பண்டங்கள் –

SHAKAR PARAY
JALAIBI
BESSAN
BARFI (PAL GOBA)
CHAM CHAM
SOHAN HALWA
KARACHI HALWA

இலங்கை, இந்திய, பாகிஸ்தானிய இனிப்புப் பண்டங்களும், கார உணவுகளும் உடனுக்குடன் தயாரிக்கப்பட்டு எங்களால் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றினை எந்நேரமும் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம். விசேட வைபவங்களுக்குத் தேவையான பண்டங்களை தேவையான போது உங்களுக்குத் தயாரித்தளிக்கப்படும்.

"பாய் பாய் சுவீற்ஸ்"

اللہ اکبر

## بھائی بھائی سویٹ

ہر قسم کی تازہ اور لذیذ میٹھی و نمکین مٹھائی ہر وقت تیار مل سکتی ہے نیز شادی بیاہ و ٹی پارٹیوں کیلئے خدمت کا موقع دیں۔ نوٹ: بازار میں بکنے والی تمام مٹھائی سے ہمارا کوئی تعلق نہیں۔ خریدتے وقت ہماری مہر دیکھ لیں۔ نقالوں سے بچیں۔

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைவருக்கும் எங்களின் உளம்கனிந்த

நல்வாழ்த்துக்கள்.

# நம்பிக்கை,

# நாணயம், கைராசி

இங்கு இலங்கை இந்திய தாய்லாந்து நாட்டு உப உணவுப் பொருட்களும் ஐரோப்பிய நாட்டு உபஉணவுப் பொருட்களும் தரமானதாகவும் நியாய விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட நேரத்தில் வீடுகளுக்குப் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்.

ஒருமுறை
விஜயம்
செய்யுங்கள்

# FRINCIA
# ALIMENTATION
# GENERALE

6 RUE DES PREVOYANTS
93120 LA COURNEUVE
TEL: 48 37 78 15.

M LA COURNEUVE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# OUR BEST WISHES




All Way's
GIVE'S
BEST QUALITY
FOUR YOUR HOME
ENTERTAINMENT

**J·S·J - VIDEO CLUB**

7, RUE JULES VERNE, PARIS - 75011.
☎ 47.00.48.45.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எங்களிடம் மலிவு விலையில் தரமான பொருள்கள் கிடைக்கும்.

- சகலவிதமான மளிகை சாமான்கள்
- இந்திய-ஆசிய கலைப் பொருட்கள்.
- தேங்காய், இஞ்சி, இந்தியக் காய் கறிகள்
- பத்திகள்

**நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்**
**மிகச் சிறந்த இடம்!**

வருகை தரும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

# ROSALIE

**15, RUE LAGRANGE , PARIS.5ème**

**Ⓜ METRO: MAUBERT MUTUALITE**



**இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!**

தேர்ச்சிபெற்ற சமையற்காரர்களைக்கொண்டு பசிக்காகவும், ருசிக்காகவும், சாப்பிடும் விதத்தில் நாவிற்கினிய கோழி, இறைச்சி பிரியாணிகள் மணமும் சுவையும் உள்ளது. குணமிக்க கறி வகைகள் புரு, வாத்து, மீன் புராட்டா இன்னும் பல வகையான சிந்தை மகிழும் சிறந்த உணவுகளுக்குச் சிறந்த இடம்

ஆர்டர் கொடுத்தால் உள்ளம் மகிழும் வகையில் அருமையாக அற்புதமாக சப்ளை செய்ய என்றென்றும் காத்திருப்பது.

**TEL: 43.66.94.10**

# RESTAURANT INDIEN

Ⓜ MENILMONTANT. 18, RUE DE MENILMONTANT.

PARIS. 75020.

www.tamilarangam.net


# இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!

பண்டிகைகள், திருமணம்.
விருந்து வைபவங்களுக்கான அழகிய பட்டுச் சேலைகள்,
ஜார்ஜெட், சிப்பான், சைனுசில்க், கம்ப்யூட்டர்
சுவீட்பியூட்டி குயின், பூனம், ரேவதி மற்றும் பலவகையான
சேலைத் தினுசுகளனைத்தும் விற்பனையிலிருக்கின்றன! வருகைதாருங்கள்!
மிகப்புதிய டிசைன்களில் அனைத்து ஜவுளிகளையும் குறைந்த விலையில் வாங்கிட
மிகச்சிறந்த இடம் என நீங்களே போற்றுவீர்கள்!

# BENGAL SAREE CENTRE

**197, rue du Faubourg Saint-Denis**
**75010 PARIS Téléph.42 06 92 66**
Métro : La Chapelle et Gare du Nord

R.C.S. Paris 84 B 12391

## வியாபாரிகளுக்கு தனிச்சலுகை உண்டு!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ☆ AJMEER Restaurant ☆

**4. AVENUE TRUDAINE**
**75009-PARIS**
Ⓜ ANVERS

TEL: 42 85 1935

- இன்முக வரவேற்பு !
- இதயங்கவர்ந்த உபசரிப்பு
- நாவிற்கினிய சுவை சிறப்பு
- நாளெல்லாம் அதுவே நினைப்பு

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸ் மாநகரத்தில்
தென்னிந்திய உணவு வகைகளுக்கு சிறந்த
இடமொன்றை நீங்கள் தேர்ந்தெடுத்திருந்தால்

## அஜ்மீர் ரெஸ்டாரண்ட்

உங்களை அன்புடன் வரவேற்கிறது

TEL: 42056705
Ⓜ CHATEAU-LONDON

**159, QUAI DE VALMY**
**75010-PARIS**

# ★ AJMEER RESTAURANT ★

● பிரான்சின் தலைநகரின் தலைசிறந்த உணவகம் ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




* இலங்கை, இந்திய, பிரான்ஸ் மளிகைப் பொருட்கள்

* பழவகை, காய்கறி உணவு வகைகள்

* மனங்கவரும் பல வண்ண சேலைகள்

* அலங்கார, நறுமணப் பொருட்கள் ஆகியவற்றை மலிவான விலையில் பெற நாட வேண்டிய இடம். A.N.T

* ஓடியோ, வீடியோ படப்பாடல்கள் பதிவு செய்ய

* அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்

நன்றி

102, RUE DE L'OUEST PARIS-75014

METRO: PERNETY DIR: CHATILLON

TEL: 45 42 60 78